# நிதி நிலை அறிக்கை

# 1993 - 94

மாண்புமிகு நிதி அமைச்சர்

## திரு. இரா. நெடுஞ்செழியன்

அவர்கள் ஆற்றிய உரை

மாசி 29, திருவள்ளுவர் ஆண்டு 2024

1993ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12ஆம் நாள்

**தமிழ்நாடு அரசு மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 1993-94 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவையில் வைத்து 1993 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 12 ஆம் நாள் அன்று ஆற்றும் உரை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

1992-93ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளையும், 1993-94 ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும், இந்தப் பேரவையின் மேலான ஒப்புதலைப் பெறும் பொருட்டுப் பேரவையின் ஆய்வுக்கு வைப்பதில், நான் பெருமிதமும் பெருமகிழ்ச்சியும் கொள்கிறேன்.

**" இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்துஇவ் உலகு "**

இனிய சொற்களைக் கூறி, வேண்டுவோர்க்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்து, அவர்களையெல்லாம் காப்பாற்ற வல்ல நாடாள்பவருக்கு, அவரது செல்வாக்காலேயே இவ்வுலகமானது, அவர் கருதுகின்ற அளவுக்கு, அவருக்கு மிகவும் கட்டுப்பட்டு நடக்கும் என்பது வள்ளுவப் பெருந்தகையார் வழங்கிய பொன்மொழியாகும்.

இத்தகைய நற்பண்புகளைக் கொண்டுதான், மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டில் நல்லாட்சி நடத்தி வருகிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த கொள்கை-குறிக்கோள்-சனநாயக நெறிமுறைகள் ஆகியவற்றைப் பின்பற்றி, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் நெறிப்படுத்திக் காட்டிய மனிதவள மேம்பாட்டுப் பணிகளை ஏற்று நடைமுறைப்படுத்தி வருவதில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கண்ணுங் கருத்துமாக இருந்து வருகிறார்கள்.

2. தமிழ்நாட்டில் அமைதி-சட்டம்-ஒழுங்கு-ஒற்றுமை ஆகியவற்றை நிலை நாட்டுவதிலும், அவற்றிற்கு எதிராக ஏற்பட்ட வன்முறை இடையூறுகளை அகற்றுவதிலும் சிறப்பான வெற்றி காணப்பட்டிருக்கிறது. இந்திய நாடு முழுவதிலும் ஆங்காங்கு வன்முறைகளும், கலவரங்களும், குழப்பங்களும் மிகுந்து காணப்படும் சூழ்நிலையில், தமிழகம், கலவரப் பாலைவனத்திடையே நிலவும் அமைதி-நல்லிணக்கப் பூஞ்சோலையாகத் திகழ்கிறது. தமிழக மக்கள், தாங்கள் அமைதியாக வாழ்கிறோம், தங்களுக்குத் தக்க பாதுகாப்பு இருக்கிறது, தங்கள் தங்கள் தொழில்களை ஆர்வத்தோடும், அக்கறையோடும் தொடர்ந்து நடத்திவரத் தக்க வாய்ப்பு அமைந்துள்ளது என்று எண்ணி மனநிறைவு கொள்ள முடிகிறது.

3. வகுப்புவாத-இனவெறிச் செயல்களின் காரணமாகப் பல மாநிலங்களில் வன்முறைச் செயல்கள் நடைபெற்றுப் பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டது என்றாலும், தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு-அமைதி முறையாகக் காக்கப்பட்டு வந்ததால், திட்டமிட்ட வளர்ச்சிப் பணிகள் சிறப்பாகவும்-செம்மையாகவும் நிறைவேறி வருகின்றன.

4. 1991 ஆம் ஆண்டு சூன் திங்கள் இந்த அரசு பதவியேற்றபோது, பொருளாதார அளவில் இந்திய நாட்டில் நிலவிய

நெருக்கடி நிலைமை பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இந்த அரசு எதிர்கொள்ள வேண்டி இருந்த பொருளாதார நெருக்கடியும் முன்பு எப்போதும் இருந்திராத வகையிலானதாகும். 1991-92 ஆம் ஆண்டில் இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சி வெறும் 1.2 சதவீதம் மட்டுமே . 1991-92 ஆம் ஆண்டு முடிவில் பண வீக்க வீதம் 13.6 சதவீதமாக இருந்தது. இந்தச் சூழ்நிலையில்தான் இவ்வரசு பதவி ஏற்றது. 1992-93 ஆம் ஆண்டில் நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 4 சதவீதத்தையும் விஞ்சும். பண வீக்க வீதம் ஏறத்தாழ 7 சதவீதமாகவுள்ளது. கடந்த ஓராண்டில், அரிசி, டீசல், சமையல் எரிவாயு, நிலக்கரி, இரும்பு, இரயில்வே பயணிக் கட்டணம்-சரக்குக் கட்டண வீதங்கள், இரசாயன உரங்கள் போன்ற பல்வேறு இனங்களில் மத்திய அரசு ஏற்படுத்திய விலை உயர்வு காரணமாக 1992 ஆம் ஆண்டு முழுவதிலும் பணவீக்க வீதம் தொடர்ந்து உயர்ந்த அளவிலேயே இருந்தது. இவ்வாறு தொடர்ச்சியாகப் பல பொருள்களின் நிர்ணய விலைகளில் செய்த உயர்வின் விளைவு, ஏழை, எளிய வசதி வாய்ப்பற்ற மக்களை மிகக் கடுமையாகப் பாதித்துள்ளது. பொருளாதார வளர்ச்சிக்குத் தூண்டுதல் அளிக்கவும், விதிமுறைகளை எளிதாக்கவும் நடைமுறைகளில் உள்ள கடுமையைத் தளர்த்தவும், இந்தியப் பொருளாதாரத்தை உலகப் பொருளாதாரத்துடன் ஒருங்கிணைக்கவும் மத்திய அரசு எடுக்கும் பொருளாதாரக் கொள்கைகளுக்கு நாங்கள் ஆதரவு அளிக்கின்ற அதே நேரத்தில், இக்கொள்கைகள் வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தில் உடனடியாக ஏற்படுத்துகின்ற பாதிப்பை எண்ணிக் கவலை அடைகிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாம் பேசுகின்ற தேசிய, மண்டல மன்றங்கள் ஒவ்வொன்றிலும், ஏழை மக்களைப் பாதிக்கக் கூடிய கொள்கைகளைச் செயற்படுத்துவதில் மத்திய அரசு நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்துள்ளார்கள். 1992 ஆம் ஆண்டு நவம்பரில் நடைபெற்ற தென் மண்டலக் குழுக் கூட்டத்தில், உணவு தானியங்களின் விற்பனை விலையை இனிமேலும் உயர்த்துவதற்கான முயற்சி எதுவும் மாநில அரசுக்குச்

சுமையைத் தாங்க இயலாததாக்கிவிடும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தார்கள்.

5. குறைந்தபட்சம் மேலும் சிறிது காலத்திற்காவது பண வீக்கச் சக்திகளுக்கு எதிராக ஏழைகளுக்குக் காப்பளிக்கும் பொருட்டு, வழங்கப்படுகின்ற உணவு உதவித் தொகை உயர்ந்த அளவில் தொடர்ந்து இருக்கச் செய்வது மத்திய அரசிற்கு இன்னும் பொருத்தமாக இருந்திருக்கும் என்பது மாநில அரசின் உறுதியான கருத்தாகும். நிதி ஆதாரங்கள் வலுவற்றுள்ளபோது, தொடர்ந்து அதிக அளவிலான உணவு உதவித் தொகைச் சுமையைத் தாங்குவது மாநிலங்கள் அளவில் மிகக் கடினமாகும். இப்போதுள்ள நிலவரப்படி, மத்திய அரசு செயற்படுத்தியுள்ள, அரிசி விலை ஏற்றத்தை முற்றிலுமாக நுகர்வோர் மீது நாம் சுமத்திவிடவில்லை. **இதன் விளைவாக, முன்னெப்போதும் இருந்திராத வகையில் ஆண்டொன்றுக்கு ரூ.400 கோடி அளவில் உணவு உதவித் தொகைச் சுமையைத் தாங்க நேரிட்டுள்ளது**. நாம் கொடுக்க வேண்டிய உணவு உதவித் தொகை நிலுவை ரூ.110 கோடியைச் சேர்த்து, 1993-94 ஆம் ஆண்டில், இந்த வகையில் நமது மொத்த ஒதுக்கீடு நம்மை மலைக்க வைக்கின்ற அளவிற்கு ரூ.510 கோடியாக உயர்ந்துள்ளது. பொது விநியோகத்தின் மூலம் வழங்கப்படும் அரிசியின் விலை தமிழகத்தில்தான் மிகவும் குறைந்த நிலையில் உள்ளது. மேலும், மற்றைய மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கையில், தமிழக அரசுதான் மிக அதிக அளவில் உணவு உதவித் தொகை வழங்கி வருகிறது. இப்பொழுது மத்திய அரசின் நிதி நிலைமை சற்றுச் சீரடைந்திருப்பதால், மத்திய அரசு ஏழைகளை மேலும் பாதிக்கின்ற வகையில் அமையும் விலையேற்ற நடவடிக்கைகளில் நிதானம் காட்டி, பொருளாதாரக் கட்டமைப்புச் சரிக்கட்டல் நடவடிக்கைகளால் ஏழைகள் மீது தாங்க முடியாத அளவிற்கு விழுந்துள்ள சுமையைக் குறைப்பதற்கான கொள்கைகளையும், திட்டங்களையும் இனி வகுக்கும் என்று நாம் நம்புகிறோம்.

6. "மத்தியிலே வலுவான கூட்டாட்சி; மாநிலத்திலே வளமான தன்னாட்சி" என்ற தத்துவத்திற்கேற்ப, நாட்டின் அரசாண்மையைக் கட்டிக் காப்பதற்குரிய அதிகாரங்கள் மத்திய அரசிடமும், மக்கள் முன்னேற்றத்திற்கும் நல்வாழ்விற்கும் உரிய அதிகாரங்கள் அனைத்தும் மாநில அரசுகளிடமும் அமைய, அரசியலமைப்புச் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதே, நாங்கள் எப்போதும் வலியுறுத்தி வந்துள்ள கொள்கையாகும். இந்த நிலையை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

7. இந்தச் சூழ்நிலையில் மத்திய, மாநில நிதி உறவுகளில் அண்மைக் காலத்தில் காணப்படும் சில போக்குகள் குறித்து நாங்கள் கவலை கொள்வதற்குக் காரணம் உள்ளது. முக்கியமாக, மாநிலங்களின் வரம்பிற்குள் வருகின்ற துறைகளில் மத்திய அரசு தானே முனைந்து ஆதிக்கம் செலுத்தும் பாங்கு வளர்ந்து வருவதை நான் குறிப்பிடுகிறேன். சமூகப் பாதுகாப்புத் திட்டமொன்றிற்காக உலக வங்கி 500 மில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்கியுள்ளது. எளியோர் நல ஒதுக்கீடுகளில் குறைவு ஏற்பட்டு அதனால் தோன்றியுள்ள வரவேற்கவியலாத போக்கினை மத்திய அரசு இதன் மூலம் திருத்திக் கொள்ள முடிந்தது. அதே சமயத்தில், மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களுக்கு இந்நிதி ஆதாரங்களை ஒதுக்கீடு செய்வதற்குப் பதிலாக, இவற்றை எல்லா மாநிலங்களுக்கும் நியாயமாக உரிய அளவில் பகிர்ந்தளிப்பது மிகப் பொருத்தமானதாக அமையும். மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் படிப்படியாக மாநில அரசுகளுக்கு மாற்றப்பட வேண்டும் என்று தேசிய வளர்ச்சிக்குழு ஏற்கெனவே, 1991 டிசம்பர் திங்களில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இந்தத் திட்டப் பணி நடவடிக்கைகளை மாநிலத் திட்டப் பணிகளின் மூலம் மேற்கொள்ள அனுமதித்து, மாநிலங்களுக்கு நேரடியாக வழங்கப்படும் இந்த நிதி ஆதாரங்களை அதிகரிப்பது மிகவும் பொருத்தமானதாக இருந்திருக்கக் கூடும். இவற்றை மத்திய அமைச்சகங்கள் மூலம் வழங்குவதில் தமிழ்நாடு போன்று சமூகத் துறைகளில் ஏற்கெனவே

சாதனைகளைப் புரிந்துள்ள மாநிலங்கள் இழப்பையே அடைந்துள்ளன என்பதையும் குறிப்பிட்டுக் காட்ட வேண்டியுள்ளது. கடந்த காலங்களில் இத்துறைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதைப் புறக்கணித்திருந்த மாநிலங்கள் தற்போது நேரடியாக வழங்கப்பெறும் கூடுதல் நிதி ஆதாரங்களைப் பெற்றதன்மூலம் பலனடைந்துள்ளன. ஆனால், அத்துறைகளில் சாதனைகளைப் புரிந்து தொடர் செலவுகளையும் தாங்களே ஏற்றுக்கொண்டு வருகிற மாநிலங்கள் தங்களது சொந்த நிதி ஆதாரங்களையே சார்ந்திருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. இது முற்றிலும் நியாயமல்ல. இந்தக் கூடுதல் நிதி ஆதாரங்களை மாநிலங்களுக்கிடையே ஒதுக்கீடு செய்வதில் தேசிய அளவில் கருத்தொற்றுமை காண வேண்டும் என்பதே நமது வேண்டுகோள்.

8. மேலும், அண்மைக்காலத்தில் மத்திய அரசின் நிதிநிலை மீதுதான் முழுக் கவனமும் செலுத்தப்பட்டு வந்துள்ளது. அதே வேளையில், மாநிலத்தின் இடர்ப்பாடான நிதி நிலைமை புறக்கணிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு பொருளாதாரக் கட்டமைப்பில் சரிக்கட்டல்களைச் செய்ய உலக வங்கியிடமிருந்து கடன்களும், பன்னாட்டு நிதியமைப்பிடமிருந்து **(IMF)** தனி நிதியும் பெற முடியும்; அதே சமயம் மாநில அரசுகளுக்கு அத்தகைய வசதிகள் எவையும் இல்லை. மாநிலத்தின் நிதி நிலையைச் சீரமைப்பது தொடர்பான குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் எவையும் செயற்படுத்தப்படவில்லை. குறிப்பாக, நிறுவன வரியைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாக சர்க்காரியா கமிஷன் அளித்த பரிந்துரையைக் குறிப்பிட நான் விரும்புகிறேன். மத்திய அரசு இந்தப் பிரச்சனையைக் குறித்து ஆய்வு செய்யுமாறு குறிப்பிடாததால், அடுத்தடுத்து வந்த நிதிக் குழுக்கள்யாவும் இதனை ஆய்வு செய்ய இயலவில்லை. பொருளாதாரக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட இந்த நிலையில் மாநில அரசுகள்தாம் புதிய முதலீட்டைச் செய்வதற்கு முனைப்பாக ஊக்கம் தர வேண்டும் என்று இப்போதும் மத்திய அரசு கருத்துத் தெரிவித்து வருகிறது. அடிப்படை வசதிகள், சுற்றுச்சூழல்

பாதுகாப்பு மற்றும் சமூக ஆதரவுப் பணிகள், ஏற்றுமதி நடவடிக்கைகளுக்கு ஆதரவு ஆகிய வகையில் முக்கியச் செலவுகளை மாநில அரசுகள் செய்யவேண்டியுள்ள நிலையில், நிறுவன வரியின் பங்கு ஏதும் மாநிலங்களுக்கு அளிக்கப்படாதது நியாயமற்றதாகும் என்பது தெளிவு. இது தொடர்பாக அரசியலமைப்பில் தேவையான திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும் என்றும் நிறுவன வரியில் ஒரு பங்கை மாநிலங்களுக்கிடையே ஒதுக்கீடு செய்வது குறித்துப் பத்தாவது நிதிக் குழுவின் குறிப்பான ஆய்வுக்கு அனுப்ப வேண்டும் என்றும் நாம் மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

*9.* சரக்கு ஒப்படை வரி விதிப்பதில் உள்ள காலதாமதம் பற்றியும் நாம் மிகுந்த கவலை கொண்டுள்ளோம். இவ்வரி விதிப்பது குறித்து மறு சிந்தனை வேண்டியதில்லை என்று முதலமைச்சர் அவர்கள் மத்திய நிதி அமைச்சருக்கு *1992* டிசம்பரில் கடிதம் எழுதியுள்ளார்கள். மூன்று திங்கள் கால அளவுக்குள் இதற்கு வகைசெய்கிற சட்ட முன்வடிவு ஒன்று கொண்டுவரப் படவேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். அனைத்து மாநிலங்களும் வலியுறுத்தியுள்ளவாறு இந்தச் சட்ட முன்வடிவு ஒன்று நாடாளுமன்றத்தின் நடப்புக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். பொருள் மதிப்பு மிகுமையிலான வரி மதிப்பைக் கூட்டும் வகையிலான வரியைக் **(Value Added Tax)** குறித்த ஆய்வு தொடர்பான அறிவிப்பு பற்றியும் நாங்கள் பெரிதும் கவலை கொண்டுள்ளோம். அத்தகைய வரி விற்பனை வரியை ஆதாரமாகக் கொண்டுள்ள மாநில நிதி ஆதாரங்களைப் பெரிதும் பாதித்து விடும். இப்பிரச்சனை குறித்து மேற்கொண்டும் ஏதேனும் நடவடிக்கை எடுக்குமுன்னர், மத்திய அரசு மாநில அரசுகளுடன் உரிய முறையில் கலந்தாலோசிப்பது பொருத்தமாக இருக்கும்.

*10.* வளர்ச்சிப் பணிகளுக்கான ஒதுக்கீடுகளில் உயர்வு காணும் வகையில் நாம் சேமிப்பை மேம்படுத்த வேண்டும். இந்தக் காரணத்திற்காகவே, *1993-94* ஆம் ஆண்டுக்கான மத்திய

வரவு-செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக சிறு சேமிப்புக்குப் புதிய சிறப்புச் சலுகைகளை வழங்குவது குறித்து மத்திய அரசை நாம் வலியுறுத்தியிருந்தோம். 1992-93ல் சிறு சேமிப்புத் தொகைகள் குறைவாக இருந்தபோதிலும், அண்மையில் வெளியான மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் சிறு சேமிப்புகளுக்குப் புதிய சலுகைகள் எவற்றையும் வழங்குவது குறித்து மத்திய அரசு அறிவிக்க விரும்பவில்லை என்பது நம்மை ஏமாற்றம் அடையச் செய்துள்ளது. திட்டமிட்ட வளர்ச்சிக்கான நிதிவாயில்களைக் கண்டறியும் நமது முயற்சிகளுக்கு இது ஒரு பின்னடைவாகும். மத்திய அரசு நமது கோரிக்கையைச் செவிமடுத்துக் கேட்குமென்றும், குறைந்தபட்சம் சிறு சேமிப்புகளுக்காவது சில சிறப்புச் சலுகைகள் கிடைக்க வகை செய்யுமென்றும் நாம் நம்புகிறோம்.

## பத்தாம் நிதிக் குழு

11. மாநிலங்கள் மிகமிகக் கடுமையான நிதி நெருக்கடிப் பிரச்சனைகளை எதிர்நோக்கியுள்ள சமயத்தில் பத்தாம் நிதிக் குழு அமைக்கப்பட்டுள்ளது என்பதை அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். தற்போது மாநிலங்கள் கடும் இடர்ப்பாடான நிதி நிலைமையில் உள்ளன என்பதை, நிதிக் குழு குறிப்பாகக் கவனத்தில் கொள்ளவேண்டும். ஒன்பதாம் நிதிக் குழு போதுமான அளவிற்கு நிதி ஆதாரங்களை அளிக்காத காரணத்தால், பல மாநிலங்கள் இக்கட்டான நிதி நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளன என்பதைச் சுட்டிக் காட்டுவது அவசியமாகும். கடந்த இரு ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள பணவீக்க நிலைமையும், அண்மையில் அடுக்கடுக்காகப் பல்வேறு பொருட்களின் நிர்ணய விலைகளை உயர்த்தியிருப்பதும் மாநிலங்களை மிக நெருக்கடியான நிதி நிலைக்குக் கொண்டு சென்றுள்ளன. மாநில அரசுகள் மக்களுக்கு மிகவும் நெருக்கமாக இருந்து செயல்பட வேண்டியவை; அவை இந்த நிலைமையைக் குறித்து ஏழை மக்களுக்கு விளக்கிக் கூற வேண்டிய

விரும்பத்தகாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. பத்தாம் நிதிக் குழு, தன்னுடைய பரிந்துரைகளில் இந்த உண்மைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். நிதி ஆதாரங்களை மாநிலங்களுக்கு மாற்றித் தருவதில் புதிய வழிகளை இக்குழு கண்டறிந்தாக வேண்டும்.

*12.* ஒன்பதாம் நிதிக் குழு செய்த பரிந்துரைகளினால், குறிப்பாகத் தமிழ்நாடு பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. மதுவிலக்குக் கொள்கைளையொட்டி ஏற்பட்ட வருவாய் இழப்பு போதிய அளவிற்குக் கருத்தில் கொள்ளப்படவில்லை. வருவாய்க் கணக்கில் செலவு குறித்து நிதிக் குழு செய்த மதிப்பீடுகள், முற்றிலும் இலக்குகளை விட்டு விலகிச் சென்றுள்ளன. நடப்பு வருவாய்க் கணக்கில் உபரிநிலை என்று ஒருபுறம் நிதிக்குழு தீர்மானித்திருந்தாலும், பற்றாக்குறையைத் தான் நம்மாநிலம் எதிர்நோக்க வேண்டியிருந்தது. மத்திய வரி வருவாயைப் பகிர்ந்தளிப்பதில், மாநிலங்கள் அனைத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மத்திய ஆயத்தீர்வைகளின் பங்கு, உண்மையிலேயே முதலில் இருந்த அளவான *40* சதவீதத்திலிருந்து *37.575* சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளதால், தமிழ்நாடு அந்த வகையிலும் பாதிக்கப்பட்டுள்ளது. திட்ட வருவாய் மானியங்களைப் பொறுத்தவரையிலும் இந்நிலையே காண்கிறோம். மொத்தத்தில் தமிழகம், தனது நிதி நிலையில் ஒரு அபாயகரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதன் விளைவாக தமிழ்நாட்டின் நிதி நிலையில் ஏற்பட்டுள்ள கடுமையான ஏற்றத்தாழ்வைப் பத்தாம் நிதிக் குழு கருத்தில் கொண்டு, பொருத்தமான நிவாரண நடவடிக்கைகளைப் பரிந்துரைக்க வேண்டும். விரைவிலேயே விரிவான முன் மதிப்பீடுகளையும், குறிப்புக்களையும் பத்தாம் நிதிக் குழுவிடம் சமர்ப்பிக்கவுள்ளோம். இந்த நிதிக் குழுவாவது, இன்று மாநிலத்தில் நிலவுகிற உண்மையிலேயே இடர்ப்பாடான நிதி நிலைமையைக் கவனத்தில் கொண்டு பொருத்தமான பரிந்துரைகளைச் செய்யும் என்று நம்புகிறோம்.

## எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

*13.* எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம், *1-4-1992* முதற்கொண்டு தொடக்கி வைக்கப்பட்டுள்ளது என்பதையும், இது *1992-97* ஆம் ஆண்டுக் கால அளவை உள்ளடக்கியது என்பதையும், இம்மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இம்மாநிலத்தை எதிர்நோக்கியுள்ள நிதி நெருக்கடியையும், மிகக் கடுமையான நிதிப் பற்றாக்குறையையும் கருதிப்பார்க்கையில், இம்மாநிலம் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொருளார்ந்த வகையில் தொடங்க இயலுமா? என்ற அச்சம் மேலோங்கியது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட அளவிற்கே எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கீட்டளவும் இருக்குமாறு விடலாமென்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இது நிதி ஒதுக்கீடுகளின் உண்மையான அளவில் பெருமளவு குறைப்புச் செய்வதாக அமைந்திருக்கும். தமிழ்நாடு முன்னேற்ற வழியில் செல்ல வேண்டுமெனில், இம்மாநிலத்திற்குரிய எட்டாவது திட்ட ஒதுக்கீட்டைப் பொருளார்ந்த வகையில் பெறுவதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உறுதி பூண்டார்கள். *1992* ஏப்ரலில் மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவரும் முதலமைச்சர் அவர்களும் நடத்திய பேச்சு வார்த்தைகளை அடுத்து, தமிழ்நாட்டுக்கான எட்டாவது திட்ட ஒதுக்கீடு ரூ.*10,200* கோடியாக நிர்ணயிக்கப்பட்டது; இது ஏழாவது திட்ட ஒதுக்கீட்டளவான ரூ.*5,750* கோடியை விட, வலுவான அளவுக்கு, அதாவது *77* சதவீதம் அளவிற்கு அதிகமானதாகும்.

## ஆண்டுத் திட்டம்

*14.* இம்மாநிலத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல, இவ்வரசு திட்டமிட்ட வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளதை இம்மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள்

அறிவார்கள். 1991-92 ஆம் ஆண்டிற்கான திட்டச் சாதனை, அவ்வாண்டிற்கான இலக்கினை விட மேலானதாகும். 1992-93ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீடு ரூ.1,486 கோடியாக வரையறுக்கப்படலாமென்று, அதாவது, முந்தைய ஆண்டின் ஒதுக்கீட்டளவைக் காட்டிலும் குறைவாக வரையறுக்கப் படலாமென்று ஒரு சமயம் மத்தியத் திட்டக் குழு தெரிவித்த ஆலோசனையையும் இம்மன்றத்தின் உறுப்பினர்கள் அறிவார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட அயராத முயற்சியினாலேயே மத்தியத் திட்டக் குழு, தன்னுடைய முடிவை மறுபரிசீலனை செய்து, 1992-93ஆம் ஆண்டிற்கு, ரூ.1,751 கோடி அளவிலான திட்ட ஒதுக்கீட்டிற்கு ஒப்புதலளித்தது. 1992-93 திருத்த மதிப்பீடு, தற்போது மொத்தம் ரூ.1,810 கோடி அளவில் நிதி ஒதுக்கீட்டிற்கு, அதாவது, ஒப்புதலளிக்கப்பட்ட ரூ.1,751 கோடி திட்ட நிதி ஒதுக்கீட்டளவுக்கும் ரூ.59 கோடி அதிகமாகவே வகை செய்கிறது. இவ்வாறாக, திட்ட இலக்கிற்கும் மேலாகச் சாதனை புரியும் தனது வலிமையை அரசு நிலை நாட்டியுள்ளது. 1992 நவம்பரில், 1993-94ஆம் ஆண்டுக்கான ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தியபோது, மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் இது குறித்துப் பாராட்டு தெரிவித்தார். இலக்கைத் தாண்டி எய்தும் சாதனைத் திறன்தான், 1993-94ல் தமிழ்நாட்டிற்கு ரூ.2,101 கோடி என்கின்ற மிகவுயர்ந்த அளவிலான ஒதுக்கீட்டிற்கு ஒப்புதலளிக்க மத்தியத் திட்டக் குழுவைத் தூண்டியது. இது 1992-93 ஆம் ஆண்டின் ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டளவைக் காட்டிலும் 20 சதவீதம் அதிகமாக இருப்பதோடு, இது அனைத்து மாநிலங்களுக்கிடையேயான மிகவுயர்ந்த அளவு நிதி ஒதுக்கீடுகளில் ஒன்றாக அமைந்துள்ளது. 1993-94ல் தமிழ்நாட்டின் நபர்வாரி திட்ட ஒதுக்கீடு மீண்டும் அனைத்திந்திய சராசரி அளவை விஞ்சும் என்பது இம்மாமன்றத்தின் உறுப்பினர்களுக்கு மிக்க மகிழ்ச்சியளிக்கக் கூடியதான செய்தியாகும். இவ்வாறாக, தமிழ்நாட்டில் திட்டமிட்ட வளர்ச்சி, முறையான வளர்ச்சி வழியில் செலுத்தப்பட்டுள்ளது. இனி,

நான் பல்வேறு துறைகளில், திட்டங்கள் , திட்டப் பணிகளைக் குறித்துச் சிறிது விளக்கிக் கூற விழைகிறேன்.

## காவல் துறை

15. மாநிலக் காவல்படை, புதிய கண்ணோட்டம் கொண்டு, மாறுபட்ட புதிய வழியில், புதிய குறிக்கோளை உளங்கொண்டு செயல்படச் செய்வதே இவ்வரசின் முயற்சியாக இருந்து வந்துள்ளது. மாநிலக் காவல் படையினர் பல்வேறு நெருக்கடியான சூழ்நிலைகளில் முழுமையாக ஈடு கொடுத்து அவற்றைச் சமாளிக்கும் விதத்தில் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்கள் என்பது பெருத்த மனநிறைவளிக்கக் கூடியதாக உள்ளது.

16. **வரவு-செலவுத் திட்டத்தில் காவல் படைக்கு மொத்தம் ரூ306 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** காவல்படையை நவீனமயமாக்கும் திட்டத்திற்காக நாம், ரூ.80.45 கோடி தொகை வழங்கக் கோரினோம்; இதுவரை மத்திய அரசிடமிருந்து நாம் ரூ.10 கோடி பெற்றுள்ளோம். காவல் படையை நவீனமயமாக்கும் முதல் கட்டப் பணியின் கீழ்ப் பல்வேறு இனப் பணிகளை மேற்கொள்வதற்காக அத்தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. காவல் படையை நவீனமயமாக்கும் இரண்டாம் கட்டப் பணியை மேற்கொள்ள இயலும் வகையில், மத்திய உள்துறை அமைச்சர் வாக்குறுதி அளித்த ரூ.30 கோடி விரைவில் வழங்கப்படுமென்று நாம் நம்புகிறோம்.

17. சீருடைப்பணியினர் தேர்வு வாரியம் ஏற்படுத்தப்பட்டதை இம் மன்றத்தின் உறுப்பினர்கள் அறிவார்கள். **புதிதாக 10,000 காவலர்களைத் தேர்வு செய்து பணியில் அமர்த்த, இந்த வரவு-செலவுத் திட்டம் வகை செய்கிறது.** இதன் மூலம் மாநிலக் காவல் படையின் திறமையும், சாதனைகளும் பெருமளவில் மேம்படுத்தப்பட முடியும்.

18. காவல்படையின் கட்டுப்பாட்டுணர்வையும், செயல்திறனையும் மேம்படுத்த அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளை இம் மன்றத்தின் உறுப்பினர்கள் அறிவார்கள். காவல் படையினர்க்கு இன்றியமையா உணவுப் பொருட்கள் வாங்குவதற்காக உதவித் தொகை அண்மையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. **நிலை II காவலர் பதவிகள் 21,000-ஐ நிலை I காவலர் பதவித் தரத்திற்கு உயர்த்தவும், நிலை I காவலர் பதவிகள் 2,700-ஐத் தலைமைக் காவலர் பதவித் தரத்திற்கு உயர்த்தவும் பெரும் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டு வருகிறது.** இந்த வரவு-செலவுத் திட்டம் மேற்சொன்ன திட்டங்களுக்கு நிதி ஒதுக்குகிறது.

19. காவலர் வீட்டு வசதிக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. ரூ.12.5 கோடி செலவில் 1,000 காவலர் குடியிருப்புகள் விரைவில் கட்டி முடிக்கப்படும். **மேலும், 1,000 காவலர் குடியிருப்புகளைக் கட்ட இந்த வரவு-செலவுத் திட்டம் வகை செய்கிறது.** இத்திட்டம் 'ஹட்கோவின்' நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும்.

## புயல் – வெள்ள நிவாரணம்

20. 1992 நவம்பரில் புயல், வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்களை இம் மன்றத்தின் உறுப்பினர்கள் அறிவார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிவாரணப் பணிகளை நேரடியாக ஆய்வு செய்து மேற்பார்வையிட்டார். பல்வேறு வெள்ள நிவாரணப் பணிகளுக்காகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவியளிக்கவும் நாம் இதுவரை ரூ.106 கோடி அனுமதித்துள்ளோம். 1993-94 ல் இடர் நிவாரண நிதிக்கு மத்திய அரசின் பங்கில் 50 சதவீதமான ரூ. 14.63 கோடி மட்டுமே கூடுதலாக நாம் பெற்றுள்ளோம். ஒன்பதாம் நிதிக் குழு, இடர் நிவாரண நிதியின்

அளவு குறித்து அளித்துள்ள பரிந்துரை முற்றிலும் போதுமானதாக இல்லை என்பது தெளிவாகியது. 1.12.92 அன்று முதலமைச்சருடன் நடத்திய பேச்சு வார்த்தையில், பாரதப் பிரதமர் வாக்குறுதி அளித்த ரூ.50 கோடி கூடுதல் தொகை, மத்திய வரிகளில் மாநில அரசின் பங்குத் தொகையின் முன் பணத்தொகையாகவே பெறப்பட்டுள்ளது. அத்தொகை 1993 மார்ச்சில் சரிக்கட்டப்பட வேண்டியதாகும். ஆனால், அவ்வாறு 1993 மார்ச்சில் சரிக்கட்டல் செய்யக் கூடாதென மத்திய அரசை நாம் வலியுறுத்தியுள்ளோம். ஏனெனில், அதனால் நமக்கு அதிக நிதி இடர்ப்பாடு ஏற்படும். மத்திய அரசின் ஒப்புதலுடன் ரூ.2,560 கோடி மொத்த ஒதுக்கீட்டில் புயல் சேதச் சீரமைப்புப் பெருந்திட்டம் ஒன்றை உலக வங்கிக்கு நாம் அனுப்பி வைத்துள்ளோம். முதலமைச்சர் அவர்கள் உலக வங்கியின் நிருவாக இயக்குநருடன் இது குறித்து விவாதித்துள்ளார்கள். தற்போது பரிசீலனையில் உள்ள திட்டங்கள், இசைவு பெறக் காத்திருக்கும் புதிய திட்டங்கள் ஆகியவற்றின் கீழ், மேற்குறிப்பிட்ட திட்டத்தின் சில புதிய கூறுகளைக் கருதிப் பார்க்கவும் உலக வங்கி தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துள்ளது. இருப்பினும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்நோக்கத்திற்காகத் தனியே ஒரு திட்டத்தை வலியுறுத்தியுள்ளார்கள். இதனைக் குறித்து உலக வங்கியிடம் தொடர்ந்து அணுகவிருக்கிறோம். இத்திட்டத்திற்கு இசைவு பெற மத்திய அரசை நாம் வலியுறுத்தவிருக்கிறோம்.

## வேளாண்மை

21. தமிழ்நாட்டில், 1992 நவம்பரில் புயல், வெள்ளம் ஏற்பட்ட போதிலும், மாநிலத்தின் உணவு தானிய உற்பத்தி, எய்துவதற்கரிய இலக்கு என்றிருந்த 100 இலட்சம் மெட்ரிக் டன் அளவையும் தாண்டிச் செல்லும் என்பதை அறிந்து, மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் பெருமகிழ்ச்சி அடைவார்கள். அயராது உழைக்கும் தமிழ்நாட்டு உழவர்களின் இந்த உயர்ந்த சாதனைக்கு நம்முடைய மனமார்ந்த பராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். 1992-93 ஆம்

ஆண்டில் ரூ. 216 கோடியாக இருந்த வேளாண்மையும், அது தொடர்பான பணிகளும் குறித்த திட்ட ஒதுக்கீடு, 1993-94 ஆம் ஆண்டில் ரூ. 235 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

22. வேளாண்மைத்துறை, மாநில உற்பத்தியளவில் (**State Domestic Product**) கிட்டத்தட்ட 22 சதவீத உற்பத்திக்குக் காரணமாக இருப்பது மட்டுமின்றி, உழைக்கும் மக்களில் ஏறத்தாழ 60 சதவீதம் பேருக்கு வேலை வாய்ப்பினையும் அளிக்கிறது. இத்துறையில் நாம் எடுத்துச் செயற்படுத்துகின்ற கொள்கை முடிவுகள், அதிக விளைச்சல் தரக்கூடிய பயிர்களுக்காக அரிதாகக் கிடைக்கக்கூடிய நிலத்தையும், நீர் ஆதாரங்களையும் திறமையாக பயன்படுத்துவது, கிடைக்கக் கூடிய நீரைப் பயனுள்ள வகையில் சிக்கனமாகப் பயன்படுத்துதல், சுற்றுச்சூழலுக்கு ஏற்ற நடவடிக்கைகள் உட்பட, புதிய அறிவியல் தொழில்நுட்ப உத்திகளைப் பின்பற்றுவதன் மூலம் உற்பத்திச் செலவைக் கட்டுப்படுத்துதல், தரிசு நிலங்களைப் பாசனத்தின் கீழ் கொண்டுவருதல், பொதுவான அடிப்படை முறையில் ஒருங்கிணைந்த பண்ணை நிருவாகம், வேளாண்மையில் மூலதன முதலீடு செய்வதை ஊக்குவித்தல், பொருத்தமான விலைக் கொள்கைகளை வகுத்தல் ஆகிய பல்வேறு வகையான நடவடிக்கைகள் மூலமாக உற்பத்தித் திறனை விரைவில் அதிகரிப்பதற்கு முக்கியத்துவம் அளிப்பதாக இருக்கும். தமிழ் நாட்டில் வேளாண்மைத் துறை மொத்த வளர்ச்சிக்கான உந்து விசையாக மாறும் வகையில் போதிய ஆற்றலைப் பெறத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**23. நெல், கரும்பு ஆகியவற்றைப் பொறுத்த வரையில், இதற்குமுன் எப்போதும் இருந்திராத அளவுக்கு உயர்ந்த அளவு கொள்முதல் விலைகள் உழவர்களுக்கு வழங்கப்பட உறுதி செய்துள்ளோம். நடப்பாண்டில் ரூ.55 கோடி செலவில் கடன் நிவாரணப் பெருந்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டுள்ளது.**

24. வேளாண்மை ஆராய்ச்சியும், திறன் மேம்பாடும் இனிவருங்காலங்களில் உற்பத்தித் திறனை அதிகரிக்க இன்றியமையாததாக இருப்பதால், இவற்றிற்கு உயரளவு முக்கியத்துவம் அளிக்கப்படும். உலக வங்கி நிதியுதவியுடன், மொத்தம் ரூ.309.29 கோடி செலவில் தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **வேளாண்மை அறிவையும், திறனையும் மேம்படுத்தும் புதுமுயற்சியின் ஒரு பகுதியாக, நாங்கள், 1993-94 ஆம் ஆண்டில்,"டேனிடா" நிதியுதவியுடன், ரூ23.43 கோடி செலவில், 70,000 பண்ணை மகளிருக்கு வேளாண்மையில் பயிற்சி அளிக்கும் திட்டமொன்றைத் (TANWA-II) தொடங்கவுள்ளோம்.** ரூ.150 கோடி செலவில் உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள, வேளாண்மையில் மனித வள மேம்பாட்டிற்கான திட்டமொன்றையும் நாங்கள் வகுத்துள்ளோம். **ஏற்றுமதி நோக்கங்களுக்காக, அதிக மணமும் விளைச்சலும் தரக்கூடிய புதிய ஜே.ஜே. 92 நெல் ரகத்தை அறிமுகப்படுத்தியிருப்பது இம் முயற்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.** எண்ணெய் தயாரிக்கப் பயன்படும் பனை மரங்களை வளர்க்கும் திட்டத்தின் கீழ், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதே மில்லத் ஆகிய மாவட்டங்களில் 5,000 ஏக்கர் நிலப்பரப்பில் எண்ணெய்வகைப் பனை மரங்களை வளர்க்க "கோஸ்டா ரிகா" நாட்டிலிருந்து போதிய வித்துக்கள் இறக்குமதி செய்தோம். இத்திட்டம் 1993-94 ஆம் ஆண்டில் மேற்கொண்டும் விரிவுபடுத்தப்படும்.

25. நீர்வரத்துப் பகுதி நிருவாகத்தின் புதிய கொள்கைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. 1992-93 ஆம் ஆண்டில் 77,500 ஏக்கர் நிலம் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. **1993-94 ஆம் ஆண்டில் மொத்தம் 1.21 இலட்சம் ஏக்கர் நிலத்தை இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரக்**

கருதப்பட்டுள்ளது. இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராசர் ஆகிய மாவட்டங்களில் மொத்தம் ரூ.12.82 கோடி செலவில் 27,500 ஏக்கர் நிலப்பரப்பை இத்திட்டத்தின் கீழக் கொண்டுவருவதற்காக நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுப் புதிய திட்டமொன்றை மேற்கொள்ள நாங்கள் "டேனிடா" நிறுவனத்தை அணுகியுள்ளோம். சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசன முறைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. 1992-93 ஆம் ஆண்டில் ரூ.3.87 கோடி முதலீட்டில் 7,500 ஏக்கர் நிலப்பரப்பை இத்திட்டத்தின் கீழ் கொண்டுவர முடிந்தது. 1993-94 ஆம் ஆண்டில், ரூ.5 கோடி செலவில், இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும் நிலத்தின் பரப்பை 13,750 ஏக்கராக நாம் உயர்த்துவோம்.

26. மாநிலத்திலுள்ள தரிசு நிலங்களைப் படிப்படியாகச் சாகுபடியின் கீழ்க்கொண்டு வருவது எங்களுடைய முயற்சியாகும். 1991-92 ஆம் ஆண்டில் பெருந்திட்டம் ஒன்று தொடங்கப்பட்டது. 17 மாவட்டங்களில் 25,000 ஏக்கர் நிலங்கள் இத்திட்டத்தின் கீழ்க்கொண்டு வரப்பட்டுள்ளன. 1993-94 ஆம் ஆண்டில் கூடுதலாக 37,500 ஏக்கர் நிலங்களை இத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது. வருகிற ஆண்டில் ரூ.6 கோடி நிதியொதுக்கீட்டுடன், மரம் வளர்ப்போர் கூட்டுறவுத் திட்டம் என்ற புதிய திட்டம் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் தொடங்கப்படும்.

27. வேளாண்மைத் துறையில் விரைவான வளர்ச்சி ஏற்பட, புதிய முதலீடுகள் போதுமான அளவில் செய்யப்பட வேண்டும். இந்த மாற்றத்தைக் கொண்டுவரத் தேவையான சூழ்நிலைகளை உருவாக்குவது எங்களுடைய முயற்சியாக இருக்கும். முதற்படியாக, ரூ.53 கோடி நிதியொதுக்கீட்டை உள்ளடக்கிய பெருந்திட்டமொன்று

மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ்ச் சிறிய மற்றும் குறுநில உழவர்களுக்காகப் பம்பு செட்டுகள், பண்ணைச் சாதனங்கள்,டிராக்டர்கள், ரப்பர் டயர் பொருத்தப்பட்ட மாட்டு வண்டிகள் முதலானவற்றில் புதிதாக முதலீடுகள் செய்ய முடிந்தது. 1993-94 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து இத்திட்டத்தைச் செயல்படுத்தும்படியும், வேளாண்மையில் புதிதாக மூலதன முதலீடுகளைச் செய்ய இயலும் வகையில் உழவர்களுக்குப் போதிய கடன் வசதிகளை அளிக்கும்படியும் மத்திய அரசை நாங்கள் கேட்டுக் கொண்டுள்ளோம்.

28. காய்கறிகளை உற்பத்தி செய்வது எங்களுடைய புதிய முயற்சியாக இருக்கும். **வருகிற ஆண்டில், காய்கறிப் பயிர் மேம்பாட்டு மும்முரத் திட்டம் ஒன்றைத் தொடங்க உள்ளோம். தக்காளி, கத்தரி போன்ற, பொதுவான காய்கறிச் செடிகளைப் பயிரிடுவதற்குத் தொழில் நுட்ப ஆதரவுக்கும், தொழில் நுட்பப் பணிகளுக்கும் வகை செய்ய வேண்டுமென்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தேசிய பால் பண்ணை மேம்பாட்டு வாரியத்துடன் கூட்டாகச் சேர்ந்து, ரூ.45 கோடி நிதியொதுக்கீட்டில் காய்கறிப் பயிர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.** இத்திட்டத்தின் கீழ்ப்பண்ணைப் பணிகள், சேமிப்புக் கிடங்கு வசதிகள், அங்காடி நிலவரத்தைச் சமன்படுத்தும் நடவடிக்கைகள் ஆகியவை மேற்கொள்ளப்படும். இதனால், மாநிலத்தில் காய்கறிச் செடிகள் பயிரிடுவோர் பெரிதும் பயனடைவர்.

## பாசனம்

29. தமிழ்நாடு, தன்னுடைய மேற்பரப்புப் பாசன நீர் ஆதாரங்களில் 98 சதவீதத்தையும், மதிப்பிடப்பட்ட நிலத்தடி நீர் ஆதாரங்களில் 83 சதவீதத்தையும் ஏற்கெனவே பயன்படுத்தியுள்ளது. இந்நிலையில், இம்மாநிலத்திலுள்ள நீர் ஆதாரங்களைப் பாதுகாக்கச்

சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. காவிரி நீர்ப் பிரச்சினை குறித்த நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயல்படுத்த, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகளை இம்மன்றத்தின் உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இடைக்கால ஆணையைச் செயல்படுத்த வேண்டுமென்று நாம் தொடர்ந்து வலியுறுத்திவருவோம்.

*30.* பெரும்பாசனம்-சிறுபாசனத் திட்ட ஒதுக்கீடு, *1992-93*ல் இருந்த ரூ.91.57 கோடியிலிருந்து *1993-94*ல் ரூ.119.70 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. நீர் ஆதாரங்களின் மிகக் கடுமையான பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு, தற்போதுள்ள நீர் ஆதாரங்களை வருங்காலத்தில் திறமையாகப் பயன்படுத்த எடுக்கவிருக்கும் முயற்சிகள் குறித்துத் திட்டமிட்டுச் செயல்படுத்த வேண்டும். **இப்பொதுவான குறிக்கோளை மனதில் நிறுத்தி, மொத்தம் ரூ.804 கோடி அளவில் நீர் ஆதாரங்கள் தொகுப்புத் திட்டம் ஒன்றை நாங்கள் தயாரித்துள்ளோம்.** இத்திட்டத்தை உடனடியாகப் பரிசீலனை செய்யுமாறு உலக வங்கியின் நிருவாக இயக்குநரை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார். உலக வங்கியும் இதனைச் சாதகமாகக் கருதிப்பார்த்து, தற்போது இத்திட்டத்தை விரிவாகப் பரிசீலனை செய்து வருகிறது.

*31.* பாசன ஏற்பாடுகளின் பராமரிப்பு குறித்த ஒதுக்கீட்டை மிகப் பெருமளவு உயர்த்த வரவு-செலவுத் திட்டம் வகை செய்கிறது என்பதை அறிவதில் இம்மன்றத்தின் உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவார்கள். ***பெரிய பாசனத் திட்டங்களின் பராமரிப்பிற்காக வருமாண்டில் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.200ம், சிறிய பாசனத் திட்டங்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.264ம் என்கிற வகையில் நிதி ஒதுக்கீடுகள் செய்துள்ளோம். ஒன்பதாவது நிதிக் குழு பரிந்துரைத்த விதிமுறையளவிற்கு***

**மேல் முதன்முறையாக இவ்வொதுக்கீடுகள் உயர்த்தப்பட்டுள்ளதை இது காட்டுகிறது.** அதே சமயம், நீர்ப்பாசனத்தில் பயனடைவோர் பாசனத் திட்டங்களின் மூலதனச் செலவில் பங்கேற்காவிடினும், குறைந்தபட்சம் பாசனத் திட்டங்களின் நிருவாக மற்றும் பராமரிப்புச் செலவில் போதிய அளவுக்குப் பங்கேற்க வேண்டும்.

32. **திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் ரூ.22.5 கோடி செலவில் வடக்குப் பச்சையாறு திட்டம் ஒன்றை நாம் மேற்கொள்ளவிருக்கிறோம். இப்பெருந்திட்டம் 1880 ஏக்கர் நிலப்பரப்பிற்கு நேரடியாகப் பாசனமளிப்பதுடன், 1418 ஏக்கர் நிலப்பரப்பிற்குப் பாசன வசதியினையும் உறுதி செய்யும். 4074 ஏக்கர் ஒருபோகப் புன்செய்ப் பயிரை இருபோகப் புன்செய்ப் பயிராக மாற்றுவதற்கும் இது வகை செய்யும்.**

33. **தேசிய நீர் நிருவாகத் திட்டத்திற்காக நாங்கள் ரூ.17.33 கோடி ஒதுக்கீடு செய்துள்ளோம்.** தொழுதூர் பொறி மதகுப் பாசனத் திட்டம், சித்தாறு நீர்த்தேக்கப் பாசனத் திட்டம் ஆகியவற்றில் நடப்பாண்டில் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. **திருக்கோயிலூர் அணைக்கட்டுப் பாசனத் திட்டம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கப் பாசனத் திட்டம், மஞ்சளாறு நீர்த்தேக்கப் பாசனத் திட்டம், பிளவுக்கல் நீர்த்தேக்கப் பாசனத் திட்டம் ஆகிய திட்டங்களில் வருமாண்டில் பணிகளை மேற்கொள்ளவிருக்கிறோம்.**

34. தமிழ்நாட்டில் மொத்தம் 39,202 சிறுபாசன ஏரிகள் உள்ளன. இவற்றில் 18.55 இலட்சம் ஏக்கர் ஆயக்கட்டுகளைக் கொண்ட 8939 பெரிய ஏரிகள் மற்றும் பாசன ஏற்பாட்டில் சேர்க்கப்பட்ட ஏரிகள் (system tanks) பொதுப்பணித் துறையின்

*கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன. ஒவ்வொன்றும் 100 ஏக்கருக்குக் குறைவாக 3.96 இலட்சம் ஏக்கர் ஆயக்கட்டுக்களைக் கொண்ட 20,413 சிறிய ஏரிகள் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன. முன்னாள் ஜமீன் ஏரிகள் என்றழைக்கப்படும் ஏனைய 9,850 ஏரிகள் எந்த அமைப்பாலும் பராமரிக்கப்பட்டு வரவில்லை. 1-4-1993 முதற்கொண்டு ஒவ்வொன்றும் 100 ஏக்கருக்கும் குறைவாக ஆயக்கட்டுள்ள முன்னாள் ஜமீன் ஏரிகள் அனைத்தையும் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டின் கீழும், ஒவ்வொன்றும் 100 ஏக்கருக்கும் அதிகமாக ஆயக்கட்டுள்ள ஏரிகள் மற்றும் பாசன ஏற்பாட்டில் சேர்க்கப்பட்டுள்ள* **(system tanks)** *ஏரிகள் அனைத்தையும் பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டின் கீழும் கொண்டுவர முடிவு செய்துள்ளோம்.* ***சம்பந்தப்பட்ட துறைகள் அவற்றைத் தங்கள் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் எடுத்துக்கொண்டவுடன், இந்த முன்னாள் ஜமீன் ஏரிகளுக்கு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 2 கோடி நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.***

*35. ஐரோப்பியப் பொருளாதாரக் குழுவின் நிதியுதவியுடன் ஏரிகளை நவீனமயமாக்கும் திட்டப் பணியின்* **II** *ஆம் கட்டப் பணிகளின்கீழ் 55,284 ஏக்கர் ஆயக்கட்டுகளைக் கொண்ட 230 ஏரிகளின் பணிகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.* ***1993-94ல் இத்திட்டத்திற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.24.51 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.***

*36. புதிதாக, அணை பாதுகாப்பு-புதுப்பித்தல் திட்டம் ஒன்று உலக வங்கியின் உதவியுடன் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கு ஆகும் மொத்தச் செலவு ரூ.48.33 கோடி. 1993-94 ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்கு ரூ.3.07 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.*

## ஊரக வளர்ச்சி

37. இந்த அரசு ஊரகப் பகுதிகளில் விரைவான வளர்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. **பதவி ஏற்ற உடனேயே, நாங்கள் பேரளவிலான சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கினோம். ரூ.387 கோடி நிதியொதுக்கத்துடன் கூடிய இப்பெருந்திட்டம், அடிப்படை மற்றும் இன்றியமையாப் பணிகளை மேற்கொள்ள, ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 1 கோடி நிதியொதுக்கீட்டிற்கு வகை செய்தது. இத்திட்டப் பணிகள் 1993 மார்ச்சுத் திங்களில் முழுவதுமாக முடிக்கப்படும்.** இத்திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகள் முடிக்கப்படும்.

| திட்டத்தின் பெயர் | எண்ணிக்கை | திட்டப்பணிகளின் செலவு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| குடிநீர் வழங்கல் | 8,979 குடியிருப்புகள் | 98 |
| சாலைகள் மேம்பாடு | 7,398.6 கி.மீ. | 174 |
| தெரு விளக்குகள் அமைத்தல் | 1,68,895 | 33 |
| தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் | 2,288 | 31 |
| சத்துணவுக் கூடங்கள் கட்டுதல் | 2,933 | 20 |

| | | |
|---|---|---|
| சிறுபாசன ஏற்பாடுகளைப் புதுப்பித்தல் | *5,535* | *28* |
| தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல் | *1,919* | *3* |

**அடிப்படைத் தேவைகளுக்கு வகை செய்யும் இப்பெருந்திட்டம் அனைவரின் பாராட்டுதலையும் பெற்றுள்ளது.**

38. திட்டமிடும் பணியினைப் பரவலாக்கும் நடைமுறையின் ஒரு பகுதியாக, மாவட்டங்களுக்கு நிபந்தனையற்ற நிதி வழங்கப்பட வேண்டும் என்று நாங்கள் முடிவு செய்துள்ளோம். **அதிகாரப் பரவல் முறையில் அமைந்த மாவட்டத் திட்டம் ஒன்றைப் புதிதாகத் தொடங்க நாம் முடிவெடுத்துள்ளோம்.** மாவட்ட அளவில் நிபந்தனையற்ற நிதி கிடைக்கும்படி செய்யப்படும். மாவட்டத் திட்டம் ஒன்றின் அடிப்டையில் மாவட்ட மேம்பாட்டுக் குழுவிடம் கலந்தாலோசித்து இந்தத் தொகை பயன்படுத்துவது முடிவு செய்யப்படும். மக்களின் நீண்ட காலத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் திட்டமிடுதல், திட்டப் பணிகளை நிறைவேற்றுதல் ஆகியவற்றில் இது பெருத்த மாறுதலை ஏற்படுத்தும். **இத்திட்டத்திற்கு, வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூ20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

39. உள்ளாட்சி மன்றங்களைத் தற்சார்புடன் இயங்கும்படி செய்தால்தான், ஜனநாயக அடிப்படையிலான அதிகாரப் பரவல் முறையை நாம் செயல்படுத்த முடியும். பல ஆண்டுகளாகத் திருத்தியமைக்கப்படாமல் இருந்த உள்ளூர் செஸ் வரியும், உள்ளூர் செஸ் மேல் வரியும் 1.7.92 முதல் திருத்தியமைக்கப்பட்டதை இம்

மன்றத்தின் உறுப்பினர்கள் நினைவு கூரலாம். முக்கிய வரியான உள்ளூர் செஸ் மேல்வரி நில வருவாய் ரூபாய் ஒன்றுக்கு ரூ.2.50 ஆக இருந்தது. இது, நிலவருவாய் ரூபாய் ஒன்றுக்கு உயரளவாக ரூ.10 எனத் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. வரித் திருத்தம் தேவையே என்றாலும், அது மிதமானதாக இருக்க வேண்டும் என்கிற முக்கிய வேண்டுகோள் வந்துள்ளது. **நாங்கள் இந்த வேண்டுகோளை ஏற்று, எந்த ஓர் ஊராட்சி ஒன்றியமும் நிலவருவாய் ரூபாய் ஒன்றுக்கு உள்ளூர் செஸ் மேல்வரியாக 5 ரூபாய்க்கு மேல் விதிக்காமல் இருப்பதை உறுதி செய்ய முடிவெடுத்துள்ளோம். உள்ளூர் செஸ் மேல்வரி அதிகரிக்கப்பட்டுள்ளதையடுத்து, நாங்கள் 1993-94 ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உள்ளூர் செஸ் மேல்வரி இணை மானியமாகக் கூடுதலாக ரூ32.5 கோடி ஒதுக்கீடு செய்துள்ளோம்.**

## கால்நடை வளர்ப்பு

40. கால்நடைகளுக்குச் சிறந்த மருத்துவப் பணிகள் அளிக்கும் பெரும் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது என்பதை அறிவதில், பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவார்கள். **இத்திட்டத்தின்கீழ், 1992-93ல் மேலும் 484 கால்நடை மருந்தகங்களுக்கும், துணை மையங்களுக்கும் உறைவிந்து வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன.** ஒசூரிலும், ஈச்சங் கோட்டையிலும் உள்ள உறைவிந்து உற்பத்தி செய்யும் வசதிகள், மொத்தம் ரூ.2.52 கோடி செலவில் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தருமபுரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உறைவிந்து வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

41. **தொலைதூர கிராமப்பகுதிகளில் கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்தும் திட்டத்தின்கீழ், 400 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மருந்துகளுக்கான ஒதுக்கீடு, நடப்பாண்டிற்கு**

இருந்த ரூ.3.38 கோடி என்ற அளவிலிருந்து, *1993-94*ஆம் ஆண்டிற்கு ரூ.5.00 கோடி என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. கால்நடை நோய்களைக் கண்டுபிடிப்பதற்குச் சிறப்பு நோய்அறி பணிகள், நடப்பாண்டில் அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஈரோட்டில், கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்கள் குறித்த சிறப்புத் தகவல் பிரிவு ஒன்றும், சேலம் மாவட்டத்திலுள்ள அண்டலூரில் கோழி இன நோய் அறி ஆய்வகம் ஒன்றும் வருமாண்டில் ஏற்படுத்தப்படும். கால்நடை நோய்களைச் சரியாக அடையாளங்காணவும், அவைகளைக் கட்டுப்படுத்தவும் நாம் மிகுந்த முன்னுரிமை அளிக்க இருக்கின்றோம்.

*42.* தமிழ்நாட்டில், புதிய பால் உற்பத்திப் புரட்சி தொடங்கும் நிலையுள்ளது. தேசிய பால் பண்ணை மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியுடன் ரூ*68.19* கோடி மொத்தச் செலவில் மூன்றாவதுகட்ட பால் பெருக்கத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், நாளொன்றுக்கு *4* இலட்சம் லிட்டர் பால் உற்பத்தித் திறன் கொண்ட புதிய பாற்பண்ணை ஒன்று *1993* செப்டம்பரில் சென்னை அருகே உள்ள சோழிங்கநல்லூரில் ரூ*20* கோடி செலவில் தொடங்கப்படும். வருமாண்டில் புதிய செய்முறை மற்றும் குளிர் பதன வசதிகள் மூலம் குளிர்பதனத்திறன் நாளொன்றுக்கு 7.5 இலட்சம் லிட்டரிலிருந்து 10.11 இலட்சம் லிட்டராகவும், பால் கொள்முதல் திறன் நாள் ஒன்றுக்கு 17.04 இலட்சம் லிட்டரிலிருந்து 23.04 இலட்சம் லிட்டராகவும் அதிகரிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படாத மாவட்டங்களில், ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்த, தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து உதவியைப் பெற்றுள்ளோம். ரூ.4.65 கோடி செலவில் காமராஜர் மாவட்டம் இத்திட்டத்தின்கீழ்ப் பயனடைந்துள்ளது. *1993-94* ல் ரூ2.36கோடி செலவில்

கன்னியாகுமரி மாவட்டத்திலும், ரூ386கோடி செலவில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திலும் இத்திட்டத்தை மேற்கொள்ளவிருக்கின்றோம்.

## மீனளம்

43. செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர்., தஞ்சாவூர், இராமநாதபுரம், சிதம்பரனார், கன்னியாகுமரி மாவட்டங்களில் மொத்தம் ரூ.1588 கோடி செலவில் ஒருங்கிணைந்த ஆழ்கடல் மீனள வளர்ச்சித் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளோம். 5 ஆண்டுகள் கால அளவில் செயற்படுத்தப்படவிருக்கும் இத்திட்டத்தின்கீழ், 6050 மீனவர்களுக்கு மீன்பிடி படகுகள், தளவாடம், படகுக்கு உள்ளேயும், வெளியேயும் பொருத்தப்படும் எஞ்சின்கள், வலைகள் போன்றவை வழங்கப்படும்.

44. இருவகையான அணுகுமுறைகளின் வாயிலாக உவர்நீர் இறால் பண்ணைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துள்ளோம். முதலாவதாகப், பெரிய தொழில் நிறுவனங்கள் இறால் பண்ணை அமைக்க ஊக்கம் அளிக்கப்படுகிறது. இரண்டாவதாக, மீனவர்களை ஒருங்கிணைத்து இறால் வளர்ப்புத் தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. சிதம்பரனார் மாவட்டத்தில் உள்ள தருவைக்குளத்தில் ரூ.7.2 கோடி செலவில், 343 ஏக்கர் பரப்பில் இறால் வளர்ப்புத் தொழிற்பேட்டை ஒன்றை ஏற்படுத்தும் பணி தொடங்கியுள்ளது. பாக் விரிகுடாவில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நடவடிக்கையாக மொத்தம் ரூ.7.5 கோடி செலவில் மற்றொரு இறால் வளர்ப்புத் தொழிற்பேட்டை இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்படுத்தப்படும்.

45. மாநிலத்தில் மீன்குஞ்சு உற்பத்தியை அதிகரிக்க விரைவுத் திட்டம் ஒன்றைத் தொடங்கவும் முடிவு செய்துள்ளோம். தற்போது, ஆண்டுத் தேவை 17 கோடி மீன்குஞ்சுகள் ஆகும். வழங்கல் சுமார் 6 கோடி மீன்குஞ்சுகள் மட்டுமேயாகும். **மீன்குஞ்சுகள் வழங்கலை மேலும் 4 கோடி அதிகரிக்கப் பெரும் திட்டமொன்றை வரும் ஆண்டில் செயற்படுத்தவிருக்கிறோம்.** வரவு-செலவுத் திட்டத்தில் தூத்துக்குடி, கோட்டைப்பட்டினம் மீன்பிடி துறைமுகங்களின் மேம்பாட்டிற்காகவும் ரூ.26 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

46. மீனவர்களின் நலனை இந்த அரசு தனது முன்னுரிமைகளில் முதலாவதாக வைத்துள்ளது. மீனவர்கள் சேமிப்பு-நிவாரணத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. **மீன்பிடி தொழிலில் வருமானம் இல்லாத காலங்களில் மீனவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ60,வீதம் 3 மாதங்களுக்கு வழங்கப்பட்டு வந்த பயன், நடப்பாண்டிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ270 வீதம் 4 மாதங்களுக்கு வழங்கப்படும்வகையில் உயர்த்தப்பட்டுள்ளது. 1992-93ல் திருத்திய திட்டத்திற்காகும் செலவு ரூ5.34 கோடியாகும். இத்திட்டத்தின் மூலம் 82,000 மீனவர்கள் பயனடைந்துள்ளனர்.** நடப்பாண்டில் மீனவர்களுக்காக 2000 வீடுகள் கட்டி முடிக்கப்படுவதை உறுதி செய்ய, நாங்கள் ஒருமித்த நடவடிக்கையை எடுத்துள்ளோம். **1993-94 ஆம் ஆண்டில் மேலும் 2000 வீடுகளைக் கட்டும் பணியை மேற்கொள்வோம்.**

## காட்டுவளம்

47. தற்போதுள்ள காட்டுவளங்களைப் பாதுகாக்கின்ற அதே சமயத்தில் இப்பகுதியை விரைவாக விரிவுபடுத்த வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். நடப்பாண்டில் மொத்தம் 1.13 இலட்சம் ஏக்கர் பரப்பில் காடு வளர்ப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வருகிற ஆண்டில் 1.25 இலட்சம் ஏக்கர் பரப்பை இத்திட்டத்தின்கீழ் கொண்டு வர நாங்கள் கருதியுள்ளோம். நடப்பாண்டில் காடு வளர்ப்புத் திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.39 கோடியாகும். இதனோடு ஒப்பிட, 1993-94 ஆம் ஆண்டில் இது ரூ.43 கோடியாக இருக்கும்.

48. நீலகிரியிலும், ஆனைமலையிலும் உள்ள 7,500 ஏக்கர் பரப்பில் தேயிலைத் தோட்டங்களை ஏற்படுத்தும் பெருந்திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளோம். இத்திட்டத்தின்கீழ் 1,830 ஏக்கர் பரப்பு தேயிலைச் சாகுபடியின்கீழ் ஏற்கெனவே கொண்டு வரப்பட்டுள்ளது. **1993-94ஆம் ஆண்டில் மேலும் 1,250 ஏக்கர் பரப்பில் தேயிலை பயிரிடப்படும். வருகிற ஆண்டில் ரூ.8.5 கோடி செலவில் 3 புதிய தேயிலைத் தொழிற்சாலைகள் நிறுவப்படும்.** தமிழ்நாட்டின் தேயிலையைப் பிரபலப்படுத்தி, ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கையும் நடப்பாண்டில் தொடங்கப்பட்டுள்ளது.

**49. நடப்பாண்டில் காகிதக் கூழ் மரங்கள் பயிரிடும் பரப்பை அதிகரிக்கச் செய்யும் பெருந்திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது. மொத்தம் ரூ.84.73 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுவருகின்ற இத்திட்டத்தின்கீழ், 1992-93ஆம் ஆண்டில் 26,000 ஏக்கர் பரப்பு கொண்டு வரப்பட்டுள்ளது. 1993-94ஆம் ஆண்டில் கூடுதலாக 26,000 ஏக்கர் பரப்பு கொண்டுவரப்படும்.**

50. சுவீடன் நாட்டின் பன்னாட்டு வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து (SIDA) நிதியுதவி பெற்றுள்ள சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் II வது கட்ட விரிவாக்கப் பணியைச் செயல்படுத்த வரவு-செலவுத் திட்டம் 1993-94ல் ரூ.25 கோடிக்கு வகை செய்கிறது. உலக வங்கி நிதியுதவி வழங்கவிருக்கும், ரூ.350 கோடி

தற்காலிக மதிப்பீட்டில் புதிய காடு வளர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

## தொழில்கள்

*51.* மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கிய மாநிலத்திற்குரிய புதிய தொழில் கொள்கை இம்மாநிலத்தின் விரைந்த தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. **தொழில் தொடங்கத் தேவையான அடிப்படைவசதிகள் மற்றும் சிறப்பாக அத் தொழிலை நடத்திச் செல்லத் தேவையான ஊக்க நடவடிக்கைகள் ஆகியவற்றுடன் உருவாக்கப்பட்டுள்ள தெளிவான இத்தொலைநோக்குத் தொழில் கொள்கை, இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. ரூ8,500 கோடி மூலதனத்தை உள்ளடக்கிய புதிய முதலீட்டுத் திட்டங்களைக் குறித்துக் கலந்துபேசி முடிவு காண, 1992 டிசம்பரில் முதலமைச்சர் அவர்கள் விரிவான ஆலோசனைகளை நடத்தினார்.** இதையும் சேர்த்து, மாநிலத்திலுள்ள பல்வேறு தொழில் மற்றும் மின்சக்தித் திட்டங்களில் மொத்தம் ரூ.20,000 கோடி அளவிற்குப் புதிய முதலீட்டைப் பெற முடிந்தது. மாநிலத்தின் விரைந்த தொழில் வளர்ச்சிக்கு இது தக்கதொரு நல்வாய்ப்பாக அமையும்.

*52.* தமிழ்நாட்டின் பொருளாதாரம், தன் எல்லைக்கும் அப்பாற்பட்டுச் செயல்பட வேண்டிய நேரமிது. இந்த நிலையைக் கருத்திற் கொண்டு, புதிய தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையில் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்த எங்களால் இயன்றதைச் செய்வோம். அதே நேரத்தில், சுங்கத் தீர்வைகளைக் குறைத்திருப்பது, புதிதாகத் தொடங்கப்பட்ட தொழில்களின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துவதாக இருக்கக் கூடாது. புதிதாகத் தொடங்கப்பட்ட தொழில்களின் நலனுக்குப் பாதகமான வகையில்

இந்திய அங்காடிகளில் பொருட்களைக் குவிப்பதைத் தடைசெய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு நாங்கள் மத்திய அரசை வலியுறுத்துவோம்.

53. பொருளாதாரத் துறையில் வெளிநோக்குக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் வாயிலாக, நேரடி வெளிநாட்டு முதலீட்டை வரவேற்கிறோம். இக்காரணத்தினால்தான், சென்னையில் இந்திய-சிங்கப்பூர் வர்த்தக மையத்தை முனைப்புடன் அமைக்க முனைந்துள்ளோம். விரிவான சாத்தியக்கூறு அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. வல்லுநர் குழு ஒன்று அண்மையில் சிங்கப்பூர் சென்றுள்ளது. அமைச்சர்கள் தலைமையிலான மேல்மட்டக் குழு ஒன்று சிங்கப்பூரிலிருந்து சென்னைக்கு வந்து, முதலமைச்சருடன் விரிவாகப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. உலக வங்கியும் ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளது. **இயன்ற அளவிற்கு மிக விரைவில் இப்புதிய மையத்தை ஏற்படுத்துவது எங்களுடைய பெருமுயற்சியாக அமையும்.**

54. தொழில் வளர்ச்சியைப் பெருக்கும் வகையில், இம்மாநிலத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த நாங்கள் தொடர்ந்து பாடுபடுவோம். இந்த நாட்டிலேயே, சிறந்த அடிப்படை வசதிகள் கொண்ட மாநிலங்களில் தமிழகமும் ஒன்று என்று அண்மையில் இந்தியப் பொருளாதார ஆய்வு மையம் (CMIE) மேற்கொண்ட ஆய்வில் மதிப்பிட்டுள்ளது. இம்மாநிலத்தின் நிலையான வாழ்க்கைத் தன்மையும், உயர்ந்த ரக அடிப்படை வசதியும் தற்போது தொழில் முதலீடு செய்வதற்குச் சாதகமான சூழலை ஏற்படுத்தியுள்ளன. **இந்த வரவு-செலவுத் திட்டத்தில் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதிக் கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்திற்கு (TACID) சமவீதபங்குத்தொகையாக**

**ரூ. 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** இது, பெரியார் மாவட்டத்திலுள்ள பெருந்துறை, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள கங்கைகொண்டான், நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள பனங்குடி ஆகிய இடங்களில் வளர்ச்சி மையங்களை ஏற்படுத்துவதில் விரைந்த முன்னேற்றத்தை உறுதி செய்வதற்காகும். இந்த வளர்ச்சி மையங்களுக்காக மத்திய அரசு அளிப்பதாக உறுதியளித்த சமவீதப் பங்குத் தொகையை அளிக்குமாறு நாங்கள் அவ்வரசைக் கேட்டுக் கொள்கிறோம். இத்துடன், தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் திண்டுக்கல் அண்ணா மாவட்டத்திலுள்ள நிலக்கோட்டையில் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழில்பேட்டை ஒன்றையும், தருமபுரி மாவட்டத்திலுள்ள பருகூரில் இன்னொரு சிறப்பு வளர்ச்சி மையத்தையும் ஏற்படுத்தும் பணியில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளது. **அடிப்படை வசதிக் கட்டமைப்புக் கடன்-நிதியுதவிப் பணிகள் நிறுவனத்தின் (ILFS) ஆதரவுடன், தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம், திருப்பூருக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம் ஒன்றையும் செயல்படுத்தும். மின்னணுவியல் கணினித் தொழில்** நுட்பவியல் மையம் ஒன்று ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது, ரூ.40.65 கோடி திட்டச் செலவில் சென்னைக்கு அருகில் அமையவிருக்கிற புதிய மின்னணுவியல் நகரத்தின் பகுதியாக இருக்கும்.

**55. 1992-93ஆம் ஆண்டில் இது வரையிலும் ரூ200 கோடி அளவிற்கு விற்பனை வரி தள்ளிவைப்புச் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. பல தொழிலதிபர்களும் தொழிலகச் சங்கங்களும் கேட்டுக் கொண்டதன்பேரில், தள்ளிவைக்கப்பட்ட விற்பனை வரியை, வருமான வரிச் சட்டத்தின் 43-B பிரிவின் நோக்கத்திற்காகச்**

**செலுத்தப்பட்டதாகக் கருத, சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவர நாங்கள் முடிவு செய்துள்ளோம்.** மூலதன உதவித் தொகைக் கோரிக்கைகளுக்கு விரைந்து அனுமதி வழங்கும் முறை கொண்டு வரப்பட்டுள்ளது. முன்னர் இருந்த தடைகள் நீக்கப்பட்டுள்ளன. **மாநிலத்தின் மூலதன உதவித் தொகையை உடனுக்குடன் வழங்குவதை உறுதி செய்யும் வகையில், 1992-93 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.18 கோடியாக இருந்த நிதியொதுக்கம், 1993-94ல் ரூ.27.05 கோடியாக பெருமளவு அதிகரிக்கப்பட்டுள்ளது.** மாநிலத்தில் புதிய முதலீடுகளுக்கு வழிகாட்டியுதவும் "தொழில் வழிகாட்டி ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம்" (GUIDANCE) என்னும் ஒரு முகவரமைப்பை நாங்கள் ஏற்படுத்தியுள்ளோம். நடைமுறைகளை மேற்கொண்டும் எளிமைப் படுத்துவதற்கும், ஒரு முனை ஒப்புதல் ஏற்பாட்டைக் (one step clearance) கொண்டு வரவும் தலைமைச் செயலாளரின் தலைமையில் முக்கியமான அரசுத் துறைச் செயலாளர்கள் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

56. அனைத்திந்திய நிறுவனங்கள், தொழில் நிதியுதவி வழங்குவதில் காணப்படும் இடையூறுகள் குறித்து நாங்கள் மனவருத்தமடைகிறோம். அனைத்திந்திய நிறுவனங்கள் மறு நிதியுதவி வசதிகளைக் குறைத்ததன் காரணமாகத் தமிழ்நாடு சிறு தொழில் ஊக்கக் கழகமும், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனமும் நிதி இடர்ப்பாடுகளை எதிர்நோக்கியுள்ளன. இக்காரணத்தினால்தான், தென்மண்டலத் தொழில் வளர்ச்சி வங்கி ஒன்றைச் சென்னையில் அமைக்குமாறு நாங்கள் மத்திய அரசை வலியுறுத்தி வருகிறோம்.

57. சிறு தொழில்களின் வளர்ச்சியை மேம்படுத்த முனைப்பான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளவிருக்கின்றோம். அரசு பொதுத் துறை நிறுவனங்கள் சிறு தொழில் நிறுவனங்களுக்குத் தொகைகளை உடனுக்குடன் வழங்குவதற்கு உறுதி செய்துள்ளோம்.

சிறு தொழில்கள் இனி 1993-94ஆம் ஆண்டிலிருந்து ஆதாயம் ஈட்ட உதவும் வகையில் வட்டி வீதங்களை மேலும் குறைக்க மத்திய அரசையும், இந்திய ரிசர்வ் வங்கியையும் வலியுறுத்துகிறோம். நடைமுறை மூலதனம் ஒரு பிரச்சினையாகவே தொடர்ந்து இருந்து வருகிறது. நாயக் குழுவின் பரிந்துரைகளை விரைவில் செயற்படுத்துமாறு நாம் வலியுறுத்துவோம். சிறு தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவி செய்யும் சிறு தொழில் உற்பத்தி மேம்பாட்டு அமைப்பின் (SIPPO) முயற்சிகளுக்கு நாம் ஆதரவளிக்கவிருக்கின்றோம். உயர் தொழில்நுட்பப் பேட்டைகள் திட்டத்தின்கீழ், ஜப்பானின் நிதியுதவியுடன் திருப்பூரில் முதல் தொழில்பேட்டை அமைக்கப்படவுள்ளது. **உலக வங்கியின் ஓர் இணை நிறுவனமான பன்னாட்டு நிதியுதவிக் கழகத்தின் நிதியுதவியுடன், அரிய மற்றும் புதிய முறைத் தொழில் துவங்கும் மூலதன நிதி (Venture Capital Fund) ஒன்றைத் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் ஏற்படுத்தும்.**

58. 1991ல் தொழில் உரிமம் பெறும் முறை தளர்த்தப்படுவதற்கு முன்னர், உரிமம் வழங்கும் அதிகாரம் மத்திய அரசிடம் இருந்தது. தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு மிகவும் பாதகமாக இருக்கும் வகையில் புதிய தொழிற்சாலைகளை அமைக்கும் இடத்தைத் தேர்வு செய்வதில் மத்திய அரசு அந்த அதிகாரங்களைப் பயன்படுத்தி வந்தது. மத்திய அரசு நேரடி ஆட்சிக்குட்பட்ட சில பகுதிகளில் புதிதாகத் தொடங்கும் தொழில்களுக்கு முதல் 5 ஆண்டுகளுக்கு இனி வரி விதிக்கப்பட மாட்டாது என்ற புதிய அறிவிப்பு மறுபடியும் தமிழ்நாட்டைப் பாதிக்கும். மத்திய அரசின் நேரடி முதலீடு மாநிலத்தில் குறைந்துள்ளதாலும் தமிழ்நாடு பாதிக்கப்பட்டது. **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இடைவிடாத முயற்சியின் பலனாக, மணலியில் 'அரோமாட்டிக்ஸ்' திட்டத்திற்கு மத்திய அரசு**



2

**ஒப்புதலளித்தது. "பம்பாய் ஹை" பகுதியிலிருந்து எரிவாயுவை தமிழ்நாட்டிற்குக் கொண்டு வருவதற்குத் தென்னக எரிவாயு இணைப்புத் திட்டத்தை ஏற்படுத்த மத்திய அரசை நாம் வலியுறுத்துவோம்.** இத்திட்டத்திற்குக் கொள்கை அளவில் அனுமதி அளிக்கப்பட்ட போதிலும், நிதி இடர்பாடுகள் இதைச் செயற்படுத்துவதில் தடையாக உள்ளன என்று கூறப்படுகிறது. இத்திட்டத்தை விரைவில் நிறைவேற்றும் வகையில் தென் மாநிலங்கள் கூட்டாகச் சேர்ந்து நிதியளிக்கலாம் என்று முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கருத்துத் தெரிவித்துள்ளார்கள். இந்தப் பெரும் திட்டத்தை விரைவில் தொடங்குவதற்கு மத்திய அரசை நாம் வலியுறுத்துகிறோம்.

## மின் சக்தி

59. தமிழ் நாடு, ஏனைய எல்லா மாநிலங்களுடனும் ஒப்பிட, மின் வெட்டிலிருந்து அறவே விடுபட்ட மாநிலமாகத் திகழ்கிறது. மின் தேவையளவிலும், மின் வழங்கல் அளவிலும் வெட்டு எதுவும் இல்லாத மகிழ்ச்சிகரமான நிலையை எய்தியுள்ளோம். இந்நிலை தொடர்ந்து நிலவுவதை உறுதி செய்ய, அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறோம். தூத்துக்குடியில் 420 மெகாவாட் திறன் கொண்ட 4 வது, 5 வது மின் உற்பத்திப் பிரிவுகள், 1993 மார்ச் மாதத்திலிருந்து முறையாக மின் உற்பத்தியில் ஈடுபடும். **1993-94 ஆம் ஆண்டில் வட சென்னை அனல் மின் நிலையத்தின் மின் உற்பத்திப் பிரிவு, மின் மைய ஏற்பாட்டுடன் இணைக்கப்பட்டுச் செயல்படத் தொடங்கும் போது, நாம் மேலும் கூடுதலாக 210 மெகாவாட் திறன் கொண்ட மின் சக்தியைப் பெறுவோம்.**

60. மின் சக்தித் துறைக்காக ரூ.541 கோடி அளவில் திட்ட ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது. இதற்கு மேலாக ரூ.210 கோடி அளவில் முன் எப்பொழுதும் இல்லாத அளவில் கூடுதல் ஒதுக்கீடு

செய்யப்பட்டு **மின் துறையில் முன் எப்போதும் இருந்திராத வகையில் மொத்த திட்ட ஒதுக்கீடு ரூ.751 கோடியாக இருக்கும்.**

*61.* பொதுத் துறையில் மின் சக்தி குறித்த முதலீட்டை அதிகரிக்கத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கையில் வருங்காலத்தைப் பற்றியும் , கூடிவரும் பெருமளவு மின் தேவை பற்றியும் சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது. இக்காரணத்தினால் இத்துறையில் பெருமளவில் தனியார் துறை முதலீட்டை ஆதரிக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். இவ்வாறு, மொத்தம் ரூ.11,600 கோடி அளவில் 3,000 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கூட்டுத் துறையில் ரூ.7,000 கோடி முதலீட்டுடன், 1,500 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஜெயங்கொண்ட சோழபுரம் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் வெட்டுதல்-மின் உற்பத்தித் திட்டம், தனியார் துறையில் ரூ.3,000 கோடி முதலீட்டுடன் 1,000 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட கடலூர் அனல்மின் நிலையம், நெய்வேலி பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி ரூ.1,600 கோடி செலவில், ஒவ்வொன்றும் 250 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் இரண்டு அனல்மின் நிலையங்கள் ஆகியவையே அப்புதிய திட்டங்களாகும். இதன்மூலம் ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு போதுமான அளவில் புதிய திட்டங்களுக்கு நாங்கள் வகை செய்துள்ளோம்.

*62.* தமிழ் நாட்டில் மத்திய அரசின் பல்வேறு மின் உற்பத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதில் காணப்படும் காலத் தாழ்வு குறித்து நாங்கள் மிகுந்த கவலை அடைந்துள்ளோம். நெய்வேலியில் மூன்றாவது சுரங்கம் வெட்டும் பணியும் அதனுடன் இணைந்த மின் உற்பத்தித் திட்டமும் உடனே தொடங்கப்பட வேண்டும். இத் திட்டங்களைச் செயல்படுத்துவது தொடர்பாக விரைந்து முடிவெடுக்கும்படி மத்திய அரசை நாங்கள் வலியுறுத்துவோம். கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு நிதிதிரட்டும் பணியில்

பங்கேற்கத் தயாராக இருப்பதை நாங்கள் ஏற்கெனவே சுட்டிக் காட்டியுள்ளோம். இத்திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து மத்திய அரசு விரைவில் முடிவெடுக்க வேண்டும்.

63. வழங்கப்படுகின்ற மின் சக்தியின் தரத்தை மேம்படுத்தவும், மின்கம்பித் தொடர்களில் ஏற்படும் இழப்பைக் குறைக்கவும், மின் அனுப்புகை-வழங்கல் பணிகளுக்கு மேம்பாடுகளைச் செய்வதற்கு நாங்கள் மிகவுயர்ந்த முக்கியத்துவம் கொடுத்திருக்கிறோம். இதற்காக ரூ.1,278 கோடி மொத்த முதலீட்டில் ஒரு பெருந்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. 1993-94 ல் **இதற்கான ஒதுக்கீடு ரூ.170 கோடியாகும். நமது குறிக்கோள், எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தற்போதைய இழப்பை 18 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகக் குறைப்பதேயாகும்.**

64. தமிழ்நாடு மின் வாரியம் எதிர்நோக்குகின்ற கடுமையான நிதி இடர்ப்பாட்டைப் பேரவை உறுப்பினர்கள் நன்கறிவார்கள். விவசாய பம்புசெட்டுகளுக்கு வழங்கப்படும் மின்சக்தியின் விலை ரூ. 802.87 கோடி ஆகும். இது யூனிட் ஒன்றுக்கு ரூ.1.62 என்ற மதிப்பில் வழங்கப்பட்ட 495.6 கோடி யூனிட்டுகளுக்கு உரிய விலையாகும். விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும் திட்டத்திற்குரிய செலவு இதுவேயாகும். இந்த இழப்பைச் சரிக்கட்ட மாநில அரசு தமிழ்நாடு மின் வாரியத்திற்கு ரொக்க உதவித் தொகையாக ரூ.350 கோடி வழங்குகிறது. மேலும், அரசிடமிருந்து மின்வாரியம் பெற்றுக் கொண்ட கடன்கள் மீதான வட்டி வகையில் அரசுக்குச் சேர வேண்டிய ரூ.100 கோடியையும் அரசு தள்ளுபடி செய்கிறது. எஞ்சிய தொகையை தமிழ்நாடு மின்வாரியமே ஈடுசெய்து கொள்ள வேண்டும். பண்ணைகளுக்குச் சொந்தமான பம்பு செட்டுகளுக்கு தமிழ்நாடு மின்வாரியம், யூனிட் ஒன்றுக்கு மின் கட்டணமாக 50 காசு விதிக்க வேண்டுமென்று மத்திய அரசு தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. இக் கட்டண விதிப்பை 31.3.1993க்கு

முன்னர் நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும் மத்திய அரசு கருத்துத் தெரிவித்துள்ளது. ஒவ்வோராண்டும் 40,000 பம்பு செட்டுகளுக்குப் புதிதாக மின் இணைப்பு வழங்கும் திட்டத்திற்குக் கடனுதவி பெறுவது கடினமாகியுள்ளது. இப்பிரச்சினை குறித்து உழவர்களின் பிரதிநிதிகளுடன் நாங்கள் விரிவாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தியுள்ளோம். 1992 பிப்ரவரியில் ஒரு தடவையும், மீண்டும் 1993 பிப்ரவரியில் மற்றொரு தடவையுமாக நிலக்கரியின் விலை திருத்தியமைக்கப்பட்டதால் மின் உற்பத்திச் செலவு கூடியுள்ளது. இரயில்வே சரக்குக் கட்டணங்களும் அதிகரித்துள்ளன. மாநிலத்தின் நிதி ஆதாரங்கள் வலுவற்றுள்ள இந்நிலையில், அரசு இதற்காக தமிழ்நாடு மின் வாரியத்திற்குத் தற்போது வழங்கி வருகின்ற உதவித் தொகையான ரூ.350 கோடிக்கு மேற்பட்டு கூடுதலாக உதவித் தொகை வழங்கும் நிலையில் இல்லை. கடந்த ஓர் ஆண்டில் ஏற்பட்டுள்ள விலையேற்றத்தையாவது சரிக்கட்டியாக வேண்டும். வசதி படைத்த விவசாயிகள் இடுபொருள்களுக்குத் தகுந்த விலை செலுத்துவதற்கும், தங்களது உற்பத்திப் பொருட்களுக்கு ஆதாயமுள்ள சந்தை விலையைப் பெறுவதற்கும் ஆர்வத்தோடு முன்வர வேண்டும். மின்சாரத்தை இலவசமாக வழங்குவதால் அதனை வீணாக்க வாய்ப்பு ஏற்படுகிறது. இந்தப் பிரச்சனை குறித்து மேலும் பரிசீலித்து விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் ஐயமில்லை.

65. வழக்கத்திற்கு மாறான புதிய முறைசாரா எரிசக்தி ஆதாரங்களின் மேம்பாட்டிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கவிருக்கின்றோம். வரும் ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி மேம்பாட்டுத் திட்டம் மேலும் 2 வட்டாரங்களில் விரிவு படுத்தப்படும். தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் (TEDA) 1993-94 ல் 30 கிலோவாட் சூரிய ஒளி மின்சக்தி உற்பத்தி நிலையம் ஒன்றை ஏற்படுத்தும். சூரிய வெப்பத்தினால் நீரைச் சூடுபடுத்தும் ஏற்பாட்டையும் நாம் மக்களிடையே பிரபலப்படுத்த இருக்கின்றோம்

# சாலைகளும் சாலைப் போக்குவரத்தும்

66. சாலைகள் குறித்த நிதியொதுக்கீடு 1990-91 ஆம் ஆண்டு ரூ.166.87 கோடியாக இருந்தது; 1993-94 ஆம் ஆண்டில் இந்நிதியொதுக்கீடு ரூ.330.39 கோடியாக இருக்கும். சாலைகளுக்கான ஒதுக்கீடு 1993-94 இல் மோட்டார் வண்டி வரியின்மூலம் பெறப்படும் தொகையைக் காட்டிலும் அதிகரிக்கிறது.

67. முதல் தடவையாக 1992-93 ஆம் ஆண்டில் சாலைகள் பராமரிப்பிற்காக, ஒன்பதாம் நிதிக்குழு வரையறை செய்த நெறிமுறை அளவுக்கு அதிகமாகவே ஒதுக்கீடு அமைந்திருப்பதை உறுப்பினர்கள் இங்கு நினைவுகூரலாம். **1992-93 ஆம் ஆண்டில் சாலைகளின் பராமரிப்பிற்காக வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்கம் ரூ.125 கோடியாக இருந்தது. இது 1993-94 ஆம் ஆண்டில் ரூ.155 கோடியாக இருக்கும்.** சாலைகளின் முறையான பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்கு நாங்கள் தொடர்ந்து எந்த அளவிற்கு முக்கியத்துவம் அளித்துள்ளோம் என்பதை இது புலப்படுத்தும்.

68. கடந்த காலங்களில் சாலைகள் தகுந்த அளவில் பராமரிக்கப் படாமல் இருந்ததைக் கருத்திற் கொண்டு, மொத்தம் ரூ.150 கோடி ஒதுக்கீட்டுடன் 5 ஆண்டுகளில் முடிக்கக் கூடிய **சிறப்புப் பழுது பார்ப்புத் திட்டமொன்றைத் தொடங்கியிருந்தோம். இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு 1993-94 ஆம் ஆண்டில் தற்போதைய ஒதுக்கீட்டு அளவான ரூ.30 கோடியிலிருந்து ரூ.40 கோடியாக அதிகரிக்கப்படும்.**

1993-94 ஆம் ஆண்டில் 4,500 கி.மீ. சாலைகள் மேம்படுத்தப்படும். நடப்பாண்டில், தொழிற்சாலைகள் நிறைந்துள்ள பகுதிகளுக்கு அருகேயுள்ள சாலைகளைச் சிறப்பான முறையில் பழுதுபார்க்கும் புதிய திட்டம் ரூ.5 கோடி ஒதுக்கீட்டுடன் வருகின்ற ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

69. உலக வங்கியின் நிதியுதவியுடன் நடப்பாண்டில் ஊரகச் சாலைகள் துணைத் திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு விவசாய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நாங்கள் தொடங்கியுள்ளோம். ரூ.45.28 கோடி மொத்த நிதியொதுக்கீட்டுடன் 800 கிலோ மீட்டர் சாலைகளை நாங்கள் இத்திட்டத்தின் கீழ்க் கொண்டு வந்துள்ளோம். இத்திட்டம் செங்கை எம்.ஜி.ஆர்., தென்னார்க்காடு, வட ஆர்க்காடு அம்பேத்கார், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதே மில்லத் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

70. "மக்களுக்குப் பாலங்கள்" (Bridges to People) கட்டும் புதிய திட்டமொன்றைத் தொடங்க நாம் முடிவு செய்துள்ளோம். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒரு பாலம் கட்ட ரூ.5 இலட்சத்திற்கு மிகாமல் ஒதுக்கப்படும். 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் பாலங்களைக் கட்ட இத் திட்டத்திற்காகும் மொத்தச் செலவு ரூ.11.70 கோடியாக இருக்கும். ஒவ்வொரு தொகுதியிலும் நிலையான சொத்து உருவாக்கப்படுவதை உறுதி செய்யும் இப்புதிய திட்டத்தை, இம் மன்றத்தின் உறுப்பினர்கள் பெரிதும் வரவேற்பார்கள் என்று உறுதிகொள்கிறேன். தமிழ்நாட்டில் புதிய சாலைகள் அமைக்கும்

திட்டத்திற்கான வளவாய்ப்புக் குறித்து உலக வங்கியின் மேலாண்மை இயக்குநருடன் முதலமைச்சர் அவர்கள் அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். சுமார் 5,000 கி.மீ. நீளமுள்ள சாலைகளை வலுப்படுத்தவும், மேம்படுத்தவும் ரூ.500 கோடி தற்காலிக ஒதுக்கீட்டுடன் . கூடிய இத்திட்டத்திற்கு உலக வங்கி ஆதரவு நல்கும்படி அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

71. மத்திய சாலை நிதியில் கூடுதலாகச் சேர்ந்துள்ள நிதியை, சாலைகளின் மேம்பாட்டுக்காக மாநில அரசுகளுக்குக் கணிசமாகக் கொடுத்துதவ வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேறியுள்ள போதிலும், மத்திய அரசு இத் தீர்மானத்தைச் செயற்படுத்த முன்வராதது எங்களுக்குப் பெரிதும் கவலையளிப்பதாக உள்ளது. மத்திய அரசு, இந்நிதியை மாநிலங்களுக்குக் கொடுத்துதவ வேண்டிய கடமை உள்ளது. இந்நிதி மாநில அரசுக்குப் பல தவணைகளில் அளிக்கப்பட்டாலும் கூட, இம் மாநிலத்தில் விரைவில் சாலை மேம்பாட்டை நாம் உறுதி செய்ய முடியும் என்று கருதுகிறோம். இம்மாநிலத்தில், சென்னை-மதுரை, சென்னை-பெங்களூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலைகளை நான்கு வழித்தடங்களாக அமைப்பதற்கு முன்னுரிமை அளிக்குமாறு நாங்கள் மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்துவோம். நில அமைப்பின் மூலம் முக்கியத்துவம் உடைய கிழக்குக் கடற்கரையோர நெடுஞ்சாலையையும், நாகப்பட்டினம் - கூடலூர் - மைசூர் நெடுஞ்சாலையையும் தேசிய நெடுஞ்சாலையாகத் தரமுயர்த்த வேண்டுமென்று மத்திய அரசை வேண்டுகிறோம்.

72. பேருந்துப் போக்குவரத்துக் கழகங்கள் தற்போது இழப்பை எதிர்நோக்கி இருக்கின்றன; 1993-94 ல் இவை ரூ.125 கோடி இழப்பைச் சரிசெய்ய வேண்டியுள்ளன. 1992 செப்டம்பரில் டீசல் விலையில் ஏற்பட்ட உயர்வே இதற்குக் காரணமாகும். அந்நியச் செலாவணியை ரூபாய் மதிப்புக்கு முழு அளவில் மாற்றிக் கொள்ளத் தக்க வகையில் செய்யப்பட்ட செலாவணி முறைமாற்றத்தையடுத்து,

டீசலின் விலை மேலும் உயராமல் பார்த்துக்கொள்ள மத்திய அரசை நாங்கள் வலியுறுத்துவோம். 1992 செப்டம்பரில் டீசல் விலையைக் கடைசியாக உயர்த்திய பின்னர், பேருந்துக் கட்டணங்களை நாங்கள் இன்னும் திருத்தியமைக்கவில்லை. இது, போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாட்டைப் பாதிக்கிறது.

## சுற்றுச் சூழல்

73. சுற்றுச் சூழல் பாதுகாப்பு நாம் பெருங்கவனம் செலுத்துகின்ற பொருள்களில் ஒன்றாக தொடர்ந்து இருந்து வருகிறது. நிரந்தர வளர்ச்சிக்கு உறுதி செய்ய இயலும் வகையில், நம்முடைய வளர்ச்சித் திட்டச் செயல்முறையை நாம் வகுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை நாம் எடுத்துவருகிறோம்.

74. சுற்றுச் சூழலைப் பாதுகாக்கப் புதிய நடவடிக்கைகளை எடுப்பதில் தமிழ்நாடு முன்னோடியாக உள்ளது. சுற்றுச் சூழல் நிலைமையைக் கண்காணிப்பதிலும், அதனைப் பாதுகாப்பதிலும் பயனுள்ள பங்கினை ஆற்றும் பொருட்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வலுப்படுத்தப்பட்டுள்ளது. **ரூ.5 கோடி செலவில், கட்டிடங்கள் மற்றும் தேவையான சாதனங்களுடன் 8 மாவட்ட ஆய்வுக் கூடங்களை ஏற்படுத்துவோம்.** இத்திட்டத்திற்கு ஆதரவு அளிக்குமாறு நாங்கள் உலக வங்கியைக் கேட்டுக் கொண்டுள்ளோம். மணலியில் அவசர கால இடர் உதவி நிலையம் ஒன்றை ஏற்கெனவே அமைத்துள்ளோம். 1993-94 **ஆம் ஆண்டில் மணலியில், சுகாதாரக் கேட்டினை உண்டாக்கும் கழிவுப் பொருட்களை அகற்றும் வசதியை ஏற்படுத்தவும் முடிவு செய்துள்ளோம்.**

75. நம்முடைய நீர் ஆதாரங்களை மாசு ஏற்படாமல் பாதுகாக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

இந்நோக்கத்திற்காக, காவிரியில் மாசு கலக்காமல் பாதுகாக்கும் பெருந் திட்டமொன்றை நிறைவேற்ற நாங்கள் கருதியுள்ளோம். ரூ.332 கோடி செலவிலான இத்திட்டம், மத்திய அரசின் அனுமதியை எதிர்பார்த்திருக்கிறது. **கங்கை, யமுனை நதிகளில் மாசு கலக்காமல் காப்பதற்காக மத்திய அரசு பெருந் திட்டங்களை ஏற்கெனவே மேற்கொண்டுள்ளது. காவிரித் திட்டத்தையும், நிதியுதவிக்காக வெளிநாட்டு பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று நாங்கள் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம்.**

76. **உதகமண்டலம் ஏரியில் மாசு ஏற்படுத்தும் கழிவுப் பொருட்களைச் சேர்க்கின்ற அனைத்து வாயில்களையும் தடுக்கும் வகையில், ரூ.10 கோடி செலவில் பெருந் திட்டமொன்றை செயற்படுத்தி வருகிறோம்.** ஏரியில் தூர் வாருவது உட்பட, இத்திட்டப் பணி, 18 மாதக் கால அளவில் முடிவடையும் என்று நாங்கள் நம்புகிறோம். **கோடைக்கானல் ஏரியில் மாசு கலக்காமல் தடுக்கவும் திட்டமொன்றைச் செயற்படுத்துவோம்.**

## நகர்ப்பகுதி மேம்பாடு

77. தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை நாம் செயற்படுத்தி வருகிறோம். இது, உலக வங்கியின் நிதியுதவி பெறும் பெருந்திட்டமாகும். **இத்திட்டம் ரூ. 632 கோடி மொத்தச் செலவில் 1995 செப்டம்பரில் முடிக்கப்படவுள்ளது. 1993-94 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.150 கோடியாக இருக்கும்.**

78. **நகராட்சிகளின் பல்வேறு திட்டங்களுக்கு நிதியுதவி செய்ய, நகராட்சி நகர்ப்பகுதி மேம்பாட்டு நிதி (MUDF) ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.** எல்லா நகராட்சிகளும், அனைத்து வகையான நடவடிக்கைகளுக்காக தமிழ்நாடு நகர்ப்பகுதி நிதியுதவி அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தை அணுக இயலும் வகையில், இதற்கென அமர்த்தப்பட்ட ஒரே அமைப்பாக ஆக்க, இத்திட்டத்தை அதனுடன் இணைக்க நாம் திட்டமிடுகிறோம். நகராட்சிப் பகுதிகளின் தேவைகளுக்காக ஒரே இடத்தில் பரிசீலனை செய்து நிதியுதவி அளிக்கும் இந்நடவடிக்கை பெரிதும் வரவேற்கப்படும் என நான் உறுதியாக நம்புகிறேன். நகராட்சி **நகர்ப்பகுதி மேம்பாட்டு நிதியமைப்பு 1993-94ல் ரூ60 கோடி முதலீட்டிற்கான திட்டங்களுக்கு நிதியுதவியளிக்கும்.**

79. நகர்ப்பகுதி வளர்ச்சி என்பது பல்வேறு வசதிகளை மட்டும் அமைத்துத்தருவதுடன் நின்றுவிடுவதில்லை. நகர்ப்பகுதி ஏழை மக்களின் நிலையையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது. **வருமான அதிகரிப்புத் திட்டங்களின் மூலம் நகர்ப் பகுதிகளில் 58,533 பயனடைவோர்களுக்கு நாம் இதுவரை நிதியுதவியளித்துள்ளோம். ஏழைகளுக்கான இன்றியமையாத அடிப்படை வசதிகளை வழங்க நகர்ப்பகுதி அடிப்படைப்பணிகள் திட்டத்தை நாம் தொடங்கியுள்ளோம்.** ரூ.3.76 கோடி ஒதுக்கீட்டில் 1993-94 ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். **1.3 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு நகர்ப்பகுதி அடிப்படை வசதிகளை இது வழங்கும்.**

80. உலர் கழிப்பிடங்களை நீரடிக் கழிப்பிடங்களாக மாற்றவீட்டுவசதி நகர்ப்பகுதி வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் பெரும் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளோம். இத்திட்டத்தின் கீழ்

*1995* மார்ச் மாதத்திற்கு முன்னர் அனைத்து நகராட்சிகளிலும் *100* சதவீதம் என்ற அளவுக்கு இந்தப் பணியைச் செய்து முடிக்கக் கருதப்பட்டுள்ளது. *1992-93* ஆம் ஆண்டில் *27,280* கழிப்பிடங்கள் மாற்றப்பட்டுள்ளன. *1993-94* ஆம் ஆண்டில் மேலும் *80,000* கழிப்பிடங்கள் மாற்றப்படும்.

## சென்னை மாநகர் மேம்பாடு

*81.* சென்னை மாநகரை நாட்டின் முதன்மையான மாநகராக்கிட "எழில்மிகு சென்னை - *2000*" என்னும் திட்டத்தைச் செயலாக்கியுள்ளோம். இரண்டாவது சென்னைக் குடிநீர் வழங்கல் சுற்றுப்புறத் துப்புரவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முதல் முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூ.*1,100* கோடியளவில் தீட்டப்பட்டுள்ளது. உலக வங்கி **இத்திட்டத்திற்கு ஆதரவளிக்குமென நாங்கள் எதிர்பார்க்கிறோம். இத்திட்டத்தின் வாயிலாக, சென்னை மாநகரின் நீர் வழிகளை மேம்படுத்தும் பணியையும் நாம் மேற்கொள்ள இயலும்.**

*82.* ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் இம்மாநகரில் மின் வழங்கல் நிலைமையை மேம்படுத்த நவீனத் திட்டமொன்று செயல்படுத்தப்பட்டுவருகிறது. இத்திட்டத்திற்காகும் மொத்தச் செலவு ரூ.*225* கோடியாகும். முதல் முறையாக எரிவாயு மின் துணை நிலையங்கள் ஏற்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு *1993-94* ல் ஒதுக்கீடு ரூ.*36.58* கோடியாக இருக்கும்.

*83.* இம்மாநகரில் பயணிகள்-சரக்குகள் போக்குவரத்து வசதியின் தரத்தை மேம்படுத்துவது மூன்றாவது முக்கியக் குறிக்கோளாகும். இத்திட்டத்தில் விரிவான சாலை வடிவமைப்பு மற்றும் மேம்பாடு, போக்குவரத்து நெரிசல் ஏற்படுத்தும் தடைகளை அகற்றுதல், புதிய போக்குவரத்து மேலாண்மை ஏற்பாடு ஆகியவை

அடங்குகின்றன. இத்திட்டத்திற்கு 1993-94 ல் ஒதுக்கீடு ரூ.70 கோடியாக இருக்கும்.

84. மிக அதிகமாக மழை பொழியும் போது, அனைத்துப் பகுதிகளிலும் வெள்ளம் சூழப்பட்டு மாநகரில் வெள்ள நீர் வழிந்தோட இயலாத வடிகால் பிரச்சினையை இம்மாநகரம் சந்திக்க வேண்டியிருக்கிறது. மாநகரின் வடிகால் வசதியை மேம்படுத்த விரிவான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுவருகிறது. தொழில்நுட்ப அறிக்கைகள் தயாரான உடனேயே நாங்கள் தேவையான நிதியை வழங்குவோம்.

85. மாநகரில் நெரிசலைக் குறைப்பதற்கும், புறநகர் வளர்ச்சிப் பணிகளுக்கும் உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. புற நகர்ப் பகுதிகளின் அருகே புதிய நகர்ப் பகுதிகள் திட்டமிடப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

86. சென்னை மாநகரைச் சிறந்த வாழ்விடமாக உயர்த்திட, 1993-94 வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் ரூ.171 கோடியுட்பட, சென்னை மாநகருக்கென மொத்தம் ரூ.275 கோடி முதலீடு செய்யப்படும்.

## வீட்டு வசதி

87. "ஒவ்வொரு குடும்பத்திற்கும் சொந்தமாக ஒரு வீடு இருக்க வேண்டும்" என்பது இந்த அரசின் குறிக்கோளாக இருந்து வருகிறது. புதிய வீட்டு வசதிக்காக மேம்படுத்தப்பட்ட மனைத் தொகுப்புகள், முன்கூட்டியே கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் எளிதில் கிடைத்தல், வீடுகட்டப் போதுமான நிதியுதவி கிடைக்கச் செய்தல் ஆகிய மும்முனைக் கொள்கையை நாம் கடைப்பிடித்து வந்துள்ளோம். வீட்டு வசதி விரைவான வளர்ச்சியினையடைய இயலும் வகையில்,

அரசு அமைப்புகள், தனியார் துறை ஆகிய இரண்டுக்கும் ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

88. வீட்டு வசதியைப் பெருக்கும் வகையில், மேம்படுத்தப்பட்ட மனைகள் கிடைக்க ஏற்பாடு செய்வது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் முக்கியப் பணியாகும். **தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1993-94 ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களின் மூலம் 10,000 மேம்படுத்தப்பட்ட மனைகளை வழங்கும். மேலும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1993-94 ஆம் ஆண்டில் 10,200 வீடுகளைக் கட்டி முடிக்கும்.**

89. 1993-94 ஆம் ஆண்டில் குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பெருந் திட்டத்தின்கீழ்த், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 20,000 குடும்பங்களை இத்திட்டத்தின்கீழ்க் கொண்டுவரும். விரைவுபடுத்தப்பட்ட குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 10,000 குடும்பங்கள் பயனடையும். 5,000 குடும்பங்களுக்கு வீடு வழங்கப்படும். வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய ஆற்றங்கரைகளில் வாழும் 55,000 குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் ரூ.105 கோடி ஒதுக்கீட்டுடன் கூடிய மனையிடங்கள்-பணிகள் குறித்த சிறப்புத் திட்டம் ஒன்று நிதியுதவி அளிப்பதற்காக வெளிநாட்டு மேம்பாட்டு அமைப்பிற்கு (ODA) அனுப்பி வைக்கப்படுகிறது.

90. கூட்டுறவு வீட்டு வசதி இணையம், நகர்ப்பகுதி கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலமாக நகர்ப்பகுதிகளில் 10,000 வீடுகள் கட்டப்படுவதற்கு வகை செய்யும். ஊரக வீட்டு வசதியைப் பொறுத்தவரையில், வட்ட அளவிலான வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்களும், **மாநில இணையமும், 1993-94 ஆம் ஆண்டில் 30,000 வீடுகளைக் கட்டி முடிக்க வசதியளிக்கும்.**

91. கிராமப் பகுதிகளில் வீடுகளை நிலை உயர்த்தும் திட்டத்தின் (SHUPRA) முதற்கட்டமாக 30,000 வீடுகளை நிலை உயர்த்தும் பணியை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். 1993-94 ல் மேலும் 30,000 வீடுகளை நிலை உயர்த்தும் பணியை மேற்கொள்வோம். நடப்பாண்டில் பல்வேறு திட்டங்களின் கீழ் 1.1 இலட்சம் குடும்பங்களுக்குப் புதிய வீடுகளைக் கட்டித் தரும் பணிக்கு ஆதரவு அளிக்க இயலும் என்பதை நான் கோடிட்டுக் காட்டியுள்ளேன். வரும் ஆண்டில் இந்த எண்ணிக்கை உயர்த்தப்பட்டு, 1.25 இலட்சம் குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும்.

92. கிராமப்பகுதி ஏழை மக்களுக்கு, இலவச வீட்டு மனைகள் வழங்கும் 3 ஆண்டுத் திட்டம் ஒன்றைத் தொடங்க முடிவுசெய்துள்ளோம். தற்போது இத்திட்டம் ஆதி திராவிடர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோர்க்குப் பயனளிக்கும். கிராமப் பகுதி ஏழைமக்கள் அனைவரும் இப்புதிய திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படுவர். இலவச வீட்டுமனைகள் பெறுவதற்குத் தகுதிபெறுவதற்கான வருமான வரம்பு ஆண்டுக்கு ரூ.6,400 ஆகும். இதனை நாங்கள் ஆண்டுக்கு ரூ.9,000 ஆக உயர்த்துவோம். இத்திட்டத்திற்காக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.8.6 கோடி ஒதுக்கியுள்ளோம்.

93. போதிய கடன் வசதி கிடைக்காததே வீட்டு வசதித் திட்டத்திற்கு உள்ள முக்கியமான பிரச்சினையாகும். வீட்டு வசதித் திட்டம் பெருமளவிலான தொழிலாளர்களுக்கு ஆதரவளிக்கும் ஒரு முக்கியமான பொருளாதார நடவடிக்கை என்பது அங்கீகரிக்கப் பட்டுள்ளது. வீட்டு வசதித் துறைக்கு அதிக கடன்நிதி ஒதுக்கீடு

செய்வது பற்றிய பிரச்சினையை நாங்கள் மத்திய அரசிடமும் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியிடமும் எடுத்துச் சொல்வோம்.

## கல்வி

*94.* இந்த வரவு-செலவுத் திட்டத்தில் கல்விக்காக மொத்தம் ரூ.*1,802* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் திட்ட ஒதுக்கீடான ரூ.*74.79* கோடியும் அடங்கும். கல்வி குறித்த ஒதுக்கீடு, வருவாய்க் கணக்கிலானச் செலவில் கிட்டத்தட்ட *22* சதவீதமாக அமைகிறது.

*95.* **வருமாண்டில் நாங்கள் *305* தொடக்கப் பள்ளிகளைப் புதிதாக ஏற்படுத்துவோம். இதன்மூலம், ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் அமைந்த *500* மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு குடியிருப்புகளுக்கும் ஒரு தொடக்கப்பள்ளி ஏற்படுத்தப் படுவதற்கு உறுதியளிக்கிறோம்.** மாநிலத்தில் பிறப்பு வீதம் குறைந்துள்ளதைக் கருத்திற்கொண்டு, கல்வி முறையில் நாம் தற்போது மேற்கொண்டுள்ள முன்னுரிமைகளைத் திருத்தியமைப்பது மிகவும் முக்கியமானதாகும். கல்வித் துறையில் தமிழ்நாட்டில் தனியானதொரு திட்டத்திற்கு நிதியுதவி அளிக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உலக வங்கியின் நிருவாக இயக்குநரைக் கேட்டுக்கொண்டுள்ளார். இத்திட்டம் தொடக்கப்பள்ளி முறையின் தரத்தில் மேம்பாட்டைக் கொண்டுவருவதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கும். விரிவான திட்ட அறிக்கையில் நாங்கள் தற்போது மேற்கொண்டும் மேம்பாடுகளைச் செய்துள்ளோம். கிட்டத்தட்ட ரூ.*1,200* கோடி மொத்தச் செலவில் இத்திட்டத்தை மேற்கொள்ள மத்திய அரசு உலக வங்கியின் நிதியுதவியை எங்களுக்குப் பெற்றுத்தரும் என்று நாங்கள் நம்புகிறோம்.

*96.* மாநிலத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் தொடக்கப்பள்ளிகளை ஏற்படுத்தும் பணி முடிவடைந்துள்ளது;

எனவே, **குழந்தைகளைக் கட்டாயமாகப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளவும், அவர்களைத் தொடர்ந்து படிக்க வைக்கவும் சட்டம் இயற்றுவதற்கு இது நல்ல தருணமென நாங்கள் கருதுகிறோம்.** இச்சட்டம், தற்போதைய சட்டத்தை மாற்றியமைத்து, **ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் குழந்தையைப் பள்ளிக்கு அனுப்பி வைப்பதைக் கட்டாயமாக்கும்.** பள்ளிப்படிப்பைப் பாதியிலேயே விட்டு விடுகிற பிரச்சினையைச் சமாளிக்கவும் ஒவ்வொரு குழந்தையும் அடிப்படைக் கல்வி எனும் அனுகூலத்தைப் பெறவும் இச்சட்டம் தெரிந்தெடுத்த சந்தர்ப்பங்களில் மட்டும் பயன்படுத்தப்படும்; **இம்மாநிலத்தில் கட்டாயக் கல்வி கற்கப் புதிய சட்டத்தைக் கொண்டுவரும் வகையில் எடுக்கப்பட்ட பரந்த விளைவைத் தரும் இந்த நடவடிக்கையை அவை உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்பார்கள் என்று உறுதி கொள்கிறேன்.**

97. பெரும் எண்ணிக்கையில் மாணவர்கள் இடைநிலைப் பள்ளி முறையில் சேர்வதன் பயனாக, அவர்களுக்கு நல்ல தரமான கல்வி அளிப்பதை உறுதி செய்யும் பிரச்சினை எழுந்துள்ளது. இந்த வரவு-செலவுத் திட்டம், 17 நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 10 உயர்நிலைப் பள்ளிகளை மேல் நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்த வகை செய்கிறது. சமுதாய அமைப்புகள் பங்கு கொள்ளும் புதிய திட்டமொன்றைத் தொடங்க நாங்கள் கருதியுள்ளோம். இத்திட்டத்தின் கீழ்ச் சமுதாய அமைப்புகள் வழங்கும் 50 சதவீதப் பங்குத் தொகையைக் கொண்டு புதிய பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்படும். எஞ்சிய தொகையை மாநில அரசு வழங்கும். **மேல்நிலைப்பள்ளி மாணவர்களும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களும் மாநிலம் முழுவதிலும் உள்ள பல்வேறு அரசுத் துறைகளில் உருவாக்கப்பட்டுள்ள கணினி வசதிகளைப் பயன்படுத்தி, இத்துறையில் தேர்ச்சி பெறும்**

புதிய திட்டம் (CIL) ஒன்றும் செயல்படுத்தப்படவுள்ளது.

98. எல்லோருக்கும் எழுத்தறிவிக்கும் இயக்கத்தின் ஓர் அங்கமாக, "அறிவொளி இயக்கம்" இதுவரையிலும் 12 மாவட்டங்களில் நீட்டிக்கப்பட்டுள்ளது. **அடுத்துவரும் ஆண்டில் 10 மாவட்டங்களில் இத்திட்டம் நீட்டிக்கப்படும். இவ்வாறாக, மாநிலம் முழுவதிலும் இத்திட்டம் நீட்டிக்கப்படும். மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் இத்திட்டத்தை நீட்டிப்பது குறித்து ஏற்படும் மொத்தச் செலவு ரூ.51.63 கோடியாக இருக்கும். இத்திட்டம் 86.08 இலட்சம் பேருக்குப் பயனளிக்கும்.** எழுத்தறிவு இயக்க நிலைக்குப் பிந்தைய இயக்கம் ஒன்றையும் நாங்கள் தொடங்கியுள்ளோம். எழுத்தறிவு இயக்கத்தின் மூலம் அடைந்த பயன்களை இந்த இயக்கத்தின் வாயிலாக உண்மையிலேயே தக்கவைத்துக் கொள்ள இயலும். **எழுத்தறிவு இயக்கத்துடன் சேர்த்து, கூடுதலாக 625 நூலகங்களையும் ஏற்படுத்தவுள்ளோம். அதன் மூலம் 5000 மக்கள் தொகைக்கும் அதிகமாக உள்ள ஒவ்வொரு குடியிருப்பிலும் ஒரு நூலகம் ஏற்படுத்தப்படும்.**

99. நடப்பாண்டில் **உலக வங்கி நிதியுதவியுடன் மொத்தம் ரூ.76 கோடி செலவில் தொழில் நுட்பப் பணியாளர் கல்வித் திட்டத்தைத்** தொடங்கியுள்ளோம். 55 பல்தொழில் நுட்பப் பயிலகங்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக 1993-94 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் ரூ.4.86 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*100.* பள்ளிக் கல்விக்குக், குறிப்பாகத் தொடக்கக் கல்விக்கு அதிக நிதி ஆதாரங்கள் கட்டாயத் தேவை இருப்பதைக் கருத்திற் கொண்டு, உயர் கல்விப் பணிகளில் தகுந்த கட்டணம் வசூலிப்பது அவசியமாகிறது.இம்மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகங்களுக் கிடையில் நடவடிக்கைகளைச் சிறந்த முறையில் ஒருங்கிணைக்கும் வகையில் மாநில உயர்கல்வி மன்றத்தை ஏற்படுத்தியுள்ளதை உறுப்பினர்கள் அறிவார்கள். பல்கலைக் கழக மானியக் குழு ஆதரவளிக்கும் பல்கலைக்கழகங்களின் திட்டப் பணிகளுக்குத் தேவையான உரிய பங்கை வழங்க, மாநில உயர்கல்வி மன்றத்திற்கு மேம்பாட்டு மானியமாக ரூ.*50* இலட்சம் வழங்கப்படும்.

*101.* **சென்னையில் ரூ.*40* கோடி செலவில் புதிதாக ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் ஒரு குறிப்பிட்ட கால அளவான 7 1/2 மாதங்களில் கட்டி முடிக்கப் பட்டுள்ளது. இந்த விளையாட்டரங்கம் முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கிற்கும், உறுதிப்பாட்டிற்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.** மாநிலத்தில், போட்டி விளையாட்டுக்களுக்கான ஒரு விரிவான கொள்கையை வகுக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். எல்லா விளையாட்டுக்களுக்கும், விளையாட்டுப் போட்டிகளுக்கும் தனி ஊக்கம் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். மாநிலத்தில் போட்டி விளையாட்டு வளர்ச்சிக்கென விளையாட்டுக்கள் வளர்ச்சி அதிகார மன்றத்தினை ஏற்படுத்தியுள்ளோம். விளையாட்டுகளில் சிறந்து விளங்கும் குழந்தைகளின் விளையாட்டுத் திறனை இளம் வயதிலிருந்தே ஊக்குவிப்பதற்கான புதிய திட்டமொன்றைத் தொடங்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். **புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத், திண்டுக்கல் -அண்ணா, இராமநாதபுரம், திருவண்ணாமலை -சம்புவராயர் ஆகிய ஆறு மாவட்டங்களில் ஒவ்வொன்றும்**

**ரூ60 இலட்சம் செலவில் விளையாட்டு மையம் மற்றும் விளையாட்டரங்க வளாகங்கள் நிறுவ நாங்கள் முடிவு செய்துள்ளோம்**, இத் திட்டம், மொத்தம் ரூ.3.60 கோடி செலவில் மத்திய அரசிடமிருந்து பெறும் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும்.

## தமிழ் வளர்ச்சி – பண்பாடு

102. தற்போது இயங்கிவரும் பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்து கலை-பண்பாட்டு இயக்ககம் ஒன்றை நாம் புதிதாகத் தோற்றுவித்துள்ளோம். அண்மையில் புதுப்பிக்கப்பட்ட அரும் பொருட்காட்சியக அரங்கில் திறமை மிக்க இளம் கலைஞர்களைக் கொண்டு புதிய நிகழ்ச்சிகளை இந்த இயக்ககம் அளித்து வருகிறது. **கிராமியக் கலைப் பயிற்சி ஆராய்ச்சி நிலையம் ஒன்று மதுரையில் ஏற்படுத்தப்படும்.**

103. மதுரையில் உள்ள இசைப் பயிற்சி நிலையத்துக்கென்று இடவசதி அளிக்க புதிய கட்டிடம் ஒன்று கட்டப்படும். **புதிதாக இசைப் பயிற்சி நிலையம் ஒன்று கோயம்புத்தூரில் ஏற்படுத்தப்படும்.**

104. நாடகக் குழுக்கள் நாடகம் நடத்தப் பேருந்துகளில் பயணம் செய்யும்போது, அவர்களுக்கு 50 சதவீத கட்டணச் சலுகை அனுமதிப்பதன் மூலம் இக்குழுக்களுக்குத் தனி ஊக்கம் அளிக்கப்படுகிறது.

105. பெருங்கடல்களிடையே கலம் செலுத்திய நமது வரலாற்றுச் சிறப்பை ஆவணப்படுத்துவதற்கான முன்னோடித் திட்டம், தேசியக் கடலியல் நிறுவனத்துடன் கூட்டாகச் சேர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. மதுரையில் உள்ள திருமலை நாயக்கர்

அரண்மனையைப் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். வரும் ஆண்டில் சரஸ்வதி மஉறால், தஞ்சாவூர் அரண்மனை ஆகியவற்றைப் புதுப்பிக்கவும், சீரமைக்கவும் நாம் நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கின்றோம்.

*106.* **மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்துள்ளவாறு, எட்டாம் உலகத் தமிழ் மாநாடு 1994 இல் தமிழ்நாட்டில் நடைபெறும் என்பதை அறிவதில், இம்மன்ற உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவார்கள். உலகமெங்கும் உள்ள தமிழ் அறிஞர்களும், வல்லுநர்களும் ஒரே இடத்தில் கூடுவதற்கு இது வகை செய்யும். இம்மாநாட்டை மிகப் பேரளவில் சிறப்புடன் நடத்துவதற்கு நாங்கள் தயாராகி வருகிறோம்.**

## சுகாதாரம் – குடும்பநலம்

*107.* பொருளாதாரக் கட்டமைப்பு நடவடிக்கைகளில், சுகாதாரத் துறைக்கு, குறிப்பாகத் தொடக்கச் சுகாதாரத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் காக்கப்படுவது முக்கியமானதாகும். **1993-94ல் சுகாதாரம்-குடும்பநலத்திற்கான ஒதுக்கீடு முன் எப்போதும் இருந்திராத உயரளவான ரூ.554.70 கோடியாக இருக்கும்.** மருந்துகளுக்கான நிதியொதுக்கம், நடப்பாண்டிற்கு இருந்த ரூ.70 கோடி என்ற அளவிலிருந்து, வருமாண்டிற்கு ரூ. 75 கோடி என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. **தொடக்கச் சுகாதார நலன், குடும்ப நலன் ஆகியவற்றுக்கான ஒதுக்கீடு 1992-93ல் ரூ.137.21 கோடி என்ற அளவிலிருந்து, 1993-94ல் ரூ.174.21 கோடி என்ற அளவிற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.**

*108.* நடப்பாண்டில் தொடக்கச் சுகாதார நிலையங்களில் மருந்துகள், மருந்துப் பொருட்களுக்கான நிதி ஒதுக்கத்தை

ரூ.40,000லிருந்து ரூ.50,000 ஆக நாம் உயர்த்தியுள்ளோம். 1993-94 ஆம் ஆண்டில் மருந்துகள், மருந்துப் பொருட்களுக்கான நிதி ஒதுக்கம், ரூ.50,000லிருந்து ரூ.75,000 ஆக உயர்த்தப்படும். இதற்காகும் கூடுதல் செலவு ரூ.3.37 கோடியாகும்.

109. 'புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா மருத்துவ நலத்திட்டம்' நம் நாட்டில் வேறு எங்கும் ஏற்படுத்தப்படாத மிகப் பெரிய நல்வாழ்வுத் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் 9226 முகாம்கள் நடத்தப்பட்டன. 51.6 இலட்சம் மக்கள் பயனடைந்தனர். இத்திட்டத்தையொட்டி, தாய் சேய் நல முகாம்கள் நடத்தும் புதிய திட்டம் ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1993-94 ஆம் ஆண்டில் 1600 முகாம்கள் நடத்தப்படும்.

110. உடல் நலம் அதிகம் பாதிக்கப்படும் நிலையிலுள்ள தாய்மார்களைக் கண்டறிந்து வல்லுநர்கள் நிறைந்த மருந்தகங்களுக்கு அனுப்பும் பணியை (referral service) உலக வங்கியின் நிதி ,உதவியுடன் செயல்படுத்தவுள்ளோம். இத்திட்டத்திற்கென ரூ.6.32 கோடி செலவில் தொடக்கச் சுகாதார நிலையங்களுக்கு 316 வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

111. நாங்கள் "யுனிசெப்" நிறுவனம், உலக வங்கி ஆகியவற்றிடமிருந்து கிடைக்கும் நிதியுதவியைக் கொண்டு, "ஈன்ற குழந்தையின் உயிர் காத்தல் மற்றும் பாதுகாப்பான தாய்மைப் பேறு" பற்றிய திட்டத்தைச் செயற்படுத்துகிறோம். சேலம், திண்டுக்கல் அண்ணா, மதுரை, காமராசர் ஆகிய மாவட்டங்களை இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரும் இரண்டாம் கட்டப்பணி, 1993 ஆம் ஆண்டில் தொடங்கப்படும். 8681

மருத்துவத் துணை நிலையங்கள் ஒவ்வொன்றும் அவற்றைச் சேர்ந்த சுகாதாரப் பணியாளர்களும் உரிய மருத்துவக் கருவிகள் அடங்கிய சிறு பெட்டி ஒன்றினையும், அடிப்படை மருந்துப் பொருட்களையும் பெறுவதற்கு உறுதி செய்யத் தேவையான நிதி ஒதுக்கியுள்ளோம். தடுப்பூசி போடுதல், வயிற்றுப்போக்கு நோய்களைத் தடுத்தல் ஆகியவற்றிற்குத் தொடர்ந்து முக்கியத்துவம் அளிப்போம்.

112. **வரும் நிதியாண்டில், "டேனிடா" நிறுவன நிதியுதவியுடன், தருமபுரி, நாகப்பட்டினம்-காயிதே மில்லத், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கும் சுகாதாரப் பாதுகாப்புத் திட்டமொன்றைத் தொடங்குவோம். இத்திட்டம் ரூ.34.83 கோடி செலவில் இந்த மாவட்டங்களில் தரம் உயர்த்தப்பட்ட தொடக்கச் சுகாதாரக் காப்புப் பணிகளை அளிக்கும்.**

113. தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு வட்டத்திலும் குறைந்தது 32 படுக்கை வசதிகளைக் கொண்ட பொருத்தமான ஒரு மருத்துவமனை அமைக்கும் திட்டத்தின் கீழ் 1993-94 ஆம் ஆண்டில் குறைந்தது 32 படுக்கை வசதிகளுடன் **மேலும் 14 வட்டங்களில் இவ்வகை மருத்துவமனைகள் ஏற்படுத்தப்படும். இத்திட்டம் நிறைவு பெறுவதன் மூலம், தமிழகத்திலுள்ள அனைத்து வட்டங்களிலும், இவ்வகை மருத்துவமனைகள் வகையிலான அடிப்படை வசதிகள் உருவாக்கப்படுவதற்கு வசதி செய்யப்படும்.**

114. மாவட்ட அளவில் குறைந்தது 200 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமன ஒன்றை எல்லா மாவட்டங்களிலும் ஏற்படுத்துவதும் எங்களுடைய திட்டமாகும். இத்திட்டத்தின் பகுதியாக திருவண்ணாமலையில் உள்ள அரசு மருத்துவமனையில் புதிதாக 48 படுக்கை வசதிகள் கொண்ட வார்டு ஒன்றினையும்,

விழுப்புரத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் 24 படுக்கை வசதிகள் கொண்ட வார்டு ஒன்றினையும் நிறுவ இருக்கிறோம்.

115. உலகவங்கி ஆதரவு பெறும் இந்திய மக்கள் தொகைத் திட்டம்-V நடப்பாண்டில் மதுரை, கோயம்புத்தூர் மற்றும் கூடுதலாக 6 நகராட்சிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. **1993-94 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.13.27 கோடி செலவில், இத்திட்டத்தினை நாங்கள் மேலும் 15 நகராட்சிகளுக்கு விரிவுபடுத்துவோம்.**

116. **உலகவங்கியின் நிதியுதவியுடன், 1993-94 ஆம் ஆண்டில் விழிப்புலன் இன்மைக்குறையைக் கட்டுப்படுத்தும் புதிய திட்டமொன்றைத் தொடங்குவோம். மொத்தம் ரூ.56 கோடி செலவாகும் இத்திட்டம், 6 ஆண்டுகள் கால அளவிற்கு மேற்கொள்ளப்படும். இதன் மூலம் விழிப்புலன் இன்மையைத் தடுத்துக் கட்டுப்படுத்துவதற்கான வசதிகள் முற்றிலும் நவீனப்படுத்தப்படும்.**

## குடிநீர் வழங்கல்

117. பாதுகாப்பான குடிநீர் வழங்கும் பணிக்கு உயர் முன்னுரிமை அளிப்பது மேலும் தொடரும். குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு இந்த வரவு-செலவுத் திட்டம் எப்போதும் இல்லாத அளவுக்கு மிக அதிகமாக ரூ.288.52 கோடி நிதி ஒதுக்கியுள்ளது.

118. இம்மாநிலத்திலுள்ள மக்கள் உறைவிடம் ஒவ்வொன்றிலும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரம் குறைந்தது ஒன்றேனும் இருக்குமாறு உறுதி செய்துள்ளோம். குடிநீர் வழங்கல் நிலைமையை மதிப்பிட புதிதாக ஆய்வு ஒன்று

தொடங்கப்பட்டுள்ளது. குடிநீர் வசதி ஓரளவே அளிக்கப்பட்டுள்ள உறைவிடங்களுக்கு முழு அளவில் தற்போது குடிநீர் வசதி அளிக்க இருக்கிறோம். இந்த அடிப்படையில் *37,833* குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளிக்கப்படவுள்ளது. **தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.47.68 கோடி செலவில் உலக வங்கியின் உதவியுடன் புதிய துணைத் திட்டம் ஒன்றை நாம் தொடங்கியுள்ளோம்.** வரும் ஆண்டில், துணைத் திட்டம், சேலம், தென்னார்க்காடு, தருமபுரி, திருவண்ணாமலை - சம்புவராயர் மாவட்டங்களுடன், திருச்சிராப் பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்படும். *1993-94* இல் *3,162* குடியிருப்புகள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும்.

*119.* *1992-93*ல் விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டத்தின்கீழ் மத்திய அரசு நமக்கு ரூ.*20.19* கோடி மட்டுமே ஒதுக்கியுள்ளது. மத்திய வரவு-செலவுத் திட்டத்தில் இத்துறைக்கு அறிவிக்கப்பட்ட கூடுதல் ஒதுக்கீட்டினால், *1993-94*ல் தமிழ்நாட்டிற்குக் குறைந்தது ரூ.*75* கோடியாவது நிதி ஒதுக்குமாறு நாம் மத்திய அரசை வலியுறுத்துவோம். இதன் வாயிலாக, ஊரக உறைவிடங்களுக்கு மிக விரைவாக இத்திட்டத்தின் கீழ்க் குடிநீர் வழங்க இயலும். *1993-94*ல் ஓரளவே குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ள *4,800* குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கல் வசதியளிக்க நாம் திட்டமிட்டுள்ளோம்.

*120.* கிராமப் பகுதியில் குடிநீர் வழங்கல் பணியில் காணும் ஒரு முக்கியமான பிரச்சினை அதனை உரியவகையில் பராமரிப்பதேயாகும். கிராமப் பகுதிகளில் கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகளைப் பராமரிப்பதற்கு நாங்கள் ரூ.*5.34* கோடி ஒதுக்கியுள்ளோம். 'யுனிசெப்' நிறுவனத்தின் ஆதரவுடன் வருகிற ஆண்டில் முன்னோடித் திட்ட அடிப்படையில் "இந்தியா மார்க் III"

பம்புகளை நிறுவவிருக்கிறோம். மேம்பட்ட இத்தகைய கைப்பம்புகளைக் கிராம அளவில் பராமரிக்கலாம்.

121. 1-4-1993 நிலவரப்படி, பத்மநாபபுரம் நீங்கலாக எல்லா நகராட்சிகளிலும், அடிப்படை குடிநீர் வழங்கல் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பத்மநாபபுரம் நகராட்சியில் குடிநீர் வழங்கல் திட்டப் பணிகள் நடந்தேறி வருகின்றன. நகரியங்களில் கத்திவாக்கம், மாதவரம் நீர் வழங்கல் திட்டம் சென்னை மாநகர குடிநீர் வழங்கல் திட்டத்துடன் எடுத்துக் கொள்ளப்படும். 1993-94ல், ரூ. 24.2 கோடி செலவில் 17 நகர்ப்பகுதி பேரூராட்சிகளும், 17 கிராமப்பகுதி பேரூராட்சிகளும் புதிய குடிநீர் வழங்கல் திட்டத்தின் வாயிலாகப் பயனடையும்.

122. உலக வங்கியின் நிதியுதவியுடன், ரூ.322 கோடி செலவில் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் திட்டம் 30-6-1993க்குள் முடிக்கப்பட வேண்டியுள்ளது. மேற்கொள்ளும் திட்டப் பணிகள் அனைத்தையும் முழுமையாக முடிக்க இயலும் வகையில், 1994 டிசம்பர் வரை இத்திட்டப் பணியை நீட்டிக்குமாறு உலக வங்கியைக் கேட்டுக் கொண்டுள்ளோம். மேற்சொன்ன புதிய திட்டப் பணிகள் 1993 ல் முடிக்கப்படும்போது, கடும் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள புதுக்கோட்டை, திருவண்ணாமலை, மணப்பாறை, சங்கரன்கோயில், காஞ்சிபுரம், பொள்ளாச்சி போன்ற நகரங்களுக்குப் போதிய அளவில் தண்ணீர் கிடைக்கும். ரூ.530 கோடி அளவில் விரிவான புதிய திட்டம் ஒன்றை உலக வங்கியின் ஆதரவுடன் நாம் மேற்கொள்ளக் கருதியுள்ளோம்.

**123. இராமநாதபுரம் மாவட்டத்திற்காக ரூ.44 கோடி செலவில் விரிவான குடிநீர் வழங்கல் திட்டம் ஒன்றை மத்திய அரசின் நிதியுதவியுடன் 1993-94ல் மேற்கொள்ளவிருக்கிறோம். உப்பு நீரைக் குடிநீராக்கும்**

தொழில்நுட்ப உத்தியைப் பயன்படுத்துவதே இத்திட்டத்தின் சிறப்பாகும். நாளொன்றுக்கு 38 இலட்சம் லிட்டர் திறன் கொண்ட உப்பு நீரைக் குடிநீராக்கும் இந்தியாவின் மிகப் பெரிய நிலையம் ஒன்று பாரத மிகு மின் நிறுவனத்தின் உதவியுடன் சாயல்குடியில் நிறுவப்படும்.

*124.* குடிநீர் வழங்கல் திட்டங்களுக்காக உள்ளாட்சி மன்றங்கள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்துவது என்பது தற்போதுள்ள மிகப் பெரிய பிரச்சினையாகும். உள்ளாட்சி மன்றங்கள் உரிய கால அளவில் தாங்கள் பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்தத் தவறுவதால், புதிய திட்டங்களை மேற்கொள்ள இயலாமல் போய்விடுகிறது. பொருத்தமான தண்ணீர்க் கட்டணங்களை விதிப்பதன் வாயிலாக நிதி நிலைமை சிறிது முன்னேற்றம் அடைந்துள்ளது. இந்நடைமுறை தொடர்ந்து செயல்படுத்தப்படும். நகர்ப்புற நிதியுதவி வழங்கும் ஒரே அமைப்பாகச் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்பகுதி நிதியுதவி அடிப்படைக் கட்டமைப்பு வசதி மேம்பாட்டுக் கழகத்திடம் **(TUFIDCO)** குடிநீர் வழங்கல் கழிவுநீரகற்றல் திட்டத்திற்காக கடன் வழங்குகின்ற மற்றும் கடன் தொகையை திருப்பி வசூலிக்கின்ற பணிப் பொறுப்புகளை ஒப்படைக்க முடிவு செய்துள்ளோம். தமிழ்நாடு நகர்ப் பகுதி நிதியுதவி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம், நிதி வகையில் நலிந்த நகராட்சிகளுக்கான கடன் நிவாரணத் திட்டம் ஒன்றைச் செயற்படுத்தும். அத்துடன் ஏனைய நகராட்சிகளிடமிருந்து உரிய கால அளவில் கடன் தொகையை வசூலிக்கவும், எல்.ஐ.சி., ஹட்கோ போன்ற கடன் வழங்கு நிறுவனங்களுக்குக் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தவும் உறுதி செய்யும்.

*125.* சென்னை மாநகரின் குடிநீர் ஆதார ஏரிகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் வடகிழக்குப் பருவமழை பொய்த்ததால்,

மாநகரில் ஒருநாள் விட்டு ஒருநாள் தண்ணீர் வழங்கும் ஏற்பாட்டைச் செயல்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. தண்ணீர்ப் பிரச்சினையைச் சமாளிக்க லாரிகளில் தண்ணீர் வழங்கவும், குடிநீர் வழங்கல் தொடர்பான ஏனைய பணிகளுக்கும் ஏற்கெனவே ரூ.24 கோடி அனுமதித்துள்ளோம். **மாநகரில் ஏற்பட்டுள்ள கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறை, இதற்கான நீண்டகாலத் தீர்வு காண முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட தனி முயற்சிகளின் அவசியத்தை சுட்டிக் காட்டுகிறது.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆந்திரப்பிரதேச முதலமைச்சருடன் 27.01.1993 அன்று பயனுள்ள வகையில் பேச்சுவார்த்தை நடத்தினார். **இதனால், தடைகள் நீங்கிப் பணிகள் முன்னேற்றமடைந்துள்ளன.** மூன்று மாதக்கால அளவில் தெலுங்கு கங்கைத் திட்டத்திற்காகச் செயல்முறை விதிகளைத் தயாரிக்க, தொழில்நுட்ப அதிகாரிகள் அடங்கிய குழு ஆய்வு ஒன்றை மேற்கொள்ளச் செய்வதற்கு ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் ஒப்புக் கொண்டுள்ளார். சென்னைக்குக் கிருஷ்ணா நதி நீர் 1995 சூன் மாதத்தில் கிடைக்கச் செய்வதை உறுதிசெய்ய, இத்திட்டத்திற்குரிய நிதியுதவியை உயர்த்தவும் ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் ஒப்புக் கொண்டுள்ளார். இந்த நிலையில்தான் கிருஷ்ணா நதி நீரைச் சுத்திகரித்து வழங்கவும், கழிவு நீரை அகற்றவும், இரண்டாவது சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் சுற்றுப்புறத் துப்புரவுத் திட்டத்தை முடித்துத் தருவதற்கு நிதியுதவுமாறு உலக வங்கியின் நிருவாக இயக்குநரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள். **ரூ.1,100 கோடி அளவிலான இப்பெருந்திட்டத்தை உடனடியாகப் பரிசீலனை செய்ய உலக வங்கி நிருவாக இயக்குநர் உறுதியளித்துள்ளார்.** ஆந்திரப்பிரதேசத்தில் அமைப்புப் பணிகளுக்கு ரூ.60 கோடியும், தமிழ்நாட்டில் அமைப்புப் பணிகளுக்கு ரூ.30 கோடியும் உள்ளடக்கிய தெலுங்கு கங்கைத் திட்டத்திற்கு ரூ.90 கோடி நிதி ஒதுக்க இந்த வரவு-செலவுத் திட்டம் வகைசெய்கிறது. கிருஷ்ணா நீரைச் சுத்திகரிக்க

ரூ.20 கோடி செலவில் நாளொன்றுக்கு 30 கோடி லிட்டர் நீரைச் சுத்திகரிக்கும் நிலையம் அமைக்கும் பணியை உலக வங்கி ஒப்புதலுடன் 1993-94-ல் நாம் மேற்கொள்ளவிருக்கிறோம். இது உலக வங்கி அனுமதி அளிக்க வேண்டிய ரூ.1,100 கோடி செலவு பிடிக்கும் புதிய திட்டத்தின் பகுதியாக அமையும்.

## மகளிர் மேம்பாடு, குழந்தை நலன், சத்துணவு

126. **ஒரு இலட்சம் மகளிர்க்குச் சுய வேலை வாய்ப்பளிக்க ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளோம்.** வேளாண்மை மேம்பாட்டிற்கான அனைத்து நாட்டு நிதியிலிருந்து கிடைக்கும் நிதி உதவியைக் (IFAD) கொண்டு தருமபுரி, தென்னார்க்காடு, சேலம் மாவட்டங்களில் இத்திட்டத்தை நாம் மேற்கொண்டுள்ளோம். வேளாண்மை மேம்பாட்டிற்கான அனைத்து நாட்டு நிதி மேலும் வழங்குவதாக உறுதி கூறியுள்ள நிதியுதவியைக் கொண்டு, நடப்பாண்டில் இத்திட்டத்தை மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தியுள்ளோம். ஒரு சில மாவட்டங்களில் முன்னோடித் திட்ட அடிப்படையில் இத்திட்டத்திற்கு நிதியுதவி நல்க உலக வங்கி தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துள்ளது. இத்திட்டத்திற்கு நிதி உதவியளிக்குமாறு மத்திய அரசையும் கேட்டுக் கொண்டுள்ளோம். இத்திட்டத்தை வரும் ஆண்டில் முற்றிலுமாகச் செய்து முடிக்க நாம் முயல்வோம். முதல்கட்டமாக இத்திட்டத்தின்கீழ் 90,000 மகளிர் குழுக்களாக அமைக்கப்பட்டுள்ளனர்.

127. பெண் குழந்தை ஒவ்வொன்றுக்கும் வளமான மகிழ்ச்சியான வாழ்க்கை அமையப் பெறுவதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுள்ளார் என்பதை நாம் அனைவரும் அறிவோம். மிகக் கொடியதான பெண் சிசுக்கொலை வழக்கத்தை வேரோடு களைவது நம் நோக்கமாகும். இந்நோக்கத்துடன்தான் "அரசு தொட்டில் திட்டம்"

தொடங்கப்பட்டது. "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. **ஜெயலலிதா பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டமும்" தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

128. புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் அதனோடு இணைந்த திட்டங்களுக்கு மொத்தம் ரூ.312 கோடி நிதி ஒதுக்கீட்டிற்கு இந்த வரவு-செலவுத் திட்டம் வகை செய்கிறது. இத்திட்டங்களின் பயன் மேலும் பலருக்குச் செல்லும் வகையில் திட்டத்தை மேம்படுத்தவும் விரிவாக்கவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். இத்திட்டப் பணியாளர்கள் 2,35,500 பேருக்கு வழங்கப்படும் மதிப்பூதியம் 1.11.1992 முதல் திருத்தப்பட்டுள்ளது. இதன் மூலம், இதற்காகும் ஆண்டுச் செலவு ரூ. 3.07 கோடியாகும். இந்தப் பணியாளர்களின் பணி நிலைமைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

129. ஊரகப் பகுதிகளில் சத்துணவுத் திட்டத்தை மிகப்பெரிய அளவில் மேம்படுத்த உலக வங்கியிடமிருந்து நாம் நிதியுதவி பெற்றுள்ளோம். நாங்கள் 6 மாதம் முதல் 36 மாத வயதுடைய குழந்தைகளுக்குச் சத்துணவு மற்றும் உடல் நலக் கவனிப்பு வசதிகள் அளிக்கும் வகையில் இத்திட்டத்தினை விரிவுபடுத்தியுள்ளோம். உடல் நலப் பாதிப்பு ஏற்படும் நிலையில் உள்ள கருவுற்ற தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் இத்திட்டத்தின் கீழ்ப் பயனடைந்துள்ளனர். தருமபுரி, தென்னார்க்காடு மாவட்டங்கள் 1992-93 ல் இத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளன. 1993-94 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள் இத்திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்படும்.

# ஆதி திராவிடர் பழங்குடியினர் நலன்

*130.* ஆதி திராவிடர்களுக்கான புதிய *10* அம்சத் திட்டத்தைச் செயற்படுத்துவதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தற்சார்பும் அடிப்படை வசதிகளும் அமைந்த இத்திட்டத்தை *1993-94* ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்துவோம்.

*131.* கல்வி வசதிகளின் மேம்பாட்டிற்கு நாம் தனி முக்கியத்துவம் கொடுத்துள்ளோம். கல்வித்தரம் உயர உறுதி செய்யும் வகையில் வகுத்த சிறப்புத் திட்டம் நல்ல பயன்களைத் தந்துள்ளது. இதன் மூலம் **ஆதி திராவிடர் மாணவர்களில், 1992 மார்ச்-ஏப்ரலில் நடைபெற்ற பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் எண்ணிக்கை முன்பிருந்ததைக் காட்டிலும் 20 சதவீதத்திற்கு மேல் உயர்ந்துள்ளது. இந்த முயற்சி தொடரும். 1993-94 ஆம் ஆண்டில் 20 புதிய மாணவரில்லங்கள் தொடங்கப்படும். 1993-94 ஆம் ஆண்டில் தற்போதுள்ள மாணவரில்லங்களில் கூடுதலாக 1000 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.**

*132.* பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் உயர்ந்த முன்னுரிமை அளிக்கப்படும். **இதனால், 1993-94 ஆம் ஆண்டில் 70,000 பேர் பயனடைவார்கள். தற்சார்புத் தொழில் முனைவோர்களின் சிறப்புத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. ரூ200 கோடி மொத்த முதலீட்டைக் கொண்டுள்ள இத்திட்டத்தின் கீழ், 200 தொழில் முனைவோர்கள் நிதியுதவி பெறுவார்கள்.**

கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களில் இரண்டு தனித் தொழிற்பேட்டைகளை ஏற்படுத்தும் திட்டம் இதில் அடங்கும். ஒவ்வொரு தொழிற்பேட்டையிலும் 100 ஆதி திராவிடர் தொழில் முனைவோர்கள் தாங்கள் நிருவகிக்கவிருக்கும் தொழிற்கூடங்களை ஏற்படுத்துவார்கள். **மொத்தம் ரூ.46 கோடி ஒதுக்கீட்டைக் கொண்டு, பட்டுப்புழு வளர்க்கும் திட்டம் ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 8,000 ஆதி திராவிடர்கள் பயன்பெறுவார்கள். 1,000 ஆதி திராவிடர் குடும்பங்களுக்குப் பயன்தரும் மற்றொரு பெரும் திட்டம் ரூ.100 கோடி ஒதுக்கீடு கொண்ட இறால் வளர்ப்புத் திட்டமாகும்.** வளமான சிந்தனைகளைத் தேக்கி உருவாக்கியுள்ள இச்சிறப்புத் திட்டங்களுக்குப் பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் உதவியை நாங்கள் கோரியுள்ளோம்.

## பிற்படுத்தப்பட்டோர் நலன்

133. ஆளுநர் உரையில் முன்பே தெரிவித்துள்ளபடி, பிற்படுத்தப்பட்டோருக்கான மொத்த இட ஒதுக்கீட்டை 50 சதவீதமாகக் குறைப்பது பற்றியும், இட ஒதுக்கீடு வழங்குவதில் பின்தங்கிய வகுப்பினரிடையே முன்னேற்றம் அடைந்தவர்களை நீக்கிவிடுவது பற்றியும் உச்ச நீதி மன்றம் அளித்துள்ள உத்தரவை மறு ஆய்வு செய்யும்படி கேட்டுக் கொள்ள அரசு தீர்மானித்துள்ளது. அனைத்து வகையான சமூகக் கொந்தளிப்புகளிலிருந்தும் விடுபட்டு நிற்கிற தமிழ்நாட்டில் அந்நிலை தொடர்ந்து நிலவப் பாதுகாப்பளிப்பதே இதன் நோக்கமாகும். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை ஆராய நிரந்தரமான குழு ஒன்றும் அமைக்கப்படும்.

*134.* பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்குப் போதிய கல்வி வசதிகளுக்கு வகை செய்வதே எங்களுடைய தலையாய முயற்சியாக இருக்கும். **மாணவிகளுக்கென்றே *20* புதிய இல்லங்கள் *1993-94*ல் தொடங்கப்படும்.** வருகிற ஆண்டில் மாணவியருக்கென்று *24* இல்லங்கள் உட்பட மொத்தம் ரூ.*9.17* கோடி செலவில் *66* புதிய இல்லங்களுக்கான கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படும் என்று நாங்கள் உறுதி கூறுகிறோம். *1993-94* ஆம் ஆண்டில் ரூ.*35* இலட்சம் செலவில் சிறப்புப் பயிற்சி நிறுவனம் ஒன்றைப் புதிதாகக் கட்ட நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம். ஆண்டொன்றுக்கு ரூ.*24,000* ஆக இருந்த வருமான உச்சவரம்பையும் *1992* டிசம்பரில் நாங்கள் நீக்கியுள்ளோம். இதனால், திறமை வாய்ந்த மாணவர்கள் அனைவரும் சிறப்புப் பயிற்சி நிறுவனத்தில் சேர இயலும்.

*135.* நடப்பாண்டில், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் வருவாய் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைப் புதிதாகத் தொடங்கியுள்ளோம். **மேலும், பல திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக இக்கழகத்திற்கு, வரவு-செலவுத் திட்டத்தில் சமவீதப் பங்குத் தொகையாக ரூ.*1* கோடிக்கு நாங்கள் வகை செய்துள்ளோம்.** *1993-94*ல் மேலும் பல திட்டங்களை மேற்கொள்வதற்காகப், புது டில்லி, தேசிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நிதியுதவி மேம்பாட்டுக் கழகத்திற்கு நாங்கள் செயற்குறிப்புகளை அளித்துள்ளோம்.

## நெசவாளர் நலன்

*136.* நெசவாளர் நலனுக்கு இந்த வரவு-செலவுத்திட்டம் பெருமளவில் ஆதரவு அளித்துள்ளது. கிராமப்புற நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும், நகர்ப்பகுதிகளில்

வறுமையில் வாடும் ஏழை மக்களுக்கும் இலவச வேட்டிகள், சேலைகள் ஆகியவற்றை வழங்குவதற்கான இத்திட்டம் ரூ.45 கோடி செலவில் 1992-93 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. **1993-94 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ.45 கோடிக்கு வரவு-செலவுத் திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்த உற்பத்தி அளவான 60 இலட்சம் வேட்டிகளும், 60 இலட்சம் சேலைகளும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலம் இம்மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படவுள்ளன. கைத்தறித் துணிகளின் தள்ளுபடி விற்பனைக்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.40.86 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.**

137. கைத்தறிகளைப் படிப்படியாக விசைத்தறிகளாக மாற்றும் திட்டத்தின்கீழ், 1992-93 ஆம் ஆண்டில் 5,000 விசைத்தறிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 1993-94 இல் மேலும் 10,000 விசைத்தறிகள் அறிமுகப்படுத்தப்படும். அதே சமயத்தில், 14,000 விசைத்தறிப் பிரிவுகளுக்குப் பயனளிக்கும் வகையில்,தற்போது சிறிய விசைத்தறிப் பிரிவுகளுக்கு யூனிட் ஒன்றுக்கு ரூ.1.75 ஆக உள்ள மின்கட்டண வீதம், யூனிட் ஒன்றுக்கு ரூ.1.00 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், கைத்தறியை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் ரூ.1 கோடி நிதியொதுக்கீட்டில் 8,582 கைத்தறிகள் நவீனப்படுத்தப்படும்.

138. கைத்தறித் துறையில் பல்வேறு நடவடிக்கைகளுக்காக கடன் வசதி பெறுவது பிரச்சனைகளை உருவாக்கியுள்ளது. எனவே, நாங்கள் நெசவாளர்களுக்காக ஒரு வங்கியை ஏற்படுத்த முடிவு செய்துள்ளோம். இந்நடவடிக்கைக்கு, இந்திய ரிசர்வ் வங்கி, வேளாண்மை-ஊரக வளர்ச்சி தேசிய வங்கி ஆகியவற்றிடம் நாங்கள் அனுமதியை எதிர்பார்க்கிறோம்.

*139. நெசவாளரின் குடும்பத்திற்கு மாதமொன்றுக்கு ரூ.250 வழங்கும் ஓய்வூதியத் திட்டமொன்றை 1.1.1992 முதல் இவ்வரசு செயல்படுத்தியுள்ளது. நெசவாளர்களுக்கு ஈட்டுறுதித் தொகை ரூ.10,000 லிருந்து ரூ.15,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.* ***நெசவாளர்களின் சேமிப்பு-பாதுகாப்புத் திட்டத்திற்கான அரசு பங்குத் தொகையை 1.4.1993 முதல் 1 ரூபாய் ஊதியத்திற்கு 3 காசு என்பதிலிருந்து 4 காசாக நாங்கள் உயர்த்த உள்ளோம். 1993-94 ல் 1,500 நெசவாளர் வீடுகள்-தறிக் கூடங்கள் கட்டவிருக்கிறோம்.***

## தொழிலாளர் நலன்

*140. மத்திய அரசின் புதிய பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் குறிப்பாக மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள அண்மைக்கால மாற்றங்கள் தொழிற் கட்டமைப்பிற்கும், சீரமைப்பிற்கும் வழிவகுக்கும் என்பது தவிர்க்க முடியாத உண்மையாகும். எந்தச் சூழ்நிலையிலும் தொழிலாளர்கள் நலம் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பது எங்களுடைய தெளிவான கருத்தாகும். தேசியப் புதுப்பிப்பு நிதிக்கான வழிகாட்டி நெறிமுறைக் குறிப்புகளை அண்மையில் மத்திய அரசு வெளியிட்டுள்ளது. மாநிலத் தொழிலாளர் மறுவாழ்வு நிதியை நாங்கள் ஏற்கெனவே ஏற்படுத்தியுள்ளோம். தொழிலாளர் நலனைப் பேணிக் காக்கும் வகையில் இந்நிதிக்கு ரூ.50 கோடியை மாற்றும்படி மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம். தேசியப் புதுப்பிப்பு நிதியிலிருந்து நிதியுதவி பெறவிருக்கும் தனிப்பட்ட திட்டங்கள் ஒவ்வொன்றும் மத்திய அரசின் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும் என்று இப்போது தெரிய வருகிறது. இதற்குத் தகுந்த வழிகாட்டும் நெறிமுறைக் குறிப்புகளை வகுத்துத்தந்து இதற்குரிய முகவரமைப்பாக மாநில நிதியை நியமனம் செய்வது மிகப் பொருத்தமானதாக இருக்கும்.*

*141.* பாதகமான சூழ்நிலைகளுக்கிடையேயும் கூட, மூடிக்கிடந்த தொழிற்சாலைகளை, மீண்டும் தொடங்குவதன் மூலம் தொழிலாளர் நலனுக்கு உறுதி செய்தது இந்த அரசேயாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் விளைவாக, ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ், பின்னி ஆகிய நிறுவனங்கள் மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளன. 1991 ஏப்ரல் திங்களிலிருந்து செயல்படாமல் இருக்கும் வடலூர் சேஷசாயி இண்டஸ்டரீஸ் நிறுவனமும் இந்த மாத இறுதிக்குள் மீண்டும் செயல்படத் தொடங்கும். துணி ஆலைத் தொழிலாளர்களின் ஊதியக் கொடை விவகாரம் இணக்கமான முறையில் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

*142.* தொழிலாளர்களின் அன்றாட வாழ்க்கைச் செலவு உயர்ந்திருப்பதைக் கருத்திற் கொண்டு, குறிப்பாக **தேர்ச்சி பெறாத தொழிலாளர்களுக்கு இதுவரை இருந்துவந்த குறைந்த அளவு நாள் ஊதியம் 15 ரூபாய் என்பதற்குப் பதிலாக, 1.2.1993 முதல் குறைந்த அளவு ஊதிய வீதங்கள் குறித்த அனைத்து அறிவிக்கைகளிலும் குறைந்த அளவு நாள் ஊதியம் 20 ரூபாய் என்று வகை செய்யப்படும் என்று அரசு முடிவு செய்துள்ளது. வேளாண் தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களும் விரைவில் திருத்தியமைக்கப்படும்.**

*143.* **கேடுபயக்கும் கொடிய குழந்தைத் தொழிலாளர் பிரச்சினையைச் சமாளிக்க இவ்வரசு பொறுப்பு ஏற்றுக் கொண்டிருப்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சுட்டிக் காட்டியுள்ளார்கள்.** குறிப்பாகக் காமராசர் மாவட்டத்திலுள்ள தீப்பெட்டித் தொழிலில் காணப்படுகின்ற பிரச்சினையைக் கருத்திற்கொண்டு பல்வேறு குழுக்கள் இப்பிரச்சினையை ஆராய்ந்துள்ளன. 'யூனிசெஃப்'

நிறுவனத்துடன் கூட்டாகச் சேர்ந்து மற்றொரு குழு இப்பிரச்சினையை விரிவாக ஆராய்ந்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 5 ஆண்டுகளில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணச் சிறப்புத் திட்டம் ஒன்றை மேற்கொள்ள நாங்கள் முடிவு செய்துள்ளோம். இத்தகைய திட்டம் நடைமுறை நோக்கில் அமைந்திருக்கும் என்றும், இதில் சம்பந்தப்பட்டுள்ள அனைவரின் உடன்பாடான ஆதரவைப் பெற்றிருக்கும் என்றும் நாங்கள் முழுமையாக நம்புகிறோம். குழந்தைத் தொழிலாளர்களில் 80 சதவீதம் பேர் பெண் குழந்தைகளாக இருக்கின்றனர் என்பதை முக்கியமாகக் குறிப்பிட வேண்டியுள்ளது. எனவே, நாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது எல்லாவற்றைக் காட்டிலும் மிகவும் முக்கியமானதாக இருக்கிறது.

இத்திட்டம் பின்வரும் 4 முக்கியக் கூறுபாடுகளைக் கொண்டிருக்கும்:

*கட்டாயக் கல்விக்கான சட்டம் இயற்றப்படுவதைத் தொடர்ந்து குழந்தைகளை வேலைக்கு அனுப்புவதற்குப் பதிலாகப் பள்ளிக்கு அனுப்பும்படி ஒவ்வொரு பெற்றோரும் சட்டபூர்வமாகக் கட்டுப்படுத்தப் படுவர்.

*கையால் தயாரிக்கப்படும் தீக்குச்சித் தொழிற் பிரிவுகள் அனைத்தும் விற்பனை வரிவிலக்குச் சலுகையைப் பெற்று வருகின்றன. இனி, இத்தொழிற் பிரிவுகள் ஒரு குறிப்பிட்ட கால வரம்புக்குள், குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதைப் படிப்படியாகக் குறைத்தால் மட்டுமே, இந்த விற்பனை வரிவிலக்குச் சலுகையைத் தொடர்வது பற்றிப் பரிசீலிப்போம்.

*குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதால் ஏற்படும் தீமைகளுக்கு எதிராகச் சமூகத்தை ஒருங்கு திரட்டுவது, கருத்துக்களை எடுத்துக் கூறுவது, அக்கருத்துக்களுக்குச் செவிசாய்த்து நடக்கச் செய்வது ஆகியவற்றுக்கான பெருந் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும். இதனால், இத் தீய பழக்கத்திற்கு எதிரான சமூக விழிப்புணர்வை மக்களிடையே வளர்க்க இயலும்.

*இந்தப் பகுதியில் மகளிரின் பொருளாதார மேம்பாட்டுக்கான புதிய திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும்.

*144.* இம் மாநிலத்தில் குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துகின்ற பழக்கம் படிப்படியாக ஒழிக்கப்படுவதற்கு உறுதிசெய்யும் இத்திட்டத்தை இம்மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என்று கருதுகிறேன். இந்தச் சோதனை நடவடிக்கை வெற்றி பெறுமானால், அதனையடுத்து, குழந்தைத் தொழிலாளர்கள் நிரம்பிய அளவில் வேலையில் அமர்த்தப்படுகின்ற வேறு இடங்களிலும் இப்பிரச்சினையைத் தீர்க்க நாங்கள் முயல்வோம்.

## ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டம்

*145.* இந்த அரசு மற்ற எல்லாத் திட்டங்களைக் காட்டிலும், ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. இவ்வரசுக்கு நிதி நிலைமை நெருக்கடியாக இருந்தபோதிலும், ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் பெயரளவில் மட்டும் இருந்து விடக்கூடாது என்பதையும், அவர்களுக்கு உண்மையான சமூகப் பாதுகாப்பளிக்கும் வகையில் அத்திட்டங்களை மேம்படுத்த வேண்டும் என்பதையும் உறுதி செய்வதற்கு, இந்த அரசு முறையாக மேற்கொண்ட திட்டமிட்ட முயற்சியை இது எடுத்துக் காட்டுவதாக உள்ளது. ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவற்கு உறுதி செய்ய நாங்கள் தொடர்ந்து பாடுபடுவோம். இவ்வரசுக்குப் பலவகையிலும் நிதி நெருக்கடிகள் இருந்தபோதிலும், ***1993-94 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கு உரிய நிதி ஒதுக்கீடு, முன்***

**எப்போதும் இருந்திராத அளவில், அதாவது, ரூ.1400 கோடி என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதை அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். 1991-92 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டளவான ரூ.990 கோடியுடன் ஒப்பிடுகையில், இது மிகையாகும்.**

146. ஏழை மக்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் முக்கியமான கூறுகள் வருமாறு:-

* உணவுப் பொருள் வழங்கலில் உத்தரவாதம்

* சத்துணவு

* ஏழை மக்களுக்கான தொடக்கச் சுகாதார வசதிகள் மற்றும் மருந்துப் பொருட்கள்

* குழந்தைகள் அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளிப்பதற்கான சிறப்பு முதலீடுகள்

* சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள்

* ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குதல்

* அடிப்படைக் குடிநீர் வசதியை ஏற்படுத்தல்

* வீடில்லாதவர்களுக்கு வீட்டு வசதியும் புகலிடமும் அளித்தல்

* நலிவடைந்த பிரிவினருக்கான சிறப்புத் திட்டங்கள்

147. 1993-94 ஆம் ஆண்டில் செய்யப்பட்டுள்ள மொத்த முதலீடு, முந்தைய ஆண்டுகளின் முதலீடுகளைவிட பெருமளவு உயர்ந்துள்ளது. நிதி நெருக்கடி மிகக் கடுமையாக இருந்த நிலையிலும், கட்டமைப்புச் சரிக்கட்டல் நடவடிக்கைகளுக்கிடையே ஏழை மக்களுக்கு உண்மையில் பாதுகாப்பு அளிக்க உறுதி பூண்டுள்ள இந்த அரசின் மனத் துணிவையே இது காட்டுகிறது.

# கடன் திட்டம்

148. பொருளாதாரத்தின் நிதிப் பிரிவுச் செயல்பாட்டை மேம்படுத்த, மத்திய அரசு சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தேசிய வங்கிகளின் மூலதன அடிப்படையை வலுப்படுத்தி, அவற்றின் பங்குகளில் பொதுமக்கள் முதலீடு செய்ய அனுமதிக்கும் அதே நேரத்தில், அந்த வங்கிகளின் மீதுள்ள சமூகக் கட்டுப்பாடு தளர்ந்து விடாமல் பார்த்துக் கொள்ளப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். **முன்னுரிமைத் துறைகளுக்கு 40 சதவீதக் கடன்தொகை வழங்கப்படும் என்று அளிக்கப்பட்ட உறுதிமொழி, வருங்காலத்தில் எவ்வித மாற்றமுமின்றிப் பின்பற்றப்பட வேண்டும் என்றும் நாங்கள் வலியுறுத்துவோம்.**

149. மாநிலத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஏற்ற வளவாய்ப்புள்ள இணைப்புத் திட்டங்களை வேளாண்மை-ஊரக வளர்ச்சி தேசிய வங்கி தீட்டியுள்ளது. இத்திட்டங்கள் மாவட்டக் கடன் திட்டத்திற்கு அடிப்படையாக அமைகின்றன. கடன் வழங்கு நடவடிக்கைகளுக்குத் தேவையான போதிய அடிப்படை ஆதரவுப் பணிகளுக்கு வகை செய்வதை உறுதி செய்வதன் மூலம் இந்த நடைமுறையை நாங்கள் வலுப்படுத்துவோம். 1993-94 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகின்ற அதிகாரப் பரவல் முறையில் அமைக்கப்பட்ட மாவட்ட வளர்ச்சித் திட்டம், ஏழை மக்களுக்குப் பயன் தரும் கடன் வழங்கு நடவடிக்கைகளுக்குத் தேவையான அடிப்படை ஆதரவுப் பணிகளுக்கு வகை செய்யக்கூடிய துணைப் பகுதி ஒன்றைக் கொண்டிருக்கும். இந்த மாற்றம், வழங்கப்படும் கடன்களும், வளர்ச்சிச் செலவினங்களும் ஏழை மக்கள் பயனடையக் கூடியவாறு சிறப்பான வகையில் ஒருமுகப்படுத்தப்படுவதற்கு உதவும்.

150. 1993-94ஆம் ஆண்டிற்கான கடன் திட்டம் ரூ. 2500 கோடிக்கும் அதிகமாக இருக்கும். இடுபொருட்களின் விலை உயர்வைச் சமாளிக்கவும், வேளாண்மையில் அதிக அளவு மூலதன முதலீடு செய்யவும் உழவர்களுக்குப் போதிய கடன் தொகை வழங்குவதை உறுதி செய்ய வேண்டியுள்ளது. இதற்கு வகைசெய்ய வேளாண்மை ஊரக வளர்ச்சி தேசிய வங்கி, வங்கி அமைப்புகள் ஆகியவற்றுடன் கலந்தாலோசித்துச் செயல்பட முயற்சி செய்வோம்.

## வேலை வாய்ப்பு

151. வேலை வாய்ப்பு அளிப்பதற்காக நாம் உருவாக்கியுள்ள திட்டச் செயல்முறை, 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலிருந்து தெரிய வந்த வேலைவாய்ப்பு குறித்த போக்கினைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டதாகும். இந்தத் திட்டச் செயல் முறையின் முதல் பகுதி, முதன்மைத் துறையில் வளர்ச்சியை விரைவு படுத்துவதாகும். முதன்மைத் துறையில் "உயர் வருமானம் தரும் வளர்ச்சிக் கொள்கையை" மேம்படுத்துவோம். வேலைவாய்ப்புகளைப் பல முனைப்படுத்தி, வேளாண்மை-ஊரக வளர்ச்சி தேசிய வங்கியின் ஒத்துழைப்புடன் கிராமப் பகுதிகளில் பண்ணைத் தொழில் அல்லாத பிற துறைப் பணிகளுக்குப் பெரும் முக்கியத்துவம் அளிக்கும் திட்டமொன்றை 1993-94-ல் தொடங்கவிருக்கிறோம். இதைத் தவிர, ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம், உழவுத் தொழிலாளர்களுக்குப் போதிய வருமானம் கிடைக்க வகை செய்து அதிக அளவில் வேலை வாய்ப்பு அளிப்போம். ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் 1993-94 ல் 672 இலட்சம் மனித உழைப்பு நாட்களுக்கு வகை செய்யும். 1993 **ஜனவரியில் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை நாம் தொடங்கியுள்ளோம் என்பதை இம் மன்றத்தின் உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இது மாநில அரசின்**

**திட்டம். இத்திட்டம் தருமபுரி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தை வரும் ஆண்டில் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திற்கு நீட்டிக்க இருக்கிறோம். இதற்கென்று வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.15 கோடி தனி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** இத் திட்டத்திற்கு தேசியப் புதுப்பிப்பு நிதியிலிருந்து ஆதரவு அளிக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுள்ளோம்.

152.. இரண்டாம் துறையில் நான் ஏற்கெனவே கோடிட்டுக் காட்டியுள்ள பல்வேறு திட்டங்களும், திட்டப் பணிகளும் உரிய நடவடிக்கைகளுக்கு மிகப் பெரும் அளவில் வாய்ப்பளிக்கும். குறிப்பாகத் தொழில் வளர்ச்சிக்கு நாங்கள் எடுத்துள்ள முயற்சிகள் புதிய வேலை வாய்ப்புகளைத் தோற்றுவிப்பதன் மூலம் பலனளிக்கத் தொடங்கும். நமது மாநிலத்தில் கட்டுமானத் தொழிலில் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் வகையில் கட்டுமானத் தொழிலுக்குப் பெருமளவில் ஊக்கம் அளித்துள்ளோம். பரந்த அளவில் வேலை வாய்ப்புகளைத் தோற்றுவிக்க உதவும் வகையில் **கிராமத் தொழில் துணைத் திட்டம் (RISP)** ஒன்றைத் தொடங்கியுள்ளோம். ஒரு இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்க இத் திட்டம் வகை செய்யும். 1.39 இலட்சம் பேருக்கு உதவியளித்ததன் மூலம் இந்தத் திட்ட இலக்கை நாங்கள் விஞ்சியுள்ளோம். 1993-94 ஆம் ஆண்டிலும் நாங்கள் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவோம்.

153. மூன்றாம் துறையில் நல்ல வளர்ச்சியை நாம் காண முடிகிறது. இருந்தபோதிலும், படித்து, வேலைவாய்ப்பற்று இருப்போரின் பிரச்சினையை சமாளித்தாக வேண்டியுள்ளது. இறுதியில் பொருளாதார வளர்ச்சி மட்டுமே ஆதாயம் தரத்தக்க வேலை வாய்ப்பைத் தோற்றுவிக்க முடியும். இம் மாநிலத்தில் வளர்ச்சி

நடவடிக்கையை விரைவுபடுத்துவதே எங்களுடைய கொள்கையாகும். இதற்கிடையே, படித்து, வேலை வாய்ப்பற்றிருப்பவர்களைப் பயன்தரும் சமூகப் பணிகளில் ஈடுபடுத்துகின்ற ஒரு வாய்ப்பாக ஒரு புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளோம். **இதன் கீழ்ப் பள்ளிசாராக் கல்வி, மதுவிலக்குக் கொள்கை விளக்கம் ஆகிய இரண்டு பணிகளும் எடுத்துக் கொள்ளப்படும்.** இப்போதுள்ள வேலையற்றோர் நிவாரணத் திட்டம் சீரமைக்கப்படும். படித்து வேலையற்றுள்ள இளைஞர்களும் இளம் பெண்களும் இந்தச் சமூகப் பயன்பாட்டுத் திட்டத்தில் ஈடுபடுத்தப்படுவார்கள். **இதில் 15 இலட்சம் இளைஞர்கள் பங்கு கொள்வார்கள். தற்போதுள்ள திட்டப்படி அவர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியம் 50 சதவீதம் உயர்த்தப்படும்.** அவர்கள் கற்பிக்கின்ற ஒவ்வொரு குழந்தைக்கும் இவ்வளவு தொகை என்ற வீதத்தில் இந்த மதிப்பூதியம் வழங்கப்படும். வேலைவாய்ப்பகம் ஒன்றில் பதிவு செய்து ஐந்தாண்டுகளுக்கு மேலாகியுள்ளவர்களும் கடந்த மூன்றாண்டுக் காலம் முழுமையாக நிவாரணத் தொகை வாங்கியிராதவர்களுமான பட்டதாரிகள், மேனிலைப் பள்ளிக் கல்வி (+2) இடைநிலைப் பள்ளிக் கல்வி (S.S.L.C.) தேர்ச்சி பெற்ற அனைவரும் இந்தத் திட்டத்தில் சேருவதற்குத் தகுதி உடையவர்கள். **இப்புதிய திட்டத்திற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.** இந்தப் பெருந்திட்டம் சமுதாயத்திற்குப் பயன்படுகிற திட்டமாக இருக்கும் என்பதோடு, படித்து வேலை வாய்ப்பு இல்லாமல் இருப்போருக்கு ஆதாயம் தரத்தக்க வேலைவாய்ப்பினையும் அளிக்கும்.

## அரசு அலுவலர் நலன்

*154.* அரசு அலுவலர்களின் பணி நிலமைகளைப் பொறுத்தவரை இந்த அரசு தொடர்ந்து ஒரு நியாயமான

கொள்கையைப் பின்பற்றி வருகின்றது. நடப்பாண்டில் கடுமையான நிதி நிலை நிலவியபோதிலும் அரசு அலுவலர்களின் பல்வேறு கோரிக்கைகளை இவ்வரசு கனிவுடன் பரிசீலித்து முடிவுகளை அறிவித்துள்ளது. அரசுப் பணியாளர்களின் பல்வேறு அமைப்புகளுடன் விரிவான பேச்சு வார்த்தை நடத்திய பின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீண்டகாலப் பயன் அளிக்கும் வகையில் அரசு அலுவலர்களின் ஊதிய விகிதங்களையும் பணி நிலைமைகளையும் மேம்படுத்த முனைந்துள்ளார்கள். இந்தப் பேச்சு வார்த்தைகளி ன் அடிப்படையில் ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதில் ஏற்பட்ட முரண்பாடுகள் முழுமையாக நீக்கப்பட்டுள்ளன. மாநில அரசின் முந்தைய ஊதிய விகிதத்திலிருந்து மத்திய அரசின் ஊதிய விகிதத்திற்கு மாற்றி உறுதி செய்யும் நோக்கத்துடன் தாராளமான முடிவுகளை இவ்வரசு எடுத்துள்ளது. இந்த மாற்றம் தற்போது வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. அரசு அலுவலர்கள் ஊக்கத்துடன் பணியாற்றும் வகையில் பல புதிய பதவி உயர்வுகளுக்கானத் திட்டங்கள் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்களுக்கான ஆண்டுச் செலவு ரூ. 50 கோடியாகும்.

155. அரசு அலுவலர் அமைப்புகளுடன் முதலமைச்சர் பேச்சு வார்த்தை நடத்தியபொழுது அவர்கள் நிதி நிலை அறிக்கையில் வீட்டு வாடகைப் படியை மேம்படுத்தும் வகையில் ஒரு திட்டம் அறிவிக்கப்படும் என்று தெரிவித்தார்கள். மத்திய அரசின் வீட்டு வாடகைப்பட தொகையைப் பொறுத்துவரை அதிகமாக இருந்தாலும் அது நகர எல்லைக்குள் உட்பட்ட பகுதிகளில் உள்ளவர்களுக்கு மட்டுமே பயன் அளிக்கும் வகையில் வரையரை செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் வீட்டு வாடகை படி விதிகளை நாம் அப்படியே பின்பற்றுவோம் என்றால் நகராட்சி எல்லைப் பகுதிக்கு அப்பால் வசிக்கக் கூடிய அரசு அலுவலர்கள் தற்போது பெற்று வருகின்ற பலன்களை இழக்கக் கூடிய நிலை ஏற்படும். இதனைக் கருத்தில் கொண்டு தற்போது மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வீட்டு

வாடகைப்படி வழங்கும் முறையை தொடர்ந்து கடைபிடிப்பது என்றும், அதே நேரத்தில் அளிக்கப்படும் தொகையை உயர்த்துவது என்றும் இவ்வரசு முடிவு செய்துள்ளது. இதன் அடிப்படையில் வீட்டு வாடகைப்படி கீழ்கண்டவாறு உயர்த்தி வழங்கப்படும்.

| பகுதி | தற்போது வழங்கக்கூடிய வீட்டு வாடகைப் படி | | திருத்தியமைக்கப் பட்ட வீட்டு வாடகைப்படி | |
|---|---|---|---|---|
| | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | குறைந்து பட்சம் | அதிக பட்சம் |
| *பிரிவு - 1* | | | | |
| சென்னை மாநகரம் | *65* | *515* | *125* | *800* |
| மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்கள் | *50* | *300* | *75* | *450* |
| *பிரிவு - 2* | | | | |
| மாவட்டத் தலைநகரங்கள்/ நகரங்கள் | *40* | *225* | *60* | *350* |
| *பிரிவு - 3* | | | | |
| வட்டாரத் தலைநகரங்கள்/ நகரங்கள் | *25* | *125* | *40* | *250* |
| *பிரிவு - 4* | | | | |
| ஏனைய நகரங்கள் - தற்போது கிராம ஈட்டுப்படிக்கு தகுதியான பகுதிகள் | *20* (ஒட்டுமொத்தமாக) | | *30* | *100* |

இவ்வாறு வீட்டு வாடகைப்படியை உயர்த்துவதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஏற்படும் கூடுதல் செலவு ரூ. 33 கோடியாகும்.

156. அரசு பணியாளர்கள் வீடு கட்டக் கடன் உதவி அளிப்பதில் மிகுந்த தேக்கநிலை காணப்பட்டுள்ளது. 1992 - 93 - ம் ஆண்டில் இத்திட்டத்திறகென ஒதுக்கப்பட்ட ரூ. 25 கோடியை 1993 - 94 ஆம் ஆண்டில் ரூ. 34.5 கோடி அளவிற்கு உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. இந்த உயர்ந்த ஒதுக்கீட்டின் பயனாக தேங்கியுள்ள விண்ணப்பங்கள் கணிசமான அளவிற்கு குறையும் இது தவிர, பொது நிதி நிறுவனங்களிடமிருந்து இத்திட்டத்திற்கென ரூ. 30 கோடி அளவிற்கு நிதியுதவி பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த கூடுதல் நிதியுதவியும் கூடிய விரையில் கிடைக்க வகை செய்யப்படும். வீடு கட்ட வழங்கப்படும் முன் பணத்தின் அளவினை மிகப் பெரிய அளவில் உயர்த்தியதன் விளைவாக பெரும்பாலான விண்ணப்பதரார்கள் பயன் பெறுவர் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

157. உயர் கல்விக்கான செலவினங்கள் அதிகரித்துக் கொண்டு வருவதால் அரசு அலுவலர்களின் பிள்ளைகளுக்கென வழங்கப்படும் கல்வி முன்பணத்தினை உயர்த்தி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது தொழில் நுட்ப பள்ளிகளில் பயிலும் அலுவலர்களின் பிள்ளைகளுக்கென வட்டியில்லா முன்பணமாக ரூ. 750/வழங்கப்பட்டு வருகின்றது. இது ரூ. 1000/- மாக உயர்த்தி வழங்கப்படும். அதேபோல் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் பள்ளைகளுக்கென தற்போது வழங்கப்படும் முன்பணமாக ரூ.1500/- ரூ.2000/-மாக உயர்த்தி வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் தொழில் கல்லூரிகளில் பயிலும் பிள்ளைகளுக்கென ஒரு புதிய பிரிவு ஏற்படுத்தப்படும். இந்தப் பிரிவினர்களுக்கு தற்போது வழங்கப்ட்டு வரும் கல்வி முன் பணம் ரூ.1500-லிருந்து ரூ.2500/- ஆக உயர்த்தி வழங்கப்படும். இந்தத்

திட்டத்தினை மேம்படுத்துவதன் காரணமாக அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஏற்படும் கூடுதல் செலவு ரூபாய் ஒரு கோடியாகும்.

*158.* திவிர நோயினால் அவதியுறும் அரசுப் பணியாளர் நலனுக்கென ஏற்கெனவே அரசு அலுவலர் நல்வாழ்வு நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் அரசு அலுவலர்கள் குறிப்பிட்ட அறுவை சிகிச்சை வசதிகளைப் பெற ரூ.25,000/- மானிய உதவி வழங்கப்படுகின்றது. மருத்துவச் செலவினங்கள் கணிசமான அளவிற்கு உயர்ந்துள்ளதாலும் அரசு அலுவலர்களின் குடும்பங்களுக்கு ஏற்படும் பொருளாதார நெருக்கடியை குறைக்கும் வகையிலும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானியத்தின் அளவினை ரூ. 25,000-லிருந்து ரூ.50,000 அல்லது அறுவை சிகிச்சைக்கான செலவில் 75 சதவிகிதம் இவை இரண்டில் எது குறைவாக உள்ளதோ அந்த அளவிற்கு உயர்த்தி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

*159.* தற்போது கண் பார்வை அற்றோர் மற்றும் உடல் ஊனமுற்ற அரசு அலுவலர்களுக்கு அவர்களுடைய அடிப்படை ஊதியத்தில் 5 சதவிதிம் அல்லது அதிகபட்சமாக மாதம் ரூ.50/- வாகனப்படியாக வழங்கப்பட்டு வருகின்றது. இந்த அதிக பட்ச தொகையினைமாதம் ஒன்றுக்கு ரூ. 75/- உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

## நிதி நிலைமை

*160.* நான் கோடிட்டுக் காட்டியுள்ள திட்டப் பணிகளையும், திட்டங்களையும் மேற்கொள்ளத் தேவைப்படும் நிதி ஆதாரங்களைக் கண்டறிகின்ற கடுமையான பொறுப்பைக் குறித்து இப்போது குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரசு பதவியேற்றபோது, மிகக் கடுமையானதும், கட்டமைப்பு வகையில் சிக்கல் வாய்ந்ததுமான நிதி நிலைமையை எதிர்நோக்கியிருந்ததை இம்மன்றத்தின் உறுப்பினர்கள்

நினைவுகூரலாம். தேசியப் பொருளாதாரத்தில் நிகழ்ந்த சில மாறுதல்களும் அதன் காரணமாகத் தொடர்ச்சியாகப் பல்வேறு பண்டங்களின் நிர்ணய விலைகளில் செய்யப்பட்ட விலையேற்றமும் எங்களுடைய பணியை மிகக் கடுமையாக்கி விட்டுள்ளன. எந்த ஒரு சூழ்நிலையிலும் நாங்கள் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரம் கீழிறங்க அனுமதிக்கக் கூடாது. அதே சமயம், மாநிலத்தில் மேம்பாட்டுப் பணிகளுக்கு ஒரு புதிய வேகத்தை அளிக்கும் பொறுப்பையும் நாங்களே மேற்கொண்டோம். *1991-92* ஆம் ஆண்டிலும், மீண்டும் *1992-93* ஆம் ஆண்டிலும் இந்த இரு நோக்கங்களையும் நிறைவேற்றுவதில் நாங்கள் வெற்றியடைந்துள்ளோம்.

*161.* அந்த நிலையிலும், வரி விதிப்பதற்குப் புதிய ஆதாரங்கள் போதிய அளவு இல்லாமை, அரசு ஆற்றும் பணிகளுக்குக் குறைந்த அளவே தொகை வசூலிக்கப்பட்டமை, கணிசமான வருவாய் இழப்பை ஏற்படுத்துகின்ற மதுவிலக்குக் கொள்கையைப் பின்பற்றியமை, அதிக அளவு உதவித் தொகை வழங்குகின்ற பொறுப்பை ஏற்றிருந்தமை, அரசுப் பணியாளர்கள் வகையில் அதிகச் செலவை ஏற்க வேண்டியிருந்தமை ஆகியவற்றை உள்ளடக்கிய, பொருளாதாரக் கட்டமைப்பு வகையில் சிக்கல் வாய்ந்த தமிழ்நாட்டின் நிதி நிலைமையை நாங்கள் எதிர் கொள்ள வேண்டியிருந்தது. பத்தாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளின் வாயிலாக சிறிது நிவாரணம் கிடைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். அந்த நிவாரணம் கிடைக்கும் வரையில், நிதி நிலை தொடர்ந்து இடர்ப்பாடுடையதாகவே இருக்கும். ஏழை எளிய மக்களின் நலன்களைப் பாதுகாத்தல், மாநிலத்தின் விரைவான மேம்பாட்டுக்கு உறுதியளித்தல் என்ற இரண்டு நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்கு எங்களால் இயன்ற அனைத்தையும் செய்வோம்.

# வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள்

*162.* வருவாய்க் கணக்கில் மொத்த வரவுகள் ரூ.*6,446.54* கோடி என்பதையும், வருவாய்க் கணக்கில் மொத்தச் செலவுகள் ரூ.*7,255.27* கோடி என்பதையும், இதனால் ஏற்படும் வருவாய்ப் பற்றாக்குறை ரூ.*808.73* கோடியாகும் என்பதையும், *1992-93* ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் காட்டியிருந்தன. *1992-93* ல் ஏனைய கணக்குகளிலுள்ள பற்று-வரவுகளின் விளைவு பற்றாக்குறை ரூ.*217.62* கோடி என்பதையும் ஆண்டுத் தொடக்கத்தில் இருந்த பற்றாக்குறை ரூ.*401.47* கோடி என்பதையும் சேர்த்து, மொத்தப்பற்றாக்குறை ரூ.*619.09* கோடியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

*163.* வருவாய்க் கணக்கில் மொத்த வரவுகள் ரூ.*6661.20* கோடியாகும் என்பதையும், வருவாய்க் கணக்கில் செலவுகள் ரூ.*7669.82* கோடியாகும் என்பதையும், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ரூ.*1008.62* கோடியாகும் என்பதையும், *1992-93* ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகள் காட்டுகின்றன. வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை மேலும் அதிகரித்துள்ளதை அறியலாம். ஆண்டின் தொடக்கத்திலிருந்த ரூ.*241.41* கோடி பற்றாக்குறையையும், ஏனைய கணக்குகளிலுள்ள பற்று வரவுகளின் நிகர விளைவையும் சேர்த்து, *1992-93* ஆம் ஆண்டின் முடிவில், இறுதிநிலைப் பற்றாக்குறை ரூ.*275.94* கோடியாகும் எனத் தற்போது மதிப்பிடப்பட்டுள்ளது.

*164.* *1993-94* ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ.*6989.89* கோடி எனவும், வருவாய்க் கணக்கில் செலவுகள் ரூ.*8300.87* கோடி எனவும், இதன் காரணமாக வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ரூ.*1310.98* கோடி எனவும் மதிப்பிடப் பட்டுள்ளன. *1993-94* வரவு-செலவுத் திட்ட

மதிப்பீடுகளில் அனைத்துக் கணக்குகளிலுமுள்ள பற்றுவரவுகளின் நிகர விளைவு (பற்றாக்குறை) பற்றாக்குறை ரூ.359.95 கோடியாக இருக்கும். 1992-93 திருத்த மதிப்பீடுகளின்படி எதிர்பார்க்கப்படும் இறுதி நிலைப் பற்றாக்குறை ரூ.275.94 கோடியுடன் இதனைச்சேர்க்க, 1993-94 ஆம் ஆண்டின் முடிவில் ஒட்டு மொத்தப் பற்றாக்குறை ரூ.635.89 கோடியாக இருக்கும்.

165. கூடுதலாகக் கடன் பெறும் நிதியை ஆதாரமாகக் கொண்டு. மிகவும் இக்கட்டான இக்குறுகிய கால நிதி நிலைமையைச் சமாளிப்பது நம்முடைய திட்டச் செயல் முறையாகும். நிலைமையை இவ்வாறு நாம் சமாளிக்க வேண்டியுள்ளது. இல்லையெனில், ஏழை மக்களின் நலத்திட்ட ஒதுக்கீட்டுச் செலவுகள் மீது வெட்டுவிழும். நாங்கள் பதவியேற்றவுடன் எதிர்நோக்க வேண்டியிருந்த மிகக் கடுமையான நிதி நிலைமையைக் குறிப்பிட்டு, கூடுதலாக மத்திய நிதியுதவி கேட்டு நாங்கள் வேண்டுகோளை முன்வைத்த போதிலும், கூடுதலாக மத்திய நிதி உதவி எதனையும் நாங்கள் பெறவில்லை. இத்துடன், 1992 நவம்பரில் புயல், வெள்ளத்தால் ஏற்பட்ட பிரச்சினையையும் நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்து, அதன் காரணமாகக் கூடுதல் செலவை மேற்கொள்ள வேண்டியிருந்தது. மேலும், தொடர்ச்சியாக அடுத்தடுத்துப் பல்வேறு பண்டங்களின் நிர்ணய விலைகள் மத்திய அரசால் உயர்த்தப்பட்ட நிலையையும் நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது, இவையனைத்தும் மாநிலத்தின் நிதிநிலைமையை மேலும் மோசமாக்கின. மாநில நிதிநிலைமையை மேம்படுத்துவதற்காக நாம் மிகக்கடுமையாக போராட வேண்டியிருந்தது; எவ்வாறெனில், முன்னேற்றப் படியில் நாம் எடுத்துவைக்கின்ற ஒவ்வோர் அடியும் தேசிய அளவில் பெரிய பொருளாதார மாறுதல்கள் குறித்த நடவடிக்கையால் ஏற்பட்ட பாதகமான விளைவுகளால் தடைப்பட்டது; இந்தப் பெரிய பொருளாதார மாறுதல்கள் குறித்த நடவடிக்கைகள் மீது நமக்கு எந்தக் கட்டுப்பாட்டு அதிகாரமும் கிடையாது. எங்களுக்கு எதிராக அடுத்தடுத்து இத்தனை தடைகள் வந்தபோதிலும், பாராட்டத்

தக்கவகையில், முன்னேற்றத் திட்டங்களை மேற்கொள்ள எங்களால் முடிந்தது என்பதையும், அதே சமயத்தில் ஏழை மக்களுக்கு நாட்டிலேயே மிகச் சிறந்த சமூகப் பாதுகாப்புத் திட்டங்களையும் நாங்கள் அளித்துள்ளோம் என்பதையும் முற்றிலும் உறுதியாகக் கூற முடியும்.

## செலவுக் கொள்கை

*166.* இந்தச் செயல்பாடு குறித்து நாம் பெருமையடைகின்ற அதே நேரத்தில், நடுத்தரக் காலத்தில் நிதி நிலைமையைச் சரிசெய்ய சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை கணிசமான அளவிற்கு அதிகரித்துள்ளது நம்முடைய முக்கியமான கவலையாகும். வருவாய்க் கணக்கில் செலவு அதிகரிப்பதைத் தடுத்து நிறுத்துவதன் அவசியத்தை அது பிரதிபலிக்கிறது. கடன்களைத் திருப்பிச் செலுத்தும் செலவு அதிக அளவு அதிகரித்திருப்பதும், வருவாய்க் கணக்கில் செலவு அதிகரிப்பதைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக் காட்டுகிறது. அண்மையில் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பணவீக்க நெருக்கடிகளினால், பெருமளவில் அதிகரித்த செலவினங்களுடன் நாம் போராட வேண்டியிருந்தது. பணவீக்க வீதம் குறைந்துள்ளதால், சிறிது நிவாரணம் கிடைக்குமென்று நாங்கள் நம்புகிறோம். அதே நேரத்தில், வருவாய்க் கணக்கில் செலவு அதிகரிப்பதைக் கட்டுப்படுத்தி, அதனை வருவாய்க் கணக்கில் வளர்ச்சி வீத நிலைக்குக் கீழ்க் கொண்டுவர இயலும் வகையில், தொடர்ந்து நடவடிக்கை எடுப்பது நம்முடைய முயற்சியாக இருக்க வேண்டும்.

*167.* எனவே, செலவு வளர்ச்சியின் வேகத்தைத் தணிக்கும் நோக்குடன், செலவுக் கொள்கை பற்றிய அறிக்கை ஒன்றினை நாங்கள் வகுத்துள்ளோம். இக்கொள்கை மும்முனை அணுகு முறைகளைக் கொண்டதாக இருக்கும். முதலாவதாக, பல்வேறு அரசுத் துறைகள்

திறம்படச் செயல்படும் நடைமுறையை நாங்கள் தொடர வேண்டியுள்ளது. அரசுத் துறைகள் நல்ல முறையிலும், அதிகப் பயனுள்ள வகையிலும் செயல்படுவதற்கு, "விரைந்த வளர்ச்சிக்காகத் தொடக்க நிலையிலிருந்து வரவு-செலவுத் திட்டமிடும் முறையை" **(Ze-BAG)** நாங்கள் தொடர்ந்து மேற்கொள்வோம். நாங்கள் 20 துறைகளில் இந்த நடவடிக்கையை ஏற்கெனவே மேற்கொண்டுள்ளோம். இந்த நடவடிக்கையினால், தற்போதுள்ள ஆதாரங்களைப் புதிய பணிகளுக்காக மாற்றித் தருவதற்கும் பயன்படுத்துவதற்கும் எங்களால் முடிந்துள்ளது. பயனற்ற செலவினங்கள் இனங்கண்டறியப்பட்டு, சேமிப்பு ஏற்பட உறுதி செய்யப்படும். இந்தத் திட்டச் செயல்பாட்டின் இரண்டாம் பகுதி, பல்வேறு அரசுப் பணிகளிலிருந்து கிடைக்கும் வருவாயை மேம்படுத்துவதாக இருக்கும். உயர்கல்வி, ஏழைகள் அல்லாதவர்களுக்கு அரசு வழங்கும் உயர்நிலை மருத்துவப் பணிகள், அரசின் ஏனைய வணிக நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கு விதிக்கப்படும் கட்டணங்களை உயர்த்த வேண்டியுள்ளது. மேலும், கட்டணங்களும் அபராதங்களும் உரியவாறு திருத்தியமைக்கப்படும். இதன்கீழ், அனுமதி பெறாத அனுபோகம், குத்தகைகள், ஏனைய வகையில் ஆற்றிய பணிகளுக்கான கட்டணங்கள் ஆகியவை அடங்கும். மூன்றாவதாக, நிதி ஆதாரங்கள் அரிதாகவுள்ள சூழ்நிலையில், ஏழைகளல்லாத ஏனையோர் இந்த ஆதாரங்களைத் தாங்களே வசப்படுத்திக் கொள்ள முனைவதால், உண்மையிலேயே தகுதியுடைய ஏழை மக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்வது மிகவும் முக்கியமாகும். அரிதாக உள்ள நிதி ஆதாரங்களை ஏழைகளல்லாத ஏனையோர் தங்கள் வசப்படுத்திக்கொள்ள முனைவதன் மூலம், ஏழை, எளிய மக்கள் பாதிக்கப்படக் கூடாது. ஏழை எளிய மக்களுக்கு அனுகூலங்கள் சென்றடையும் வகையில் நாங்கள் திட்டங்களை மாற்றியமைப்போம்.

168. நான் இங்கே கோடிட்டுக் காட்டியுள்ள, ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள், 1993-94 ஆம் ஆண்டில் நல்ல பயனை அளிக்குமென்று நாங்கள் நம்புகிறோம். நான் கோடிட்டுக் காட்டியுள்ள பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம், ரூ.95 கோடி நிதி திரட்ட முடியும் என்று நாங்கள் இலக்கு நிர்ணயித்துள்ளோம்.

## வரிகள்

### விற்பனை வரி

169. நிதி அமைச்சர், பற்றாக்குறையைக் குறைக்கும் பொருட்டு, விற்ப னை வரிகளைச் சற்று ஆராய்வது இயல்பே. ஆனால், இந்தாண்டு அவ்வாறு செய்யாமல் பெரியதொரு வரி விதிப்பு சீரமைப்புத் திட்டத்தையே செயல்படுத்த விழைகின்றேன். திரு. பி. விசயராகவன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் விற்பனை வரி மாறுதல்கள் சம்பந்தப்பட்ட உயர்மட்டக் குழு அளித்துள்ள விரிவான அறிக்கை அரசின் கவனத்தில் உள்ளது. வருவாயில் மாறுதல்கள் ஏற்படுத்தும் வகையிலும், வரி விதிப்பு முறைகளில் மாறுதல்கள் செய்யும் வகையிலும் பல விரிவான பரிந்துரைகள் இவ்வறிக்கையில் உள்ளன. வருவாய் மாறுதல்கள் குறித்த அனைத்து நடவடிக்கைகளும் ஒன்றுசேர நடைமுறைப்படுத்தினால், வருவாய்க்குச் சாதகமான சூழ்நிலை அமையப்பெறும். சரக்குகள் பலவற்றின் மீதும், நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகளுக் கும் இதுவரை அளிக்கப்பட்டுள்ள வரி விலக்குகள் நீக்கப்படுதல், கூடுதல் விற்பனை வரி விதிகதங்களை அதிகமாக்குதல், வரி விதிப்புக்குட்பட்ட ஆண்டு விற்பனை என்ற நிலையிலிருந்து, மொத்த விற்பனையின்மீது இவ்வரிவிதிப்பு என்ற நிலைக்கு மாறுதல் போன்ற மாறுபட்ட பல நடவடிக்கைகளும் இவைகளில் அடங்கும். இந்த உயர்மட்டக் குழு அறிக்கையில், வரிவிலக்குக்குட்பட்ட விற்பனைத் தொகையில் மாற்றம்,



5

வரி விகிதங்களை வகைப்படுத்துதல், அடிப்படை வரியின் மீது விதிக்க ப்படும் மேல்வரி மற்றும் கூடுதல் மேல்வரி இரண்டையும் அவ்வரிவி கிதங்களுடன் சேர்த்துவிடுதல், மேலும் பொருட்களை உற்பத்தி செய்ய உதவும் மூலப்பொருட்களின் மீதான வரிச்சலுகைகளை விரிவாக்குதல் ஆகிய நடவடிக்கைகளும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. பரிந் துரைகள் அனைத்தும் விரிவாகவும் கவனமாகவும், பரிசீலிக்கப்பட் டுள்ளன. பணவீக்கம் கட்டுக்குள் அடங்கியுள்ள சூழ்நிலையில், சலுகைகளை அறவே நீக்கதல் உட்பட்ட பரிந்துரைகள் அனைத்தும் ஒன்றுசேர அமல்படுத்தப்பட வேண்டியவையே. தொழில் துறையில செலவுக் குறைப்பில் போட்டித் திறனும், உற்பத்தித் திறன்பெருக்கும், மேல்நோக்கும் காணப்பட வேண்டிய இத்தருணத்தில் வரிவிகிதங்களை கூட்டுவது உகந்ததல்ல. ஆகவே, மேற்சொன்ன அறிக்கையிலிருந்து சில முக்கியமான பரிந்துரைகளை ஆராய்ந்து அவற்றின் அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்ட வரிவிதிப்புத் தொகுப்பொன்றை அமல்படுத்த முன்வந்துள்ளோம்.

*170.* குறிப்பிட்ட அட்டவணைகளின் கீழ் காணப்படாத விற்பனைப் பொருட்கள் மீது தற்போது, பிரிவு *3(1)* இன் படி சதவிகத விற்பனை வரி விதிக்கப்படுகிறது. இப்பிரிவு அகற்றப்பட்டு விற்பனைப் பொருட்கள் பலவற்றை அட்டவணை *1*-ன் கீழ் கொண்டுவரவும், இவ்வட்டவணை யின் கீழ் **"இதரப்பொருட்கள்" என்ற புதிய பதிவை இணைப்பதற்கு ம் வழி வகை செய்யப்படும். "இதரப் பொருட்கள்" என்ற பகுதியி ன் கீழ் காணப்படும் விற்பனைப் பொருட்கள் தயாரிப்பதற்கான மூலப்பொருட்களை, படிவம் XVII , கீழ் முன்றுசதவிகத சலுகை வரிவிதிக்குட்படும் வகையில் உத்தேசிக்கப் பட்டுள்ள இந்த நடவடிக்கைகள் பெரியதொரு வரிவிதிப்பு சீர்திருத்த முறையாக அமையும்.**

தொழில் துறையில் விற்பனைப் பொருட்களின் உற்பத்திச் செலவுக் கட்டுப்பாட்டிற்கு இது பெருமளவு உதவி செய்யும். தற்போது பிரிவு 3(3)-ன்படி நாப்தா மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு (மொலாசஸ்) ஆகியவை மூலப் பொருட்களாக உபயோகப்படுத்தப்பட்டால் அவைகளுக்கு சலுகை வரி கொடுக்கப்படமாட்டாது. மேலும் இவைகளுடன் கனிம எண்ணெய் (பதிவு-157), மசகு எண்ணெய் (பதிவு-156) பல தரப்பட்ட வாயுக்கள் (பதிவு-106) ஆகியவையும் பிரிவு 3(3)-ல் சேர்த்துக் கொள்ளப்படும். அதாவது இவைகளுக்கும் சலுகை வரி அளிக்கப்பட மாட்டாது.

171. உற்பத்திச் செலவை மேலும் குறைக்கும் வகையில் பிரிவு 3(3)கீழ் வி திக்கப்படும் சலுகைமுறை வரியான 3 சதவிகித விற்பனை வரி, விற் பனைப் பொருட்களுக்கான செறிவுப் பொருட்கள் (Packing Materials) பெயர் வில்லைகள் (Labels) மற்றும் பயன்படு பொருட்கள் (consumables) ஆகியவற்றுக்கும் விரிவுப்படுத்தப்படும். உற்பத்தி முறையில் பயன்படுத்தப்படும் இவ்வகைப் பொருட்களை படிவம்-XVII அளித்து சலுகை வரிவிகிதத்தில் உற்பத்தியாளர்கள் இனி வாங்கலாம்

172. ரூபாய் ஒரு இலட்சம் . வரை மொத்த விற்பனை உள்ள வணிகர்களுக்கு தற்போது பிரவ 3(1) கீழ் மட்டும் விற்பனை வரியிலிருந்து வரி விலக்கு அளிக்கப்படுகிறது. இது ஒரு சில வணிகர்களுக்கே பயனளிக்கிறது. தமி ழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தின்படி, ரூபாய் ஒரு இலட்சம் வரையிலான மொத்த விற்பனை அமையப்பெற்ற அனைத்து வணிகர்களுக்கும்

**அவர்களது விற்பனைப் பொருட்கள் எந்த அட்டவயையின் கீழ் அமையப்பெறினும் இவ்வரிச் சலுகை அளிக்கப்படும். தற்சமயம் வரி செலுத்தும் 150 இலட்சம் வணிகர்களில், அட்டவணை-1 கீழ் பதிவு செய்யப்பட்ட விற்பனைப் பொருட்களை கையாளும் 60,000 வணிகர்கள் வரிவிலக்கு பெற்று இதனால் பயனடைவார்கள்.** விற்பனையாளர்கள் பலரை வரிவிதிப்புக்கு உள்ளாக்காமல் இம்முறையை எளிதாக்கும் இச்சீரிய நடவடிக்கையை தொழில் துறையில் முனைந்துள்ள அனைவரும், வர்த்தகர்களும் பெரிதாக வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். இதனால், வணிக வரித்துறையின் கவனம் பெருமளவில் வரிவிதிப்புக்குட்படும் விற்பனையாளர்களின் மீது திருப்பி விடப்பட்டு வருவாயைப் பெருக்க சாதாகமான சூழ்நிலையை ஏற்படுத்த இயலும்.

173. தற்போதைய சுயவரிவிதிப்புகணிப்பு முறையின்படி, 6000 வர்த்தகர்களே பயனடைந்து வருகிறார்கள். இம்முறையை மேலும் எளிதாக் குவதன் மூலம், பெருமளவில் வணிகர்கள் பயனடைய வகை செய்யப் படும். **எளிதாக்கப்பட்ட நடைமுறைகளினால் மேலும் 68000 வணிக ர்கள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.**

174. ஒப்பந்தப் பணிகள் மீதான (works contract) விற்பனை வரி முறைபற்றி சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் அ ளித்துள்ள தீர்ப்புகள், மேலும் இம்முறைபற்றி அத்தீர்ப்புகளில் சுட்டிக்காட்டிய குறைபாடுகள் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு, இவ்வரி விதிப்பு முறையில் சில மா றுதல்களை கொண்டுவரவேண்டியுள்ளது. தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தின்படி வரிவிதிப்புக்குட்பட்ட விற்பனைப் பொருட்கள் இவ் ஒப்பந்தப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டால், அவற்றின் மீது மீண்டும் விற்பனை வரி விதிக்கப்படமாட்டாது. மார்ச் 11-ந்தேதி வரை, அட்டவணை-**IV** கீழ்

விதிக்கப்படும் வரிகள் அமுலில் இருக்க, வரும் நாட்களில் ஒப்பந்தப் பணியில் வரிவிதிப்புக்குள்ளாகும் அனைத்து விற்பனைப் பொருட்களுக்கும் அந்தந்த பொருட்களுக்கு அட்டவணைகளின் கீழ் உள்ள வரிவிகிதங்கள் பின்பற்றப்படும். ஒப்பந்தப்பணிகளில் பொருள்கள் (Manufacturing) உற்பத்தி இல்லாத நிலையிலும் மற்றும் ஏற்கெனவே விற்பனை வரிவிதிப்புக்குட்படுத்தப்பட்ட விற்பனைப் பொருட்களின் மீது, மீண்டும் வரிவிதிக்கப்படாத நிலையிலும், இவ்விற்பனைப் பொருட்களுக் படிவம்-**XVII** கீழும், பிரிவு *3 (3)* கீழும் அளிக்கப்படும் சலுகை முறை வரிவிகிதங்கள் பொருந்தாது. இந்தக் கூட்டத் தொடரில், இதற்கான சட்ட திருத்தங்கள் கொண்டுவரப்படும். கட்டுமானப் பணி ஒப்பந்தங்களைப் (Civil contracts) பொறுத்தவரை, சுயதேர்வு முறையில், வரிவிகிதங்களில் கூட்டமைப்பு முறை **(Compounding)** சலுகை வரிவிதிப்புபெற வழிவகை செய்யப்படும். கூட்டமைத்த சலுகை வரி விகிதம், இவ்வகைப் பணிகளுக்கு *2* சதவீகதமாக அமையும். இதனால், கட்டுமான பணி ஒப்பந்தப்பணிகளின் மீது விதிக்கப்படும் வரி விதிப்பு முறை எளிமையாக்கப்படும். இத்தகைய இணக்க முறைகள் குஜராத் மற்றும் கர்நாடக மாநிலங்களில் பின்பற்றப்படுகின்றன.

*175.* குத்தகை முறை (Lease) விற்பனையின் மீது விதிக்கப்படும் வரி விகிதங்களையும் எளிதாக்க முனைந்துள்ளோம். குத்தகை விற்பனைக்குள்ளாகும் விற்பனைப் பொருட்கள் மீது தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் ஏற்கெனவே வரிவிதிக்கப்பட்டால், அவை மீண்டும் வரிக்குள்ளாக்கப்படமாட்டாது. ஒப்பத்தப் பணிகள் மீது வரிவிதிக்கும் முறையில் மாறுதல்கள் எவ்வாறு ஏற்படுத்தப்படவுள்ளனவோ, அவ்வாறே, *1993*, மார்ச்-*11* ஆம் நாள் வரை தற்போது நடைமுறையில் உள்ள வரி விகிதங்கள் அமலில் இருக்க, இனிவரும் நாட்களில் குத்தகை விற்பனையின் கீழ் விற்கப்படும் பொருட்கள் மீதான விற்பனை வரி, அவை அனைத்தும் தனித்தனியாக தத்தம்

அட்டவணைகளின் கீழ் காட்டியுள்ள வரிவிகிதங்களுக்குட்பட்டு, விற்பனை செய்ய ப்பட்டதாகக் கொண்டு அமையும்.

*176.* சில குறிப்பிட்ட பொருட்களின் மீதும், நிறுவனங்களுக்கும் அளிக்கப்பட்டுள்ள வரி விலக்குகள் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்பது குழுவின் மற்றொரு முக்கியமான பரிந்துரையாகும். வருவாயைப் பெருக்குவதற்கு எல்லா வகையான விற்பனையையும் வரிவிதிப்புக்குஉட்படுத்துவதற்கு இந்த பரிந்துரையை குழு செய்துள்ளது. இந்த வரிச் சலுகைகளை அறவே நீக்குவதால் மொத்தமாக ரூ.68 கோடி கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வரிவிதிப்பு முறையை எளிமையாக்க இவ்வகையான பரிந்துரை ஏற்க தக்கதாகும். விற்பனை வரி விகிதங்களை கூடுதலாக்குவதற்கும், வரி அடிப்படையை விரிவா க்குவதற்கும் இது வழி வகுக்கும். இவற்றுள் பல வகையான சலுகை கள் வெவ்வேறு காலக் கட்டங்களில் போதுமான காரணங்கள் இல்லாமல் இருந்தும் வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும், பொது மக்க ள் பயன் படுத்தும் நெல், அரிசி, கோதுமை, கம்பு, கேழ்வரகு, சோளம், உப்பு போன்ற பொருள்களுக்கும், இவ்வகையான சலுகை கள் அளிக்கப்பட்டிருப்பதால் இச்சலுகைகளை நீக்குவதில்லை என அரசு முடிவு எடுத்துள்ளது. சலுகை வழங்குவதற்கு போதுமான கா ரணங்கள் இன்றி வரிச்சலுகைகள் பெறுகின்ற பொருட்கள் எவை எ ன விரிவாக ஆராயப்பட வேண்டியுள்ளது. இந்த முடிவினால் ஆண்டொன்றுக்கு ரூ.68 கோடி அளவிற்கு வருவாய் கிடைக்கக் கூடிய வாய்ப்பை இழக்க நாங்கள் முடிவு எடுத்துள்ளோம் என்பதை மன்ற உறுப்பினர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். விலைவாசியை கட்டுப்படுத்த வேண்டிய அவசியத்தைக் கருத்தில் கொண்டு அரசு இந்த் முடிவை எடுத்துள்ளது.

*177.* குழுவின் மற்றொரு முக்கிய பரிந்துரை, வரிவிதிப்பு விகிதத்தைப் பொறுத்தவரை *13* பிரிவுகளாக எல்லா பொருட்களையும் வகைபடுத்துவதாகும். இவ்வாறு மாற்றியமைக்கும்

பொழுது மேல் வரி, கூடுதல் மேல் வரி ஆகியவை அடிப்படை வரியுடன் சேர்க்கப்பட்டு ஏற்ற வகையில் அடிப்படை விகிதத்தை உயர்த்தி அமைக்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்தப் பரிந்துரையை அரசு கவனமாக பரிசீலித்துள்ளது. பொருட்களை தகுந்த முறையில் வகை படுத்தி வரி விகிதங்களில் எண்ணிக்கையை குறைப்பது ஏற்புடைய பரிந்துரையாகும். அதே சமயத்தில் மேல் வரியையும் கூடுதல் மேல் வரியையும் வரியுடன் சேர்த்து வரி விகிதங்களை கூடுதலாக்கிச் சீரமைப்பதனால் எல்லா பொருட்களின் விலையும் உயரக்கூடிய நிலை உருவாகும். மேலும் மேல் வரியிலிருந்து கிடைக்கும் வரியில் ஒரு பகுதி உள்ளாட்சி நிறுவனங்களுக்கும், கூடுதல் மேல் வரியில் இருந்து கிடைக்கும் வருவாய் சென்னைக் குடிநீர்த் திட்டத்திற்கும் பயன் படுத்தப் படுகின்றது. ஆகவே, மேல் வரியையும், கூடுதல் மேல்வரியையும் அடிப்படை வரியுடன் இணைக்கும் பரிந்துரையை அரசு ஏற்கவில்லை. அதே சமயம் பொருட்களை மேலும் விரிவான முறையில் வகை படுத்தி, வரி விகிதங்களைகுறைக்கவும், சீரமைக்கவும் நாங்கள் முடிவு எடுத்துள்ளோம்.

178. தற்போதுள்ள 17 வரிவிகிதங்களை 13 ஆகக் குறைக்கும் குழுவின் பரிந் துரைக்கு மேலாக சில குறிப்பிட்ட பொருட்களுக்கு எளிதான 5 வகையான விகிதங்களுடன் சில குறிப்பிட்ட பொருட்களுக்கு கூடுதலாக 4 வரிவிகிதங்கள் என்ற அடிப் படையில் மாற்றி அமைக்க முடிவு செய்துள்ளோம். அட்டவணை-1, அட்டவணை-6 ஆகியவற்றின் கீழ் வரும் பொருட்கள் மீது இனி 9 விகிதங்களில் வரி விதிக்கப்படும். இந்த வரிவிகிதங்கள் பின்வருமாறு (சதவிகிதங்களில்):

*1, 3, 5, 8, 12, 16, 20, 25, 50.*

ஏழை எளிய மக்களால் வெகுவாகப் பயன்படுத்தப்படும் பொருட்கள், மூலப் பொருட்கள், சாதாரண பொருட்கள்,

இடைநிலையான பொருட்கள், இயந்திரங்கள், நடுத்தர வருவாய் பிரிவினரால் பயன்படுத்தப்படும் பொருட்கள், ஆடம்பரப் பொருட்கள், சிறப்புப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு மது வகைகள் என பொருட்க ளின் தன்மையின் அடிப்படையில் வகை படுத்தப்பட்டுள்ளன. அரசின ால் மேற்கொள்ளப்படும் மிக விரிவான வரிச் சீரமைப்புகளில் இது ஒன்றாகும். வருவாய் மீது ஏற்படும் விளைவுகளைக் கருத்தில் கொள்ளாது இந்த நிர்வாகச் சீரமைப்பை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். இவ்வகையாக பொருட்களை வகைப்படுத்தினால் பல பொ ருட்களின் மீது உள்ள வரி விகிதம் குறைக்கப்படும். வரி விகிதங்களை வகை படுத்துவதனால் சில பொருட்களின் மீது ஓரளவிற்கு வரி உயரக்கூடும். 1959 - க்குப் பின் மேற்கொள்ளப்படும் மிகத் துணிவா ன வரிச் சீரமைப்பு நடவடிக்கை இதுவேயாகும். ஆகவே, பொரு ட்களை வகை படுத்துவதையும், வரி விகிதங்களைச் சீரமைப்பதையும் அடக்கிய இந்த நடவடிக்கையை வருவாய் பெருக்கும் நடவடிக்கையாகக் கருதாது வரிச் சீரமைப்பில் முக்கிமான நடவடிக்கையா கக் கருத்தில் கொள்ள வேண்டும்.

179. மார்ச் 12, 1993 முதல் செயலுக்கு கொண்டு வரப்படும் இந்த வரி விகிதங்களைக் கொண்ட அறிவிப்புகள் இன்று தனியாக வெளியிடப்படும். இருநூற்றுக்கு மேற்பட்ட பொருட்கள் இவ்வாறு மாற்றத்திற்கு உட்படுவதால் ஒவ்வொன்றையும் இங்கு குறிப்பிட இயலவில்லை. வரி விகிதங்கள் குறைக்கப்பட்டுள்ள முக்கியமான சில இனங்களையு ம், சிறிதளவு வரி ஏற்றம் உள்ள சில பொருட்களையும் இங்கே எடு த்துக்காட்டாகக் குறிப்பிட விரும்புகின்றேன். பின் வரும் பொருட்களின் மீது செய்யப்பட்டுள்ள வரிக் குறைப்பினால் அவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என நம்புகின்றேன்.

| பொருளின் பெயர் | தற்போதுள்ள வரி விகிதம் (சதவிகிதம்) | புதிய வரி விகிதம் (சதவிகிதம்) |
|---|---|---|
| மஞ்சள் | 4 | 3 |
| மிளகாய் | 4 | 3 |
| தனியா | 4 | 3 |
| சீயக்காய் | 4 | 3 |
| புளி | 4 | 3 |
| மிளகு | 4 | 3 |
| வெல்லம் | 6 | 3 |
| வனஸ்பதி | 8 | 5 |
| கடலை எண்ணெய் | 4 | 3 |
| தேங்காய் எண்ணெய் | 4 | 3 |
| நல்லெண்ணெய் | 4 | 3 |
| சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் | 4 | 3 |
| கோதுமைப் பொருட்கள் | 4 | 3 |
| மண்ணெண்ணெய் | 4 | 3 |
| காப்பிக் கொட்டை | 6 | 5 |
| காப்பிப் பொடி | 6 | 5 |
| உடனடித் தேயிலை | 6 | 5 |
| கசகசா | 8 | 5 |
| ஜாதிக்காய் | 8 | 5 |
| சீரகம் | 6 | 5 |
| கையினால் செய்யப்பட்ட சோப்பு | 4 | 3 |

*180.* ஏழை எளிய மக்களால் பயன்படுத்தப்படும் பல்வேறு பொருட்களின் மீதான வரி விகிதம் இந்த சீரமப்பினால் குறைக்கப்பட்டுள்ளதை அவை உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என உறுதியாக நம்புகிறேன்.

*181.* குடும்பத்தில் அன்றாடம் பயன்படுத்தப்படும் இப்பொருட்களைத் தவிர, மக்களால் பெரிதும் பயன்படுத்தப்படும் பல்வேறு வகையான பொருட்களின் மீதான வரியும் குறைக்கப்பட்டுள்ளது. அவற்றுள் பின்வரும் பொருட்களும் அடங்கும்.

| பொருளின் பெயர் | தற்போதுள்ள வரி விகிதம் (சதவிகிதம்) | புதிய வரி விகிதம் (சதவிகிதம்) |
|---|---|---|
| மருந்தும் மருந்துப் பொருட்களும் | 6 | 5 |
| பிளாஸ்டிக் பொருட்கள் | 6 | 5 |
| அலுமினியப் பாத்திரங்கள் | 4 | 3 |
| செங்கல் | 4 | 3 |
| உலர் மின்கலங்கள் | 9 | 8 |
| சாக்குகள் | 5 | 3 |
| இரத்த வழங்கு அமைப்பு (Blood donor set) | 8 | 5 |
| இரத்தக் குழாய் அமைப்பு (intravenous set) | 8 | 5 |
| அறுவை சிகிச்சை கருவிகள் (Surgical instrument) | 10 | 5 |

*182.* மேலும், சீரமைப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக சில தொழில் பொருட்களின் மீதும் வரி குறைக்கப்படும். இவற்றுள் பின் வருவனவையும் அடங்கும்.

| பொருளின் பெயர் | தற்போதுள்ள வரி விகிதம் (சதவிகிதம்) | புதிய வரி விகிதம் (சதவிகிதம்) |
|---|---|---|
| கருவிகள் | 10 | 8 |
| இயக்கிகள் | 10 | 8 |
| கச்சாப் படச் சுருள்கள் (திரைப்படம்) | 6 | 5 |
| பருத்தி கழிவுப் பொருள் | 6 | 5 |
| இணைப்புக் குழாய் இணைப்புகள் | 10 | 8 |
| மோட்டார் வாகன சக்கரப் பட்டைகளும், குழாய்களும் (Tyres and Tubes) | 9 | 8 |
| விசைப் பொறிகள் | 10 | 8 |
| இணைப்புக் கம்பிகளும் எலெக்ரோடும் (Welding Electrodes & Rods) | 10 | 8 |
| சணல் கயிறு | 8 | 3 |

*183.* நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளதுபோல், இவ்வாறு பெருமளவில் பொருட்களை வகைப் படுத்தும்போது சிலவற்றின் மீதான வரி விகிதங்கள் உயர்வது தவிர்க்க இயலாததாகும். மக்களால் அதிகமாகப் பயன்படுத்தப்படும் பெருவாரியான பொருட்களின் மீது வரியைக் குறைக்கும் அதே நேரத்தில், பெரும்பாலும் செல்வந்தர்களால் பயன்படுத்தப்படும் சில பொருட்களின் மீதான வரி விகிதங்களை உயர்த்தியுள்ளோம்.

184. மண்ணெண்ணெய் மீதான வரியைக் குறைந்துள்ளோம். டீசல் எண்ணெய் (Diesel) மீதான வரி அதே அளவில் இருக்கும். பெட்ரோல் (Petrol) மீதான வரி, கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் இருப்பதுபோல் 18 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதமாக உயர்த்தப்படும்.

185. வரி விகிதம் உயர்த்தப்படும் பொருள்களில் சிலவற்றை எடுத்துக்காட்டாக இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

| பொருளின் பெயர் | தற்போதுள்ள வரி விகிதம் | புதிய வரி விகிதம் |
|---|---|---|
| குளிர் பதனப் பெட்டிகள் | 15 | 16 |
| தரை மற்றும் சுவர் ஓடுகள் | 15 | 16 |
| மின் உயர்த்திகள் | 15 | 16 |
| சலவைக்கல், சலவைக்கல் பொருட்கள் | 15 | 16 |
| வைரங்கள் | 10 | 12 |
| வாசனைப் பொருட்கள் (Scent and Perfumes) | 15 | 16 |
| வண்ணங்கள், வண்ணப் பொருட்கள் (Paints and Distempers) | 10 | 12 |
| காற்று சுத்திகரிப்புக் கருவிகள் (Air Purifiers) | 15 | 16 |
| குளிர்சாதன கருவிகள் (Air Conditioners) | 15 | 16 |
| பீங்கான் பொருள் | 10 | 12 |

| | | |
|---|---|---|
| *விரிப்புகள்* | *15* | *16* |
| *தந்தப் பொருட்கள், தந்தத்தால் இழைக்கப்பட்ட பொருட்கள* | *10* | *12* |
| *மோட்டார் சீருந்து* | *5* | *8* |
| *துப்பாக்கிகளும், சுழல் கைத் துப்பாக்கிகளும்* | *15* | *16* |
| *படிவப் பெருக்கும் கருவிகள்* | *15* | *16* |

*186. வரி அமைப்பை எளிதாக்கும் மற்றொரு நடவடிக்கையாக, ஒரு சி லவற்றைத் தவிர மற்ற உதிரிப் பொருட்கள் மற்றும் பாகங்கள் மீ தான வரி, அடிப்படைப் பொருட்களின் மீ தான வரிக்கு ஈடாகத் திருத்தி அமைக்கப்படுகிறது.*

*187. மார்ச்சு 12, 1993 முதல் நடைமுறைக்கு வரும் வண்ணம், இந்த வகை ப்படுத்தும் நடவடிக்கையின் விளைவாக ஏற்படும் அணைத்து வரி விகித மாற்றங்களுக்கான அறிவிப்பு இன் று வெளியிடப்படுகிறது. இத ன் நகல் அவையில் வைக்கப்படுகிறது. அறிவிப்பிலுள்ள ஒவ்வொரு பொருளின் வரி விகிதங்களில் மாற்றங்கள் என்னால் படிக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டும் என் றும் கேட்டுக் கொள்கிறேன். சரித்திர முக்கியம் வாய்ந்த இந்த வரிச் சீரமைப்பு நடவடிக்கைகளை அவை உறுப்பினர்கள் முழுமையாக ஏற்பார்கள் என நான் உறுதியாக நம்புகிறேன்.*

*188. கூடுதல் விற்பனை வரி விதிப்பைக் குறித்து குழு முக்கியமான பரிந்துரைகள் வழங்கியுள்ள து. மொத்த விற்பனைத் தொகை மீ து சீரான 3 சதவீ த கூடுதல் விற்பனை வரி விதிக்கப்பட வேண்டும் என குழு பரிந்துரைத்துள்ள து. இந்தக் கூடுதல் வரி உயர்வால் விலைவாசி உயரக்கூடும் எனக் கருதி இந்த பரிந்துரையை அரசு தள்ளிவைக்கத் தீர்மானித்துள்ள து. இதற்கு மாறாக மேலும் சில*

சலுகைகளைக், குறிப்பாக சிறிய வணிகர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் அளிப்பதென முடிவெடுத்துள்ளோம். ஒரு கோடிக்குக் குறைவாக, வரிவிதிப்பிற்கு உட்பட்ட மொத்த விற்பனை அளவுடைய வணிகர்களுக்கு முதல் பத்து இலட்ச ரூபாய் விற்பனை அளவிற்கு விலக்கு அளிக்கப்படும். மொத்த விற்பனைத் தொகையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை மனதில் கொண்டு வரிப்படி முறை வீதங்களை (Tax slabs) மாற்றியமைக்க முடிவு செய்துள்ளோம். இச்சலுகை சிறிய வணிகர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் பயனளிப்பதுடன், வரி விகிதங்களில் மாறுதல் ஏற்படும். ரூபாய் 10 இலட்சம் மட்டத்தில் நிகழக்கூடிய விற்பனைகளை மறைப்பதைக் கட்டுப்படுத்தும்.

தற்போதுள்ள வரி விகிதங்களுக்கு விற்பனைத் தொகைப்படிகளும் மட்டங்களும் பின்வருமாறு அமைந்துள்ளன.

| ஆண்டொன்றுக்கு வரிக்குட்பட்ட விற்பனை அளவு (ரூபாயில்) | தற்போதுள்ள கூடுதல் விற்பனை வரி விகிதம் (சதவிகிதம்) |
|---|---|
| 0 - 10 இலட்சம் | வரி இல்லை |
| 10 - 40 இலட்சம் | 1.25 (வரிவிதிப்பிற்குட்பட்ட மொத்த விற்பனை அளவின் மீது) |
| 40 இலட்சம்- 1 கோடி | 1.5 |
| 1 - 5 கோடி | 2.0 |
| 5 - 10 கோடி | 2.25 |
| 10 கோடிக்கு மேல் | 2.5 |

வரி விகிதங்களும் விற்பனை அளவு மட்டங்களும் பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகின்றன.

| ஆண்டொன்றுக்கு வரிக்குட்பட்ட விற்பனை அளவு (ரூபாயில்) | தற்போதுள்ள கூடுதல் விற்பனை வரி விகிதம் (சதவிகிதம்) |
|---|---|
| 0 - 10 இலட்சம் | வரி இல்லை |
| 10 இலட்சம் - 1 கோடி | 1.5 |
| (இந்த மட்டத்தில் உள்ளவர்களுக்கு மட்டும் முதல் ரூ.10 இலட்சம் வரை விலக்கு அளிக்கப்படும்) | |
| 1 - 5 கோடி | 2.0 |
| 5 - 10 கோடி | 2.25 |
| 10 - 300 கோடி | 2.5 |
| 300 கோடிக்கு மேல் | 3.0 |

189. சிறிய வணிகர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் சலுகைகள் அளிப்பதுடன், ரூ.10 இலட்ச அளவில் மொத்த விற்பனையளவு மட்டத்தில் வெளிப்படையான கணக்கு பராமரிப்பு நடைபெறும் என்ற கண்ணோட்டத்தில் இந்தக் கூடுதல் விற்பனை வரி மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கூடுதல் விற்பனை வரியின் பளுவை நுகர்வோருக்கு மாற்றுவது குறித்த சட்டப் பிரிவை நீக்குவது குறித்தும் கூர்மையாக ஆலோசித்தோம். விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இந்த சமயம், விலைவுயர்விற்கு வழி வகுக்கும் என்ற ஒரு நடவடிக்கையும் ஏற்புடையதல்ல. ஆகவே, இந்தக் கருத்து குறித்து ஆய்வை தள்ளிவைப்பெதன முடிவெடுத்துள்ளோம். இந்தப் புதிய கூடுதல் விற்பனை வரி விகிதங்களும், விற்பனை அளவு மட்டங்களும் 1993 ஏப்ரல் முதல் தேதி முதல் செயலுக்கு வரும்.

*190.* இந்த முக்கியமான வரிச் சீரமைப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக *1985*-ஆம் ஆண்டின் மத்திய உற்பத்தி வரிச் (Excise) சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் விவரங்களுக்கு ஏற்ப விற்பனை வரிச் சட்டத்தில் இரண்டாவது, மூன்றாவது அட்டவணைகளிலுள்ள பொருள்களின் விவரத்தை மாற்றியமைக்கக் கருதியுள்ளோம். இருப்பினும், இந்த அட்டவணைகளிலுள்ள வரி விகிதங்களில் எந்தவித மாற்றமும் இல்லை. இதற்கென அறிவிப்புகள் முறையாக வெளியிடப்படும்.

*191.* வரி விதிப்பு முறையைச் சீரமைத்து எளிதாக்குவதுடன், ஏழை எளிய மக்களின் மீதான வரிச் சுமையைக் குறைப்பதும் எங்களது நடவடிக்கைகளின் அடிப்படை நோக்கமென்பது தெளிவாகத் தெரியும். ஆகவே, வரி ஏய்ப்பைக் கட்டுப் படுத்துவதில் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும். வரி ஏய்ப்பையும், வரி விதிப்பிலிருந்து விடுபடுவதையும் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இந்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக வரி ஏய்ப்பு நிகழக் கூடிய சில பொருள்களை அட்டவணை ஆறில் சேர்க்க முடிவெடுத்துள்ளோம். அட்டவணை ஆறில் சேர்க்கப்டும் பொருள்களும், அவற்றின் மீதான வரி விகிதங்களும் பின்வருமாறு: *1.* காற்றடைக்கப்பட்ட பானங்கள், புட்டியிலுள்ள அல்லது அடைக்கப்பட்ட குளிர்ப் பானங்கள்*8* சதவிகிதம் *2.*ஐஸ்க்ரீம் மற்றும் ஐஸ் புரூட்*12* சதவிகிதம் *3.* ஷாம்பு*16* சதவிகிதம் படிப்படியாக வரி அளவு அதிகரிப்பதைத் தடுக்க, முதல் கட்டத்தில் விதிக்கப்படும் அளவு வரி, இரண்டாவது கட்டத்தில் ஈடு செய்யப்படும்.

*192.* தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தில் முன்பு இருந்த பிரிவு *3(4)*க்கு ஒப்பான பிரிவு, சட்டப்படிச் செல்லும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஆகவே மீண்டும் இந்தப் பிரிவை செயலுக்குக் கொண்டு வர முடிவெடுத்துள்ளோம். இந்தப் பிரிவின் அடிப்படையில் படிவம் XVII-ன் கீழ் இந்த மாநிலத்தில் மூலப் பொருட்கள் வாங்கப்பட்டு, உற்பத்தியான பொருள்கள் அனுப்பு

பொருள் முறையில் (Consignment) வெளியில் விற்பனையாகும்போது, கூடுதலாக இரண்டு சதவிகிதம் மூலப் பொருட்கள் மீது வரி விதிக்கப்படும்.

*193.* *அபராதங்களைச் சீரமைப்பது உட்பட பல்வேறு சீரமைப்புகள், நடைமுறை மாற்றங்கள் குறித்தும் குழு அறிக்கை அளித்துள்ளது.* இந்தப் பரிந்துரைகளை ஆய்வு செய்து பொரும்பாலானவற்றை மார்ச்சு *12, 1993* முதல் நடைமுறைப்படுத்த முடிவெடுத்துள்ளோம். இந்த மாற்றங்களைச் செயல்படுத்தத் தேவையான திருத்தங்களை இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வருவோம்.

*194. 1959* - ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் *சட்டத்தில் மோட்டார் வாகனங்கள் விற்பனை மீது* விதிக்கப்படும் வரி விகிதங்களில் செய்யப்பட்டுள்ள மாற்றங்களின் விளைவாக, மோட்டார் வாகனங்கள் *மீதான* நுழைவு வரி விகிதங்களும் திருத்தியமைக்கப் *படவுள்ளன.* தற்போதுள்ள வரி விகிதங்கள் *பின்வருமாறு:*

| வரிசை எண் | வகைப்பாடு | தற்போதுள்ள வரி விகிதம் *(சதவிகிதத்தில்)* |
|---|---|---|
| *1* | மோட்டார் சீருந்து | *10* |
| *2* | வாடகைச் சீருந்து | *20* |
| *3* | ஒப்பந்தப் பேருந்து | *12* |
| *4* | மோட்டார் வாகன அடிச்சட்டம் | *10* |
| *5* | மோட்டார் வாகன அடிச்சட்டத்தின் மீது கட்டப்பட்ட கூடுகள | *12* |
| *6* | ஆட்டோ ரிக்ஷா | *12* |

| | | |
|---|---|---|
| 7 | மோட்டார் இரு சக்கர வண்டிகள் (பொறிகளின் கொள்ளளவு எவ்வளவாயினும்) | 8 |
| 8. | 1988 - ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்தின்படி லேசான மோட்டார் வாகனங்கள் | 12 |
| 8A. | எல்லா வகையான இயந்திரக் கலப்பைகள் | 7 |
| 9. | பார ஊர்தி, பேருந்து லாரிகள் | 12 |
| 10 | ஈப்புகள் | 12 |
| 11 | மோட்டார் வாகனங்கள் மீது பொருத்தப்பட்ட அல்லது கட்டப்படவுள்ள தொட்டிகள் | 20 |
| 12 | எல்லாவகையான இழுவைகள் | 12 |
| 13 | மேலே 1 முதல் 12 வரை குறிப்பிடப்படாத பிற மோட்டார் வாகனங்கள் | 20 |

195. 1993 மார்ச் 12 முதல் திருத்தியமைக்கப்பட்டுள்ள புதிய விகிதங்கள் பின் வருமாறு:-

| வரிசை எண் | வகைப்பாடு | வரி விகிதம் (சதவிகிதம்) |
|---|---|---|
| 1 | எல்லா வகையான இரண்டு சக்கர, மூன்று சக்கர வண்டிகள், அவற்றின் அடிச்சட்டங்கள், அடிச்சட்டங்களின் மீது கட்டப்படும் கூடுகள் | 9 |
| 2 | எல்லா வகையான மோட்டார் சீருந்துகள், லேசான மோட்டார் வாகனங்கள், பார ஊர்திகள், பேருந்துகள், ஈப்புகள், லாரிகள்/இவ்வகையான வண்டிகளின் அடிச்சட்டங்கள், அடிச்சட்டங்களின் மீது கட்டப்படும் கூடுகள், இவற்றின் எல்லா வகையான இழுவைகள் | 13 |

| | | |
|---|---|---|
| 3 | இயந்திரக் கலப்பைகளும் இழுவைகளும் | 6 |
| 4 | எல்லா வகையான அள்ளுதல், ஏற்றுதல், கொட்டுதல் போன்றவற்றிற்குப் பயன் படுத்தப்படும் பளுவான மண் எடுத்துச் செல்லும் இயந்திரங்கள் சாலை அமைக்கும் உருளைகள் | 9 |
| 5. | மோட்டார் வாகனங்கள் மீது பொருத்தப்பட அல்லது கட்டப்பட உள்ள தொட்டிகள் | 20 |
| 6. | மேலே உள்ள 1 முதல் 5 வரை குறிப்பிடப்படாத பிற மோட்டார் வாகனங்கள் | 20 |

## தொழில் வரி

196. தொழில், வணிகம், பணிகள் மற்றும் வேலைகள் வரி விதிப்பு சம்ப ந்தப்பட்ட அனைத்து விதிகளையும் ஒருங்கிணைக்கும் முறையில் நாம் ஒரு புதிய சட்டத்தினை அமுல்படுத்தியுள்ளோம். அரசியலமைப்பு சட்டத்தின் அடிப்படையில், இந்த வரி விதிக்கப்படுகிறது. இதுபோன்ற தனி சட்டம், கர்நாடகம், மகாராஷ்டிரம் மற்றும் குஜராத் மாநிலங்களில் தற்போது நடைமுறையில் உள்ளது. வரி விதிப்பு அமைப்புகளில் இது ஒரு புதிய வரிவிதிப்பு இல்லை. அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தின்படி, இவ்வரியின் அதிகபட்ச அளவு ஆண்டு ஒன்றுக்கு ரூ.2,500 என உயர்த்தப்பட்டுள்ளது. இந்த திருத்தத்தின் அடிப்படையிலும் தொழில்வரிக்கான அனைத்து விதிகளையும் ஒருங்கிணைக்கும் வகையிலும்தான் நாம் இந்த புதிய சட்டத்தை அமுல் படுத்தியுள்ளோம். புதிய சட்டத்தின் அடிப்படையில் விதிக்கப்படும் இத் தொழில் வரியில் எந்த வித மாற்றங்களும் தற்போது செய்வதற்கில்லை. தமிழ்நாட்டில் இந்த வரி உள்ளாட்சி நிறுவனங்களால் வசூலிக்கப்பட்டு, அந்நிறுவனப் பணிகளுக்கெனவே செலவிடப்பட உள்ளது என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்.

*197.* ஏனைய பிரிவினர்க்கு அளித்ததுபோல, சிறிய வணிகர்களுக்கும் இந்த வரி விகிதத்தில் சலுகைகள் அளிக்க வேண்டுமென பல வணிக அமைப்புகளும் வணிகர்களும் கோரியுள்ளார்கள். இவ்வரி விதிப்பு சம்பந்தப்பட்ட செயல்முறைகள் வணிக அமைப்புகளுடன் விவாதிக்கப்பட்டன. இந்த கலந்துரையாடலின் அடிப்படையில், இச்சட்டத்தின் அட்டவணையின் இனம் 8-ன் கீழ் உள்ள வரி விகிதத்தை மாற்றியமைக்க நாம் முடிவு செய்துள்ளோம்.

தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள வணிகர்கள் கீழ்க்கண்டவாறு வரி விதிப்பிற்கு உள்ளாக்கப்படுவார்கள்.

| | அரையாண்டுக்கான வரிவிகிதம் | |
|---|---|---|
| | குறைந்தபட்சம் ரூ. | அதிகபட்சம் ரூ. |
| ஆண்டொன்றுக்கு மொத்த விற்பனை அளவு ரூ.10 இலட்சத்திற்கு குறைவாக உள்ள பதிவு செய்த வணிகர்கள் | 240 | 360 |
| ஆண்டொன்றுக்கு ரூ.10 இலட்சத்திற்கு மேல் மொத்த விற்பனை அளவு உள்ள பதிவு செய்த வணிகர்கள் | 500 | 840 |

*198.* இச்சட்டத்தின் பிரிவு 19 (1) மற்றும் 21-ன்படி, கணக்கு மற்றும் ஆவணங்களின் ஆய்வு, வளாக சோதனை ஆகியவை செய்ய அதிகாரம் உள்ளது. இந்த அதிகாரம் தவறாக பயன்படுத்தக் கூடாது

என்று கோரிக்கைகள் வந்துள்ளன. பல வணிகர்களுக்கு ஒரே விதமான வரிவிகிதம் என தற்போது உள்ளதால், வரி செலுத்துவதில் நல்ல இணக்கம் இருக்குமேயானால், மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வுகளுக்கான தேவையே இருக்காது. இந்த பிரிவின் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் அப்படியே நடைமுறைப் படுத்தப்பட்டாலும், முதுநிலை அதிகாரிகளால் மட்டுமே உபயோகப்படுத்தப்படும் என இவ்வரசு உறுதி செய்யும்.

*199.* வழக்கறிஞர்கள், ஒரு சில நிவாரணங்களை கோரியிருக்கிறார்கள். கீழ்கண்டவாறு வரி விகிதத்தை மாற்றியமைக்க இவ்வரசு முடிவு செய்துள்ளது.

| | தற்போதைய் விகிதம் அரையாண்டுக்கு | | புதிய விகிதம் அரையாண்டுக்கு | |
|---|---|---|---|---|
| | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| இரண்டு வருடத்திற் குள்ளான வழக்குரை அனுபவம் உள்ளவர்கள் | 50 | 100 | 30 | 90 |
| இரண்டு வரடத்திற்கு மேலும் மற்றும் ஐந்து வருடத்திற்கு கீழ் | 200 | 500 | 90 | 300 |
| 5 முதல் - 10 வருடம் வரை | 750 | 1250 | 300 | 600 |
| 10 வருடம் மற்றும் அதற்கு மேல் | 750 | 1250 | 600 | 900 |

200. ஆயுர்வேதம், ஹோமியோபதி, சித்த மற்றும் யுனானி மருத்துவர்களை பொறுத்தவரையில் சட்டத்தின் அட்டவணை 2 (C) இன்படி தற்போதுள்ள மற்றும் மாற்றியமைக்கப்பட்ட வரி விகிதங்கள் கீழ்கண்டவாறு அமையும்.

| | தற்போதைய் விகிதம் அரையாண்டுக்கு | | புதிய விகிதம் அரையாண்டுக்கு | |
|---|---|---|---|---|
| | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 2 ஆண்டுகளுக் குட்பட்ட மருத்துவ அனுபவம் உடையோர் | 50 | 100 | 30 | 90 |
| 2 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேல் ஆனால் 5 ஆண்டுகளுக்கு குறைவு | 100 | 150 | 90 | 120 |
| 5 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேல் | 200 | 300 | 120 | 210 |

201. இதேபோல் அலோபதி மருத்துவர்களுக்கும் சில நிவாரணங்கள் அளிக்க முடிவு செய்துள்ளோம்.

| | தற்போதைய் விகிதம் அரையாண்டுக்கு | | புதிய விகிதம் அரையாண்டுக்கு | |
|---|---|---|---|---|
| | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 2 ஆண்டுகளுக்குட்பட்ட மருத்துவ அனுபவம் உடையவர்கள் | 100 | 750 | 90 | 270 |
| 2 ஆண்டுகளுக்கு மேல் மற்றும் 5 ஆண்டுகளுக்கு கீழ் | 500 | 1250 | 270 | 540 |
| 5 முதல் 10 ஆண்டுகள் வரை | 750 | 1250 | 540 | 660 |
| 10 ஆண்டுகளும் அதற்கு மேலும் | 750 | 1250 | 660 | 960 |

202. இச்சட்ட அட்டவணையின் ஐந்தாவது இனத்தின்படி இந்தி நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள நிறுவங்களின் அனைத்து இயக்குநர்களும், ஒரு பிரிவாக கொண்டுவரப்பட்டுள்ளார்கள். இயக்குநர்களிடையே, பகுதிநேர மற்றும் முழுநேர இயக்குநர்கள் உள்ளார்கள் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு தொழில் வரி விகிதங்களை கீழ்க்கண்ட தனி விகிதங்களாக மாற்றி அமைக்க நாம் முடிவு செய்துள்ளோம்.

| | தற்போதைய் விகிதம் அரையாண்டுக்கு | | புதிய விகிதம் அரையாண்டுக்கு | |
|---|---|---|---|---|
| | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| பகுதிநேர இயக்குநர்கள் | 1000 | 1250 | 240 | 480 |
| முழுநேர இயக்குநர்கள் | 1000 | 1250 | 960 | 1020 |

203. சட்டத்தின் அட்டவனையின் இனம் 7 (C) யின் படி இளநிலை கலைஞர்கள், உற்பத்தி மேலாளர்கள், உதவி இயக்குநர்கள் ஆகியோர்களுக்கு சில நிவாரணங்கள் அளிக்க முடிவு செய்துள்ளோம். வரி விகிதங்கள் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்படும்.

| | தற்போதைய் விகிதம் அரையாண்டுக்கு | | புதிய விகிதம் அரையாண்டுக்கு | |
|---|---|---|---|---|
| | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| இளநிலை கலைஞர்கள்,<br>உற்பத்தி மேளாலர்கள்,<br>உதவி இயக்குநர்கள்<br>ஆகியோர் | 1000 | 1250 | 300 | 720 |

204. அட்டவணையின் இனம் 14 ல், லாரிகள், சரக்கு வண்டிகள் பேருந்துகள் ஆகியவற்றிற்கான அனுமதி சீட்டு வைத்திருப்போருக்கு, ஒரே வரி விகிதம், நிர்ணயிக்கப்பட்டுள்ளது, இதனை மாற்றி, ஊர்திகளின் எண்ணிக்கையின் அடிப்படையில்

வரிவிதிப்பு அதிகரிக்கும் வகையில் தரப்படுத்தி இதனை மாற்றி அமைக்க வேண்டும் என்பது கோரிக்கை. இந்த கோரிக்கையினை ஏற்க நாம் முடிவு செய்துள்ளோம். வரி விகிதங்கள் கீழ்க் கண்டவாறு மாற்றியமைக்கப்படும்.

| | தற்போதைய் விகிதம் அரையாண்டுக்கு | | புதிய விகிதம் அரையாண்டுக்கு | |
|---|---|---|---|---|
| | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| அனுமதி சீட்டு வைத்திருப்போர் லாரி/சரக்கு வண்டி/ பேருந்து ஒரு ஊர்திக்கு | *1000* | *1250* | *300* | *480* |
| ஒன்றுக்கு மேல் மற்றும் மூன்று ஊர்திக்குள் | *1000* | *1250* | *480* | *720* |
| மூன்று ஊத்திகளுக்கு மேல் | *1000* | *1250* | *720* | *1020* |

*205.* ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகளுக்கு இந்த வரி விதிப்பிலிருந்து முழு விலக்கு அளிக்க வேண்டும் என கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன. இப்பிரச்சனை இந்த அவையிலும் எழுப்பட்டுள்ளது. தொழில்கள், வணிகங்கள் பணிகள் மற்றும் வேலைகள் மீது விதிக்கப்படும் தொழில் வரியானது, பரவலான அடிப்படையில், விதிக்கப்படும் ஒரு சிறிய வரியாகும். மகாராஷ்டிரா, மற்றும் கர்நாடகம் போன்ற மாநிலங்களில் கூட்டாளிகள் வரிவிதிப்பிற்கு உட்படுத்தப்படுகிறார்கள். இந்தக் கோரிக்கையினை தனியாக, விரிவாக ஆராய நாம் தீர்மானித்துள்ளோம். ஆனாலும்,

கூட்டாளிக்குப் பதிலாக, கூட்டு நிறுவனம் இவ்வரி விதிப்பிற்கு உள்ளாக்கப் படவேண்டும் என நாம் முடிவு செய்துள்ளோம். ஒவ்வொரு நிறுவனத்திற்கான ஒரு அரையாண்டிற்கான குறைந்த பட்ச வரி ரூபாய் 840 ஆகவும் அதிகபட்ச வரி ரூபாய் 960 ஆகவும் இருக்கும்.

206. தமிழ்நாடு அடகு வியாபாரச் சட்டம் 1943 கீழ் உரிமம் பெற்ற அனைத்து அடகு வியாபாரிகள் மீதும் இத்தொழில் வரி விதிக்கப்படும். இதற்காக இச்சட்டத்தில் ஒரு புதிய பகுதி சேர்க்கப்படும். ஒரு அரையாண்டிற்கான குறைந்தப்பட்ச வரி ரூபாய் 840 ஆகவும் அதிகபட்ச வரி ரூபாய் 1020 ஆகவும் இருக்கும்.

207. ஒவ்வொரு பிரிவிலும், உச்ச வீதத்தில் அரையாண்டுக்கு, அதிக பட்ச வரியாக ஒரே சீராக ரூபாய் 1020 என நிர்ணயிக்கப்படும்.

208. மேலே குறிப்பிட்டுள்ள, புதிய வரி விகிதங்களின் அனைத்தும் 1.4.92 முதல் அமுல்படுத்தப்படும். இந்த மாற்றங்களை அமுல்படுத்துவதற்கான சட்ட திருத்தங்கள் பேரவையின் இந்தக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும்.

## வேளாண்மை வருமான வரி

209. வேளாண்மை வருமானவரி எங்களது முதல் வரவு செலவுத் திட்ட அறிக்கையில், மலைத் தோட்டப் பயிரல்லாத ஏனைய வேளாண்மைப் பயிர்களிலிருந்து பெறும் வருமானத்திற்கு, வேளாண் வருமான வரிச் சட்டத்தில் வ ரி விலக்கு அளித்தோம் என்பதை அவை உறுப்பினர்கள் நினைவு கூறலாம். மலைத் தோட்டப் பயிர்களிலிருந்து பெறும் வருமானத்திற்கான வரிவிகிதங்களையும் திருத்தியமைத்தோம். இப்பயிர் முறையில் ஈடுபட்டுள்ள சிறிய வேளாளர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் இவ்வரி விதிப்பில் விலக்கு அளிக்கப்படும் வருமான வரம்பு ரூபாய் 22,000 -லிருந்து

ரூபாய் 28,000-ஆக உயர்த்தி அமைக்க முடிவு செய்துள்ளோம். இது 1-4-1993 முதல் நடைமுறைக்கு வரும்.

## மோட்டார் வாகன வரி

210. ஒப்பந்தப் பேருந்துகளின்மீதான மோட்டார் வாகன வரி தற்போது கால் ஆண்டொன்றுக்கு இருக்கை ஒன்றுக்கு ரூபாய் 500 என்ற விகிதத்தில் உள்ளது. இதனை காலாண்டுக்கு இருக்கை ஒன்றுக்கு ரூபாய் 500 என்ற விகிதத்திலிருந்து ரூபாய் 1000 ஆக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. திருத்தி அமைக்கப்பட்ட விகிதம் 1.4.93- ல் இருந்து செயலாக்கப்படும். ஆயினும் அகில இந்திய அளவில் சுற்றுலாப் பயணிகளுக்கான ஒப்பந்தப் பேருந்துகள் மீதான வரி தற்போதைய அளவில் காலாண்டுக்கு இருக்கை ஒன்றுக்கு ரூபாய் 500 ஆகவே இருக்கும்.

நான் இங்கே கோடிட்டுக் காட்டியுள்ள வரி விதிப்புச் செயற்குறிப்புகள் பொதுவாக பெரிய அளவிளான சலுகைகளைத் தெரியப்படுத்துகின்றன. இது நமது வரி விதிப்பு நடைமுறைகளை மேலும் எளிமைப்படுத்திச் சீரமைப்பது குறித்த நமது முயற்சிக்கிணங்க உள்ளது. இதன் மூலம் வரிச்சுமையை உயர்த்துவதற்குப் பதிலாக வரிசெலுத்துவோர் விதிகளைச் சிறப்பாக பின்பற்றச் செய்வதும் வரிவசூலை மேலும் திறம்பட செய்வதுமே எங்கள் நோக்கமாகும். இந்த சீரமைப்பு நடைமுறையின் பொதுவான முக்கியத்துவத்தையும் நாம் அளித்துள்ள பரவலான பல்வகைப்பட்ட வரிநிவாரணச் சலுகைகளையும் இம் மன்றத்தின் உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை.

# முடிவுரை

*211. 1993-94* ஆம் ஆண்டிற்கான இறுதிப் பற்றாக்குறை ரூ.**635.89** கோடி என்று நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளேன். செலவினங்களில் சிக்கனம், அரசு ஆற்றுகின்ற பணிகளுக்குச் சிறந்த வருவாயைப் பெறுதல், ஏழைகளுக்கு நன்மை தரக்கூடியத் திட்டங்களைச் சிறந்த முறையில் இலக்குகள் நிறைவேறச் செய்தல் ஆகியவை தொடர்பாக நாம் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் மூலமாக, நமக்கு ரூபாய் *95* கோடி நிகர சேமிப்பாகக் கிடைக்கும். இதற்குப் பிறகும் நம்மிடம் ரூ.*540.89* கோடி பற்றாக்குறை நிரப்பப்பட முடியாமல் இருக்கும். இங்கு நான் குறிப்பிட்ட வரி விதிப்பு நடவடிக்கைகளின் விளைவாக, ரூ. *15* கோடி வருவாய் இழப்பு ஏற்படும். இதனால் *1992-93* ஆம் ஆண்டின் நிகர இறுதிப்பற்றாக்குறை ரூ. *555.89* கோடியாக இருக்கும். ஆகவே, நிதி நிலைமையைச் சரி செய்வதற்கு நாம் கணிசமான முயற்சியை மேற்கோண்டிருக்கிறோம் என்று குறிப்பிடலாம் என்றாலும், இன்னும்கூட நிதி நிலைமை தொடர்ந்து நெருக்கடியில் இருந்து வருகிறது. இந்த வரவு-செலவு திட்டத்தில் பெரிய அளவில் புதிய வரிச்சுமையைச் சுமத்துவதில் நாம் நிதானம் காட்ட முடிவு செய்துள்ளோம். அதற்குப் பதிலாக, ஏழைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பது, பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவது ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, பெரிய அளவில் வரி நிவாராணச் சலுகைகளை அளித்துள்ளோம். நமது நிதி நிலைமை கடுமையாக இருக்கின்ற நிலையிலும்கூட, நாம் எடுத்துள்ள இந்த நடவடிக்கைகளை இம்மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என்று கருதுகிறேன்.

*212.* வருவாய்ப் பற்றாக்குறை விரிந்து கொண்டே செல்வது நடப்பு ருவாய்களிலிருந்து அதிக அளவில் 'கையிருப்பு இல்லை' (negative balance) என்கின்ற நிலைமை ஏற்பட்டிருப்பது ஆகியவை கவலை அளிக்கக்கூடியனவாகும். இந்த நிலைமையைச் சரிசெய்வதற்கு நம்மால் முடிந்த அனைத்தையும் செய்துள்ளோம். நம்மை

எதிர்ப்பட்டுள்ள பொருளாதாரக் கட்டமைப்பு இடையூறுகளைப் பத்தாம் நிதிக் குழு நீக்கிச் சரிப்படுத்த வேண்டும். பத்தாம் நிதிக் குழுவிடமிருந்து தமிழ் நாட்டிற்கு நிதி வகையில் நீதி கிடைக்க நாம் அயராமல் பாடுபடுவோம்.

*213.* *1993-94* ஆம் ஆண்டில் தமிழ் நாட்டின் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைக்குக் குறைந்தது ரூபாய் *150* கோடியாவது வழங்குமாறு நாம் மத்திய அரசை வலியுறுத்துவோம். *1991-92* ஆம் ஆண்டில் கடலோர எல்லைப் பகுதி மேம்பாட்டிற்காகத் தமிழ் நாட்டிற்கு மத்திய உதவியாக ரூ.*15* கோடி மட்டுமே வழங்கப்பட்டது. இதற்கு *1993-94*ல் மேலும் ஒரு தொகை வழங்குமாறு நாங்கள் மத்திய அரசை வலியுறுத்துவோம். மத்தியத் திட்டக்குழுவும்கூட, சென்னைப் பெரு நகர வளர்ச்சிக்காக ரூ.*15* கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்துள்ளது. சென்னை மாநகர வளர்ச்சிக்காக நாங்கள் மிக அதிக அளவில் செலவு செய்து வருவதால், மத்திய அரசு அளிக்கும் தொகையை மேலும் உயர்த்தி, ரூ.*50* கோடி வழங்குமாறு நாங்கள் கேட்டுக் கொள்வோம். இவ்வாறு கூடுதலாகக் கிடைக்கும் மத்திய அரசின் உதவியைக் கொண்டு, இம்மாநில அரசு இட்டு நிரப்ப முடியாதிருக்கும் பற்றாக்குறையைக் கணிசமான அளவிற்கு நிரப்ப முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

*214.* நான் இப்பொழுது என்னுடைய உரையின் முடிவுப் பகுதிக்கு வந்துள்ளேன். தமிழ் நாட்டை எதிர்கொண்ட கடுமையான அறைகூவல்களைச் சமாளித்து, வளமிக்க வளர்ச்சிப் பாதையில் இம்மாநிலம் மீண்டும் நடைபோடச் செய்வதற்குப் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் அமைந்த அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தால் மட்டுமே முடியும் என மிகப் பெரும் நம்பிக்கையை வைத்துத் தமிழக மக்கள் ஆளும் கட்சிக்கு மிகப் பெரும் அளவில் வாக்களித்து க் கட்சியை வெற்றி பெறச் செய்தார்கள். மக்கள் இவ்வரசின் மீது வைத்துள்ள அளவிறந்த பெரும் நம்பிக்கையை இவ்வரசு முழு அளவில்

காப்பாற்றியுள்ளது. வெளிநாட்டுப் போராளிகளும், தீவிரவாதிகளும் கொடுத்த பெரும் தொல்லையை அறவே ஒழித்ததன் மூலம், மிகப் பெரிய துன்பத்தை நாம் வென்றுள்ளோம். வகுப்புவாத சக்திகள் ஒடுக்கி வைக்கப்பட்டுத் தலைதூக்க ஒட்டாமல் செய்யப்பட்டுள்ளன. இந்தியப் பெருநாட்டிடையே இந்த மாநிலம் அமைதி நல்லிணக்கத்திற்கு ஒரு தனிச் சிறப்புடைய எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. நிதி நிலைமை எந்தக் கணமும் மிக மோசமாகிச் சீர்குலைந்துவிடக்கூடும், வளர்ச்சி தடைப்பட்டு நிற்கும், ஏழைகளுக்கான சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குலைக்கப்பட்டுவிடும் என்று பலவகையிலும் எழுந்துள்ள மிரட்டல் நிலை நீக்கப்பட்டுள்ளது. புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதாவின் சீரிய தலைமையில், தமிழகம் அமைதி ஒற்றுமையின் புகலிடமாகப் பொங்கிப் பெருகும் தன்னம்பிக்கையுடன், புத்துயிர் பெற்ற பொருளாதார வளர்ச்சியும் முன்னேற்றமும் பெற்றுச் சிறந்து நிற்கிறது.

*215.* ஏழைகளுக்கும், வசதி வாய்ப்பற்றவர்களுக்கும், சாதாரண மக்களுக்கும் சிறந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுத் தருவோமென்று கூறிய சூளுரையை நாங்கள் ஒருபோதும் மறக்க மாட்டோம். ஏழைகள், வசதி வாய்ப்பற்றவர்கள் நலனுக்கு முதலிடம் தருமாறு, நமது முதலமைச்சர் அவர்கள், எல்லா மன்றங்களிலும் தயங்காமல் நின்று குரல் எழுப்பியுள்ளார்கள். நாங்கள் மிகக் கடுமையான, மிக மோசமான சூழ்நிலைகளைச் சந்தித்துள்ளோம். ஏழைகளின் வாழ்க்கைத் தரம் படிப்படியாக உயரும் என்று உறுதி அளித்துள்ளோம். தேசிய பொருளாதார நெருக்கடியில் ஏற்படக்கூடும் சோதனைகள், வேதனைகளிலிருந்து நாம் விடுபட்டு முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைத்துள்ளோம் என்பதைக் காட்டுவதே இந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையாகும். மக்களுக்கு எல்லா வழிகளிலும் நன்மை பெற்றுத் தருவதற்குத் தமிழகத்தைப் புதிய உயர்ந்த வளர்ச்சிப் பாதையில் செலுத்த இது விழைகிறது. மிகக் கடுமையான இடையூறுகளை வென்றுள்ள நிலையில், ஆற்றலும்,

எழுச்சியும் ஊட்டுகின்ற நமது பெரும் திறமை வாய்ந்த முதல்வர் அவர்களின் தலைமையில் நாம் முன்னேற்றப் பாதையில் விரைந்து நடைபோடுவோம். விவாதத்தில் சூடு தணியட்டும்; ஒளி பெருகட்டும்.

*216.* இந்த நிதிநிலை அறிக்கையைச் சிறப்பான முறையில் உருவாக்கித் தர, பெருமுயற்சியினை மேற்கொண்டு; பேருதவியையும், ஒத்துழை ப்பையும் நல்கிய நிதித் துறைச் செயலாளர் திரு. ந. நாராயணன் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்து பெரும் பணிகள் பலவற்றையும் ஆற்றிய நிதித் துறை மற்றும் ஏனைய துறைகள் ஆகிய வற்றைச் சார்ந்த அதிகாரிகள், அலுவலாளர்கள் ஆகியோர்க்கும் என் உளங்கனிந்த நன்றியை உவகைப் பெருக்கோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*217. 1993-94* ஆம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையை அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு அவையினர் அனைவரையும் விழைந்து கேட்டுக்கொள்கிறேன்.

**வணக்கம்.**

**இரா. நெடுஞ்செழியன்,**
*நிதி அமைச்சர்.*

சென்னை,

*1993* ஆம் ஆண்டு

*மார்ச் திங்கள் 12 ஆம் நாள்*

*திருவள்ளுவர் ஆண்டு 2024*

*மாசித் திங்கள் 29 ஆம் நாள்.*